# இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 19 சுடர் - 02





**மன்னார் ஞானவைரவர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்**

ஜய வருடம்
மார்கழி - தை

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

December 2014
- January 2015

# ஹவாய் ஆதீன முதல்வர் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளுக்கு கொழும்பில் வரவேற்புபசாரம் (25.01.2015)


சுவாமிகளுக்கு பாத பூசை செய்யப்படுகிறது



புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டி. எம் சுவாமிநாதன் நந்திக் கொடி ஏற்றுகிறார். அருகில் மாமன்ற உப தலைவர் திரு. சி. தனபாலா




மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, அவர்களும் மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களும் சுவாமிகளை கௌரவிக்கும் போது

மாண்புமிகு அமைச்சர் டி. எம் சுவாமிநாதன் சுவாமிகளை கௌரவித்த பின் உரையாற்றுகிறார்.



பிறந்ததினம் கொண்டாடும் இரத்மலானை கொழும்பு விடுதிப் பிள்ளைகளுக்கு சண்முக சுவாமி (ஹவாய்) பிறந்த தின பரிசில்களை வழங்குகிறார்.



மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்.



ஒரு மாணவனுக்கு சுவாமிகள் ஆசீர்வாதம் செய்கிறார். அருகில் திருமதி. அ. கயிலாசபிள்ளை



சபையினர்

உ
சிவமயம்

தீபம் – 19

# இந்து ஒளி

சுடர் – 02

ஜய வருடம் தைத் திங்கள் 18 ஆம் நாள் (01.02.2015)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவும் நக்காவெனவும் நம்பாவென நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே!

### திருவாசகம்

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையை
புல்லிப் புணர்வ தென்று சொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே!

### திருவிசைப்பா

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம் நிற் காணப்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல் பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில் கொண்டாயே!

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்தி ரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசை யனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகி
சோதியா யுணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகி பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும்தில்லை பொதுநடம் போற்றிபோற்றி!

திருச்சிற்றம்பலம்

## மக்கள் சேவைக்காக அனைவரும் ஒன்றிணைவோம்!

இந்த நாட்டின் இந்து மன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றம் இம்மாதம் தனது **அறுபதாவது ஆண்டில்** காலடி எடுத்து வைக்கிறது. இந்த ஆண்டில் வைரவிழாவையொட்டி விழாக்களும் மற்றும் கொண்டாட்டங்களும் நடத்துவது எமது நோக்கமல்ல. வேதனைகளாலும் சோதனைகளாலும் வாட்டி வதைக்கப்பட்ட சகோதர சகோதரிகளுக்கு அபயக்கரம் நீட்டி தேவையான மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் புரிந்து **இறைபணி நிற்கவே** விழைகின்றோம். இதற்காக இந்து மக்களாகிய உங்கள் அனுசரணையும் உதவியும் மேலும் தேவையாக இருப்பதால் இந்த உன்னத சேவையில் அனைவரும் எங்களுடன் இணைந்து செயற்படுதல் இன்றியமையாததாகும்.

எமது மக்களுக்கு ஆன்மீக ஈடேற்றம் தரும் திட்டங்களையும் எமது உடன் பிறப்புக்களின் கண்ணீரைத் துடைக்கும் மனிதாபிமானப் பணிகளையும் மேலெடுத்துச் செல்லவே விரும்புகிறோம். அகில இலங்கை இந்து மாமன்றம் இந்தச் செயற்பாடுகளை மேலும் வெற்றிகரமாக அமைத்துக் கொள்ளும் வகையில் இந்து மக்களாகிய நீங்களும் நிதியுதவி ஊடாகவோ அல்லது தன்னார்வத் தொண்டு மூலமாகவோ பங்களிப்பை வழங்கலாம். அதாவது எங்களுடன் சேர்ந்து பல்வேறு சேவைகளை ஆற்றுவதற்கு நீங்கள் முன்வரலாம்.

தன்னார்வத்தொண்டுமூலமாக எவ்வாறான பங்களிப்பை வழங்கலாம் என நீங்கள் சிந்திக்கக் கூடும். இந்து மாமன்றத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டுவரும் **"சிவதொண்டர் அணி"** யில் இணைந்து அதனூடாகவும் பல்வேறு சேவைக்ளை உங்களால் ஆற்ற முடியும். அல்லது மாமன்றத்தினால் செயற்படுத்தப்பட்டு வரும் சமூகநலப் பணிகளிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். இந்நாட்டில் இன்னும் சைவவித்தகர்களை உருவாக்க விரும்புகிறோம். அப்பயிற்சியில் சேர இளம் தலைமுறையினரை உற்சாகப்படுத்துங்கள்.

இதற்கும் மேலாக எழுத்தாற்றல் உள்ளவர்கள் சமய ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களைப் படைப்பதன் மூலம் தங்களது பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும். அதாவது இந்து மாமன்றம் இருமாதங்களுக்கொருமுறை வெளியிட்டுவரும் ஆன்மீக சஞ்சிகையான **'இந்து ஒளி'** இதழில் அத்தகைய எழுத்துப் படைப்புக்களை பிரசுரிப்பதன் ஊடாக இவர்களது சேவை பெரிதும் போற்றக்கூடியதாக இருக்கும்.

இந்து மாமன்றம் ஆற்றிவரும் பல்வேறு சேவைகளைப்பற்றி நன்கு அறிந்து வைத்துள்ள நீங்கள் இவை தொடர்பாக ஏனையோரிடமும் எடுத்துக் கூறுவதன் ஊடாகவும் அவர்களையும் எங்களுடன் இணைத்துக் கொள்ளமுடியும் என கருதுகிறோம். உங்களது இத்தகைய செயற்பாடு மூலம் இந்து மாமன்றத்தின் சேவைகளுக்கு மேலும் பலர் ஊக்குவிக்கப்பட்டு அவர்களது பங்களிப்பைத் தரக்கூடியதாகவும் இருக்கும்.

கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் நமது நாட்டில் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தத்தினால் உயிர் நீத்த மக்களுக்காக 2005 ஜனவரி முதலாம் திகதியன்று இந்து மாமன்றத்தினால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அஞ்சலி நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அப்போதிருந்த கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் கூறிய பின்வரும் கருத்தை மேற்கோளாகக் கொண்டு எமது தீர்மானத்திற்கு வருகிறோம்.

"இந்தக் கொடுமையான அனர்த்தத்தின் பின்னும் இறைவன் எம்மை இவ்வுலகில் வாழ விட்டிருக்கிறான் என்றால் அது அத்தகைய கொடுமையான அனர்த்தத்தினால் பாதிப்படைந்துள்ள எமது சகோதர சகோதரிகளுக்கு உதவி புரிவதற்கேயாகும்."

பத்து வருடங்கள் நிறைவடைந்த பின்னரும் வணக்கத்திற்குரிய சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்களின் ஒளிரும் வார்த்தைகள் எங்கள் மனதை தூய்மைப்படுத்துவதுடன் எமது சகோதர சகோதரிகளுக்காக எங்கள் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் எம்மனதைத் தூண்டி **"இறைபணி நிற்க"** என்ற இந்து மாமன்றத்தின் குறிக்கோளை அடைய வழிவகுத்து நிற்கிறது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

**அடுத்த சுடர்**

ஜய வருடம் மாசி – பங்குனி

வாழ்த்து

அறனொடு அன்பும் வாழ்க அகிலமும் செழித்து வாழ்க
மறையவர் குழாத்தினோடு அடியவர் குழாமும் வாழ்க
கறைமிடற் றண்ணலார் தன் கருணையு மருளுமோங்கி
இறையருள் தன்னா லெல்லா உயிர்களும் நீடுவாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
மன்னார் ஞானவைரவர் கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

**ஜய வருடம் மார்கழி - தை (01.02.2015)**



ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Publication of**

**HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS**

**Mannar Gnana Vairavar Temple Maha Kumbabiseha Special Issue - 01.02.2015**



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**

## ஹவாய் சைவ ஆதீன முதல்வர்

# சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் இலங்கை வருகை









அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் கடந்த ஜனவரி மாதம் ஆன்மிக யாத்திரையாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்து மாமுனிவர் எனப் போற்றப்படும் சிவயோகர் சுவாமிகளின் சீடரான சிவாய சுப்பிரமுனிய சுவாமி களால் நிறுவப்பட்டதுதான் அமெரிக்கா ஹவாய் மாநிலத்திலுள்ள சைவ ஆதீனம். சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர் தான் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் இப்போது ஹவாய் சைவஆதீனத்தின் முதல்வராகவிருந்து இறைபணி யாற்றி வருகிறார்.

இலங்கை மண்ணில் கால்பதித்துள்ள சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளை அகில இலங்கை இந்து மாமன்றம் பக்தி பூர்வமாகவும், மகிழ்ச்சியுடனும் வரவேற்று போற்றித்துதிக்கிறது.

கடந்த மாதம் (ஜனவரி) 25ஆம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்து மாமன்றத்தின் ஒழுங்கில் வரவேற்புபசாரமொன்று நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் இந்த வைபவத்திற்கு தலைமை தாங்கினார்.

மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களும், மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்களும் சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தார்கள். இந்த நிகழ்வில் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும், இந்து சமய விவகார அமைச்சர் கௌரவ டி. எம். சுவாமிநாதன் அவர்களும் கலந்து கொண்டு சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார். யோகர் சுவாமி அறநிதியம், விவேகானந்த சபை போன்ற சமய நிறுவனங்களும் சுவாமிகளது வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டன.

அருளுரை வழங்கிய சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் "இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். 1949 ஆம் ஆண்டில் எனது குருநாதரான சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கை வந்து யோகர் சுவாமிகளைத் தரிசித்திருந்தார். தூரதரிசனமாக எதிர் காலத்தைப் பார்க்கக்கூடிய நிலையிலிருந்த ஒரு மகானாக யோகர் சுவாமிகள் திகழ்ந்தார். கடைசியாக 1983 ஆம் ஆண்டில் இலங்கை வந்திருந்தேன். இங்கிருந்து புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை அடிக்கடி சந்தித்து வருகின்றேன்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகருக்கு அருகிலுள்ள முருகன் கோயிலில் அங்குள்ள புலம்பெயர்ந்த இலங்கை மக்கள் நல்லூர், கதிர்காம உற்சவங்களை நடத்தி வருகின்றார்கள். பொதுவாக ஆதீனம் அமைக்கப்பட்ட பின்னர்தான் அங்கு மக்கள் கூடுவார்கள். ஆனால் அமெரிக்காவில் மக்கள் கூடிய பின்னர்தான் ஆதீனம் அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய இளைய தலைமுறையினர் சமயத்தை கற்பது குறைவாகவே இருக்கிறது. திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றில் ஆர்வம் செல்வதால் ஒரு சவாலாக தூய சைவ சமயத்தை கற்பிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது." என்று தெரிவித்தார்.

மாமன்றத்தினால் பராமரிக்கப்படும் இரத்மலானை சக்தி இல்லம் விடுதிப் பிள்ளைகளது பிறந்தநாள் வைபவமும் இந்த நிகழ்வின்போது சிறப்பம்சமாக இடம்பெற்றது. பிறந்ததினத்தைக் கொண்டாடிய அனைத்துப் பிள்ளைகளுக்கும் மாமன்றத்தின் பரிசுப்பொருட்கள் சுவாமிகளின் திருக்கரத்தால் வழங்கப்பட்டன.

மாமன்றப் பொதுச் செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

கடந்த மாதம் 31ஆம் திகதி யன்று மாலை யாழ் மண்ணிலுள்ள கோண்டாவில் சிவபூமி பாடசாலை மண்டபத்தில் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகளது தரிசன நிகழ்வு இடம்பெற்றது.

அமெரிக்க ஹவாய் ஆதீனத்தை சேர்ந்தவரும் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடருமான ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தலைமையில் இந்த ஆன்மீக நிகழ்வு நடந்தேறியது.



# ஆன்மீகச்சுடரின்

## அருள் மடல்



# உயிர்களை நேசிக்கும் உன்னத விவசாயத் தொழில்

தைத்திங்கள் மலர்ந்துவிட்டது. "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்று சொல்வார்கள். தைமாதப் பிறப்பு நாளில் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்துப் போற்றித் துதிப்பதுடன், அதனை ஒரு பெருவிழாவாகக் கொண்டாடுவது இந்து மக்களின் பாரம்பரிய வழக்கமாக இருந்து வருகிறது.

இந்துப் பண்பாட்டில் பொங்கல் விழா முதன்மையானது. இறைவனுக்கும், பிறர்க்கு உணவு வழங்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து வழிபாடு செய்யும் நன்னாளே பொங்கல் திருநாளாகும். மனித வாழ்வில் மண்ணில் வியர்வை சிந்தி பிறர் உணவு உண்ண வழி செய்யும் விவசாயி மதிப்புக்குரியவர். விவசாயிகளை உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்க வேண்டும் என்ற பண்பு பல்லாயிரம் ஆண்டுகளாக நிலவி வந்துள்ளது. எத்தொழிலைச் செய்பவரும் விவசாயிகளுடன் நன்றியாக இருத்தல் அவசியம் என்பதனை நாம் உணர வேண்டும்.

திருவள்ளுவர் தனது திருக்குறளில்;

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல்பவர்"*

என இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவு படுத்தினார். விவசாயியானவன் இயற்கையின் பேருதவியோடு பிறரது இடரைக் களைபவன்.



உலகில் விவசாயிகள் உயர்ந்த நிலையில் வாழ்கிறார்கள். மேலை நாடுகளில் விவசாயம் என்பது மிகத் தரமான தொழிலாக கருதப்படுகிறது. விவசாயிகளுக்கு எண்ணிறைந்த விருதுகள் வழங்குகிறார்கள். விவசாயம் தொடர்பாக ஏராளமான பல்கலைக்கழகங்கள் சிறப்பாக இயங்குகின்றன. மேலைநாட்டு விவசாயிகளும் பல்கலைக்கழகமும் நிறைந்த தொடர்பாடலோடு செயற்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்குரிய சமூக அந்தஸ்து மிக உயர்வாக காணப்படுகிறது. எம்மண்ணில் இன்று விவசாயம் செய்பவர்கள் அருகி வருகிறார்கள். விவசாயி என்றால் தரம் குறைந்த ஒன்றாக கருதிவிட்டார்கள். எங்கள் சந்ததியை வாழவைத்த முன்னோர்கள் அனைவரும் விவசாயிகளாக உள்ளார்கள். எத்தொழிலைச் செய்பவரும் தனது குடும்பத்துக்கு வேண்டிய உணவை தாமே உற்பத்தி செய்ய வேண்டிய காலம் ஒன்று இருந்தது. இன்று பொன்விளையும் பூமியாக இருந்த மண் நேசிக்கப்படாமல் இருப்பது கவலை தருகிறது.

வேகமாக வளர்ந்த ஜப்பான் நாட்டில் வீட்டுக் கூரைகளில்கூட கொடி மரங்களை உண்டாக்கி பயன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். மாடி வீடுகளில் கூட சாடிகளில் தாவர வளர்ப்பில் ஈடுபடுகிறார்கள். எங்கள் தலைமுறை வேலையில்லை வேலையில்லை என்று வீண்பொழுது போக்குகிறார்கள். நிலங்கள் பல பயனற்ற தரிசு நிலங்களாக காட்சியளிக்கின்றன. அன்று ஆறில்லாத ஊரில் குளங்களையும், கேணிகளையும், கிணறுகளையும், துரவுகளையும் உருவாக்கி தம் தோளின் வலிமையினால் வளம் நிறைந்த பூமியாக எம்முன்னோர்கள் பாதுகாத்தார்கள். விவசாயியின் வீடு கற்பக தருவாக விளங்கியது. வருடம் முழுவதும் உண்பதற்கு தாராளமான உணவு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இன்று எம்மண்ணில் விவசாயம் விபரீதமாகிவிட்டது. எலுமிச்சம்பழம் தொடக்கம் தேங்காய் வரை பிறமாவட்டங்களில் இருந்து வருகிறது. வீட்டு வளவுகளில் வாழை மரம் நாட்டி தினமும் சுகாதாரமாக இலையில் உண்டு மகிழ்ந்த மக்கள் இன்று பிளாஸ்ரிக் பாத்திரத்திலும், உலோகத் தட்டுகளிலும், கடதாசித் தட்டுகளிலும் இரசாயன தாக்கத்தோடு உண்கிறார்கள்.

இயற்கை எமக்கு தந்த வாய்ப்புக்களை தொலைத்து விட்டு தேடுகிறோம். இந்த தைத்திங்களிலே எம்மண்ணை பசுமைப்படுத்தி உண்ணும் உணவில் தன்நிறைவைக் காண்பதற்கான வழியை அனைவரும் ஒன்றுபட்டு சந்திக்க முற்படுவோம். உடலால் உழைப்போம், உணர்வால் எம்மண்ணை கட்டி எழுப்புவோம், எதற்கும் உதவும் விவசாயத்தை மதித்து மலர்ச்சி காண முயல்வோம்.

மலர்ந்திருக்கும் இந்த தைத்திங்களிலே மற்றுமொரு சிறப்பு நிகழ்வையும் சந்திக்கிறோம். மகிமைபெற்ற சிவத்தலமான திருக்கேதீஸ்வரத்தை தன்னகத்தே கொண்டு பெருமையுடன் திகழும் மன்னார் பூமியின் பெரியகடைப் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வைரவப் பெருமானுடைய ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இராஜகோபுரமும் அமையப் பெற்றுள்ள நிலையில் இந்து மக்கள் கும்பாபிஷேகப் பெருவிழாவை காணுகிறார்கள்.

இந்த வைரவப் பெருமான் ஆலயத்திலே புனருத்தாரணப் பணிகளைச் செய்து, நல்லமுறையில் பரிபாலனப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் ஆலய அறங்காவலர் மற்றும் தொண்டர்கள், சிவாச்சாரியப் பெருமக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களை சொல்வதுடன், ஆலயம் மேலும் சிறப்பாக வளர்ச்சிபெற இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ தொண்டுநாதன்

தீபம் – 19 சுடர் – 02

# சிவபூமி மன்னார் பெரியகடை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான

# மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியில் அமைந்துள்ளது மன்னார் மாவட்டம். வரலாற்றுச் சிறப்புக்குரிய பாடல்பெற்ற சிவத்தலமான திருக்கேதீஸ்வரத்தை தன்னகத்தே கொண்டு பெருமையுடன் திகழும் மன்னார் சிவபூமியிலுள்ள பெரியகடைப் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஞானவைரவப் பெருமான் கிராமத்து காவல் தெய்வமாக நின்று பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த ஞானவைரவப் பெருமான் ஆலயம் 1988ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றது. சிறு ஆலயமாக அமைக்கப்பட்டு பூசை, வழிபாடுகள் இடம் பெற்று வந்தன. அப்போது, இந்த ஆலயம் அமைந்துள்ள இடம் அரச பரிபாலனத்துக்கு சொந்தமானது என்றும், அதன் காரணமாக ஆலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றும்படியும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அதற்கான நீதிமன்ற உத்தரவு கிடைக்கப்பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

எனினும் அடியார்களின் வேண்டுதலும், ஞான வைரவப் பெருமானின் திருவருளும் காரணமாக ஆலயம் அகற்றப்படாமலேயே, அவ்விடத்தில் நிலைபெற்று புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு, இப்போது மகா கும்பாபிஷேகம் காணும் வகையில் சிறப்புப் பெற்றுள்ளது.

இங்கு 1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள் சிறப்புப்பெற்று வந்தன. நாட்டின் போர்க்காலச் சூழ்நிலைகளினால் திருக்கேதீஸ்வர ஆலயம் பூசை வழிபாடுகள் இன்றி மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் இந்த ஞானவைரவர் ஆலயத்திலேயே அடியார்களது வழிபாடுகள் இடம்பெற்று வந்தன. சிவராத்திரி நாளில் இங்கு நான்கு சாம பூசைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் தங்களது கலை நிகழ்ச்சிகளை வழங்குவதற்கும் மேடையமைத்துக் கொடுக்கப்பட்டன.

மன்னார் பகுதியில் பல இந்து அமைப்புக்களை உருவாக்கிய பெருமையும் ஞானவைரவர் ஆலயத்திற்கு உண்டு. மன்னாரிலுள்ள அரச திணைக்களங்கள் நவராத்திரி பூசைகளை தங்கள் உபயமாக இந்த ஆலயத்திலேயே முதன்முதலாக ஆரம்பித்து நடத்தி வந்துள்ளன.

இந்த ஆலயத்தில் ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பண்ணிசை வகுப்புக்கள், யோகாசன வகுப்புக்கள் என்பனவும் கிரமமாக நடத்தப்பட்டு வருகின்றன. தொண்டர் சபையொன்றும் அமைக்கப்பட்டு அதனூடாக ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை, சிரமதானப் பணிகள், சமய சமூகநல சேவைகள் என பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலய திருப்பணி வேலைகளின் மற்றுமொரு சிறப்பம்சமாக மூன்று தள இராஜகோபுரமொன்றும் அமைக்கப்பட்டு மன்னார் நகரப்பகுதியில் அருள்மிகு ஞானவைரவப் பெருமான் ஆலயம் எழில்மிகு தோற்றத்துடன் காணப்படுவதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

ஆலய பரிபாலனப் பணியில் அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரான வைத்திய கலாநிதி ஆ. அரசக்கோன் தலைவராகவும், இந்து மாமன்ற உப தலைவரான வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் செயலாளராகவும் பதவி நிலையிலிருந்து ஆலயத்தின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பணியாற்றி வருகிறார்கள்.

பல இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் பலவித சவால்கள் நிறைந்த வெற்றிப் பயணத்தில் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று வரும் மன்னார் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம் இன்று (01.02.2015) மகா கும்பாபிஷேகப் பெருவிழா காணுகிறது.

இதனையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" மகா கும்பாபிஷேக சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

## மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களது

# வாழ்த்துச் செய்தி



கிராமிய காவல் தெய்வமாகப் போற்றப்படும் சிறப்பிற்குரியவர் வைரவப் பெருமான். இந்த வழிபாடானது கிராம மட்டத்திற்குரியதாக சொல்லப்பட்டாலும் அது சிவ வழிபாட்டுடன் இணைந்த வகையில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது.

மன்னார் நகரத்தில் வைரவப் பெருமானுக்கு சகல ஆன்மீகச் சிறப்புக்களையும் கொண்டதான பெரும் ஆலயமொன்று அமைக்கப்பட்டிருப்பது மன்னார் வாழ் இந்து மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் சிறு ஆலயமாக ஸ்தாபிக்கப்பட்டு மன்னார் வாழ் இந்து மக்களது வழிபாட்டிற்குரியதாக இருந்து வந்த இந்த ஆலயத்தை வளர்ச்சியடையச் செய்வதில் ஆலய பரிபாலன சபையினருடன் இணைந்து மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் பெரும் பங்களிப்பைச் செய்து வந்ததை நாம் அறிவோம்.

வரலாற்றுப் பெருமைக்குரிய திருக்கேதீஸ்வர ஆலயம் நாட்டு நிலைமைகளினால் மூடப்பட்டிருந்தவேளையில் இந்து மக்களின் இறைவழிபாட்டுக்குரியதாக இந்த வைரவப் பெருமான் ஆலயம் திருவருட் சிறப்பைப் பெற்றிருந்தமை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகச் சொல்லலாம்.

படிப்படியான வளர்ச்சியுடன், புனருத்தாரணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பெரும் இராஜகோபுரம் மற்றும் கலைச் சிற்பவேலைப்பாடுகளுடன் அமைந்ததாக உருவமைக்கப்பட்ட மன்னார் ஞானவைரவர் ஆலயம் கும்பாபிஷேகப் பெருவிழா காணுவது மன்னார் நகர் வாழ் இந்து மக்களுக்கு மட்டுமல்ல மன்னார் மாவட்ட மக்களுக்கும் ஆன்மீக அருள்வழங்கும் அற்புத நிகழ்வாகவே அமைந்துள்ளது.

இந்த மகா கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக சஞ்சிகையான "இந்து ஒளி"யை, கும்பாபிஷேக சிறப்பிதழாக வெளியிட்டு வைப்பதில் மாமன்றம் பெரிதும் மகிழ்வடைகிறது.

கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்பாக அமைவதில் பெரும் பங்களிப்புச் செய்து வரும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், ஆலய பரிபாலன சபையினர், ஆலய சிவாச்சாரியார்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரினதும் திருவருட்பணியைப் பாராட்டுவதுடன், அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

## சிவபூமி மன்னார் பெரியகடை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபை செயலாளர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் அவர்களது

# வாழ்த்துச் செய்தி



உண்மை அறிவு இன்பமே உருவாகி பாலில் நெய்யாக கரைந்துறையும் இறைவன், தன்னை மனத்தால் சிந்தித்து வாக்கால் வாழ்த்தி காயத்தால் வணங்கி வழிபடுதல் பொருட்டு எண்ணற்ற திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள் நிலையங்களே ஆலயம் எனப்படும்.

அவ்வகையில் ஸ்ரீ மத் தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற இலங்காபுரியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத் திருத்தலத்தை தன்னகத்தே கொண்டதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டு இயற்கை எழில் பொங்கும் மன்னார் மாநகரின் பெரியகடை எனும் திவ்யஷேத்திரத்தில் அமர்ந்திருந்து அடியார்கள் வேண்டும் வரங்களை வாரி வழங்கி அருளாட்சி புரியும் காவல் தெய்வமாகிய வைரவப்பெருமானுக்கும் பிள்ளையார், மாரி அம்மன், வள்ளி தெய்வானை சமேத திருமுருகன், எழுந்தருளி வைரவர், ஆதி வைரவர், நவக்கிரகம் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் திரி (3) தள இராஜ கோபுரத்தோடு கூடிய புதிய ஆலயத்திற்கு ஜய வருடம் தைத் திங்கள் 18ஆம் நாள் (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை வரும் சுப முகூர்த்த சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வைரவப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

இவ் வேளையில் எமது திருப்பணிக்கு தாராளமாக உதவி செய்த அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆன்மீக சஞ்சிகையான "இந்து ஒளி" சிறப்பிதழ் ஒன்றை இக் கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடுவதையிட்டு மகிழ்கிறோம். மாமன்றத்தின் ஆதரவுக்கு பரிபாலன சபையின் சார்பாக எமது நன்றி.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# காவற் தெய்வமாகப் போற்றப்படும் வைரவக் கடவுள்

(அமரர்) சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்,
பிரதம சிவாச்சாரியார் – ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

வைரவ மூர்த்தம் சிவாம்ச மூர்த்தமாகும். இம்மூர்த்தம் சம்ஹார ருத்திரர் எனவும் கூறப்படும். வைரவக் கடவுள் சத்துவ, தாமச குணத்தவர். உடற்பற்றை விட்டபடியால் வைரவர் நிர்வாண கோலத்துடன் உள்ளார். வினை நீங்கும் போது உடற்பற்றும் நீங்குகிறது. அவற்றை அழிக்கும் கோலத்தைக் காட்டுவதே நிர்வாண வடிவம் ஆகும். இவ்வடிவமானது கோரரூபங்கொண்ட வடிவமாக உள்ளமையை நாம் நோக்கலாம்.

### வைரவ கோயில்

ஆலயங்களில் வடக்குக்கும் வடகிழக்கிற்கும் இடைப்பட்ட இடத்தில் பரிவார மூர்த்தியாக வைரவக் கடவுள் எழுந்தருளி இருந்து அருள்பாலிப்பதை நாம் அறிவோம். அங்கு வைரவ விக்கிரகம் அல்லது திரிசூலம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். அவரே ஆலயத்தின் காவலர் ஆனமையின் அவர் ஷேத்திரபாலர் என அழைக்கப்படுகிறார். காசியில் கால வைரவராகவும் சிதம்பரத்தில் சுவர்ண வைரவராகவும் சிறப்பாக காட்சியளிக்கிறார். எமது நாட்டில் பெரும்பாலும் ஞானவைரவ வழிபாடு எங்கும் உள்ளது. சிதம்பரத்து பொன்னம்பலத்தின் பெயரைத் தாங்கிச் சிவாகம முறைகளுக்கமைய பெருங்கோவிலாகக் கொழும்பில் உள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் க்ஷேத்திரபாலருக்கு அருகே சுவர்ண வைரவர் அம்பாளுடன் அருட்கோலங் கொண்டு பரிவார மூர்த்தியாக உள்ளமையை இங்கு காணலாம். தனி வைரவ ஆலயங்களாக ஞான வைரவர், நரசிங்க வைரவர் போன்ற ஆலயங்கள் இலங்கையில் உள்ளன.

### காவற் தெய்வம்

வைரவ வழிபாடு இலங்கையில் இயற்கையோடிணைந்த ஓர் வழிபாடாக உள்ளமையையும் நாம் காணமுடியும். ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவாறு அவர் கிராம பாலகர், ஊர் பாதுகாவலர். ஆகவே பிள்ளையார் கோவில்களைப் போல வைரவக்கோவில்களும் கிராமங்கள் தோறும் உள்ளன. இலந்தையடி வைரவர், புளியடி வைரவர், ஆலடி வைரவர், காட்டு வைரவர் என்று மரங்களுக்கு மத்தியில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு சகலரும் இந்தக் காவற் தெய்வத்தை வழிபடும் வழக்கம் இன்றும் எம்மத்தியில் உள்ளது.

### வைரவ வழிபாடு

ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும்போது வைரவ வழிபாடுகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. கிராமசாந்தியில் எட்டுத்திக்குப் பாலகர்களையும் வைரவரையும் சாந்திப்படுத்த மந்திர பூர்வமாக பூசைகளுடன் நீற்றுப்பூசணி வெட்டுதல், வடை மாலை சாத்துதல், சாதம், வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம் பழம் போன்றவற்றை அர்ப்பணித்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இதேபோன்றே வாஸ்து சாந்தியின்போதும் வைரவ வழிபாடுகள் செய்யப்படுகின்றன. கோயிற் கட்டட அத்திவாரம், உற்சவ ஆரம்பம், புதிய தேர் அமைப்பு, தேர்த்திருவிழா, உற்சவ முடிவு, புதிய வீடு கட்ட அத்திவாரம் போடுதல், வீடு கட்டுதல் போன்ற பல்வேறு காலங்களிலும் வைரவருக்கு உரிய முறையிலான வழிபாடுகள் செய்யப்பட்டு அவரது அனுக்கிரகத்தைப் பெற்ற பின்பே கிரியைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

### நித்திய பூசை

வைரவக் கடவுளுக்கு காலையிலும் மாலையிலும் பூசைகள் உள்ளன. அர்த்த ஜாமப் பூசையிலும் அதிகாலைப் பூசையிலும் வைரவ சுவாமிக்கு விசேட பூசைகள் நிகழ்கின்றன. அர்த்தஜாமப் பூசையிலேயே எல்லா ஆலயங்களும் பூட்டப்பட்டு ஆலயத் திறப்புக்கள் வைரவரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அப்போது சாதம், வடை, வெற்றிலை, பாக்கு, பழம் என்பன நைவேதிக்கப்பட்டு கோயிலையும், ஊரையும் பாதுகாத்தருளும்படி வேண்டப்படுகின்றது. இதனை முத்திரா தண்ட வழிபாடு எனவும் அழைப்பர். முத்திரை திறப்பு என்பதைக் கவசம் எனவும் கொள்ளலாம். காலையில் கோயில் திறக்கப்படும்போது பசும்பால், தாம்பூலம், பழம் என்பன நைவேதிக்கப்படுகின்றன. அவரது அனுமதியுடன் திறப்புக்களை எடுத்து முதலில் பள்ளியறை திறக்கப்படுகிறது. இவ்வேளையில் மூர்த்தி, சாந்நித்தியம் பெறுகின்றதெனலாம்.

### விரத நாட்கள்

சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தைமாத முதல் செவ்வாய் முதல் அதாவது ஒவ்வொரு செவ்வாயும் ஆகிய தினங்கள் வைரவ சுவாமிக்கான விரத நாட்களாகும். இக்காலங்களில் முறைப்படி விரதமிருந்து சிவப்புப்பட்டு, சிவப்பு மாலை, வடை மாலை என்பவற்றைச் சாத்தி வழிபாடுகள் செய்து விரதத்தை நிறைவேற்றலாம்.

### வைரவ பொங்கல்

ஏலவே கூறிய விரத நாட்களிலும், மாதப்பிறப்பு, வெள்ளிக் கிழமைகளிலும், விசேடமாக தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு தினங்களிலும் வைரவ சுவாமிக்கு சிறப்பாகப் பொங்கல் படைக்கப்படுகின்றது. பொங்கல் படையலுடன் பெருமடை போடப்படுவது வழக்கம். வாழைக்குலை, பலாப்பழம், மாம்பழம், எலுமிச்சம்பழம், தாம்பூலம், வடை, முறுக்கு, அப்பம் முதலான பல்வேறு நைவேதனப் பொருட்கள் மடையில் சிறப்பாக இடம் பெறுவது ஓர் சிறப்பாகும்.

புராண நோக்கு

முன்னொருகால் தேவரும், முனிவரும் திருமாலிடமும் திசை முகனிடமும் கடவுள் யார் என்பதைக் கூறும்படி விண்ணப்பித்தனர். அவர்கள் தாமே முழு முதற் கடவுள் எனக் கூறினர். அவ்வேளையில் வேதமும், பிரணவமும் நீங்கள் தர்க்கிக்க வேண்டாம். சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுள் எனக் கூறினர். அவர்களது மமதையை அடக்கச் சிவபிரான் ஜோதி வடிவெடுத்து அதனுள்ளே சிவபார்வதி வடிவத்தைக் காட்டினார். அதனைக் கண்டு விஷ்ணு வணங்கினார். ஆனால் சிவபெருமானைப் போலவே எனக்கும் ஐந்து தலைகள் உள்ளன எனத் தனது உச்சிச் சிரசால் சிவபிரானை பிரமா இகழ்ந்தார். சிவபிரான் முன் ஒருக்கால் தாருகனைக் கொன்ற சக்தியின் கோபத் தீ குழந்தையுருக்கொண்டது. காளி அதை வளர்த்தாள். அதைச் சிவன் இருதயத்தில் ஒடுக்கி வைத்திருந்தார். அந்தச் சக்தியை வைரவ மூர்த்தியாக இதயத்திலிருந்து தோற்றுவித்தார். இந்த மூர்த்தி சிவமூர்த்தியின் சகல அம்சங்களையும் கொண்டு விளங்கிற்று. சிவபிரானின் ஆஞ்ஞைப்படி வைரவர் நீல நிறத் திருமேனியுடன் சூலம், பாசம், பரசு, உடுக்கு என்பவற்றைக் கரங்களிலேந்தி மூன்று கண்களுடனும் இரத்த நிறச்சுவாலை போன்ற சடையுடனும் உக்கிரரூபியாகி நிர்வாண கோலத்துடன் காட்சி கொடுத்தார். வேத வடிவான நாயைத் தமது வாகனமாகக் கொண்டிருந்தார். சிவபெருமானின் அருளாணைப்படி பிரமாவின் ஒரு சிரசினைக் கொய்து அவரது அகந்தையை அடக்கினார்.

மேருமலையில் இருந்து வைரவர் நீங்கி தேவர் முனிவர்களின் பிக்ஷையை ஏற்றார். அவர்கள் உயிர்த் தெழுந்தனர். வைகுண்டத்தில் விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்தார். பிரம்மா படைத்தற் கடவுள் அல்லவா? ஆகவே அவரது சிரசைக் கொய்த இரத்தம் உலகெங்கும் சென்றது. அதனைத் தமது நெற்றி விழியால் வைரவர் வற்றச் செய்தார். வைரவர் பன்னிரண்டு வருடங்கள் பிரமகத்தியை ஏற்று எல்லாவுலகுஞ் செல்கையில் வைகுண்டமுஞ் சென்றார். அங்கு வைரவரை விஷ்வசேனர் எதிர்த்தார். அவரைத் தமது சூலத்தால் கொய்து தூக்கிக் கொண்டு விஷ்ணு மூர்த்தியிடஞ் செல்ல அங்கு விஷ்ணுவின் சிரசிலிருந்து ஆயிரம் தேவ வருடம் உதிரம் சொரியவே விஷ்ணு மூர்ச்சித்தார். இதனைக் கண்ணுற்ற பூமாதேவி வைரவரை வேண்டவே விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்து காசி சேத்திரஞ் சென்று கபாலத்தை விட்டு அங்கு கால வைரவராக எழுந்தருளினார்.

சிவபெருமானின் ஆஞ்ஞைப்படி சர்வசம்ஹார காலத்தில் வேதப் பொருளைக் கொண்ட நாயை வாகனமாக்கிக் கொண்டு தீமைகளை தமது நெற்றிக் கண்ணினால் உலகில் இல்லாமற் செய்தார் வைரவக் கடவுள்.

**சிறப்பம்சம்**

வைரவர் காவற் தெய்வம், வீட்டுக்காவல், ஊர்க்காவல், கோயிற் காவல் போன்றவை அவரின் சிறப்பம்சங்களாகும். உலகில் நோய், பிணி ஏற்பட்டாலும் அவர் பிணி தீர்க்கும் வைரவராக உள்ளார். யாத்திரை செல்பவர்களும், தூர இடங்களுக்குச் செல்பவர்களும் வைரவரின் நூலினைக் கட்டிக் கொண்டு செல்வர். காசியில் கால வைரவரின் கறுப்பு நூல் எல்லோராலும் பக்தியுடன் அணியப்படுகிறது.

சகல விதத்திலும் சிவப் பொலிவுடன் காவல் செய்து எல்லோருக்கும் அருள் பாலிக்கும் வைரவ சுவாமியை நாம் விரத அனுட்டானங்களுடன் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

*"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்*
*ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்*
*குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்".*

(நன்றி : வைரவ மான்மியம் - 1995)



# வைரவரும் சிவனும்

திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



சிவனின் பிள்ளைகள் ஆகிய விநாயகர், முருகன் என்று இருப்பது போல சிவனின் சிவ அம்சமான, சில திருவுருவங்களாக வைரவர், வீரபத்திரர் என்போர் உள். ஈசானம், தற்புருஷம், அகோரம், சைத்தியோசாதம், வாமதேவம் முதலிய ஐந்து முகங்களுடன் இறைவன் பல அருளாடல்களைக் காட்டியிருக்கிறான். இந்த வகையில் மூர்த்தி பேதங்களில் வைரவரும் ஒன்று. சிவாம்சமான வைரவமூர்த்தி உலகம் எங்கும் வியாபித்திருப்பவர். பயங்கர தீமைகளையும், சூதுகளையும், அழித்து விடுகின்றார். உக்கிர மூர்த்தியான வைரவரின் உபாசனை தீமைகளில் இருந்து காத்தருளவல்லது. தீவிர உபாசனையின் மூலம் கடுமையான தவநெறிகளைப் பின்பற்றி சிவனருளை அடைய விரும்பிய பல சிவனருட் செல்வர்கள் வைரவ உபாசனையின் பேரின்பத்தைக் கண்டிருக்கின்றனர். கபாலிகர்கள் வைரவ உபாசனையில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள்.

"ஸௌந்தர்யலஹரி" என்ற கிரந்தம் 41வது சுலோகத்தில் கலாக்கினி ருத்திரனால் மஹா பிரளயத்தில் பஸ்மமாக்கப்பட்ட உலகத்தை மீண்டும் உண்டு பண்ணுகின்ற காரணத்திற்காக அம்பிகை ஆனந்த பைரவியாகவும், பரமசிவன் ஆனந்த

பைரவராகவும் தாண்டவமாடிக் கொண்டு இருப்பதால் சிருங்காரம், வீரம், ஹஸ்யம், அற்புதம், பீபத்ஸம், ரௌத்ரம், பயானகம், கருணை, சாந்தி என்று ஒன்பது விதமான ரஸங்களும் வெளிவருகின்றன என்று கூறப்படுகிறது.

"லலிதா ஸஹஸ்கரநாமம்" "பைரவி" என்று அம்பாளை அழைக்கின்றது. துக்கத்தை அல்லது துக்கத்திற்குக் காரணமான பாவத்தைப் போக்குவதால் "ருத்ரன்" என்றும், "வைரவர்" என்றும் சிவன் அழைக்கப்படுகின்றான்.

பைரவ தந்திரத்தையே வெளிப்படுத்தியவர் ஆனந்த பைரவர். தான். ஆனந்த பைரவரைத் தான். ஜகத் சிருட்டியே ஆனந்த பைரவி என்பது. அதன் அதிஷ்டானம் தான் ஆனந்த பைரஸ் என்பது, மஹாகால ஸம்ஹிதை, காலிதந்திரம், விஞ்ஞான பைரஸ் முதலிய கிரந்தங்களில் இதன் விரிவை நாம் காணலாம்.

"சுவாகநத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீபஹி
தன் நோ பைரவ ப்ரசோதயாத்"

என்பது பைரவரின் பேரருளைப் பெறுவதற்கு வழிகாட்டும் காயத்திரி மந்திரமாகும். இதை ஆசாரத்துடன் தகுந்த குருநாதரால் உபதேசிக்கப்பட்டு ஒதிப் பயன்பெற வேண்டும்.

சிவனது பல அம்சங்கள் வைரவ அம்சம் மிகவும் முக்கியமானது. ஆலயங்கள் தோறும் வைரவருக்கு சந்நிதி உண்டு. ஆலயத்தில் தினமும் காலையில் பூசைகள் துவங்குமுன்னரும் இரவு அர்த்த ஜாமத்தில் பூசை முடிவுறும் போதும் வைரவருக்கு விசேஷமாக பூசைகள் செய்ய வேண்டுமென்று "ஸ்ரீ பராத்த பூஜாவிதி" என்னும் நூல் கூறுகிறது.

வைரவருக்கு க்ஷேத்திர பாலர் என்றும் ஒரு பெயர் உண்டு. க்ஷேத்திரம், புண்ணிய நதி தீரம், பரிசுத்தமான தூய தவச்சாலை, இவை யாவும், பைரவரின் காவலுக்கு அருளாட்சிக்கு உட்பட்டவை. ஆலயத்திலும் அவர் ஊர் எல்லைகளிலும் காவல் தெய்வமாக விளங்குவதாகவும் கூறப்படுகிறது. காசியம்பதியாகிய புண்ணிய தலத்தின் காவல் நாயகன் காலவைரவ மூர்த்தி, இவரின் சந்நிதியில் கறுப்புக் கயிறு கட்டிக்கொள்ளலும் அங்கிருந்து வாங்கிக் கொண்டு வருதலும் வழக்கமாக இன்னமும் உண்டு.

முன்பு பிரமதேவனுக்கு ஐந்து தலைகள் இருந்தன எனவும் ஒரு சமயம் தானே உலகிலெல்லாம் உயர்ந்தவர்; இணையற்ற பரம்பொருள்; என்று அகந்தையுற்று இருந்த வேளை சிவனிடம் இருந்து ஒரு பெரும் சக்தி – உக்கிர சக்தி தோன்றியது. காண்போரைப் பயத்தில் ஆழ்த்தும் கொடூர வடிவத்தில் கரங்களிலெல்லாம் பயங்கர ஆயுதங்கள் கொண்டு தோன்றிய அந்தச் சக்தி பிரம்மனுக்குப் பாடம் புகட்ட எண்ணி அவனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்தது. (கந்தபுராணம்)

நான்கு முகமுடையவனாகிய பின்னர் பிரம்மனுக்கு தனது தவறையும் சிவபெருமானின் பெருமையையும் உணர முடிந்தது. சத்தியப் பரம்பொருளான சிவனது பெருமையை உலகுக்கு உணர்த்திக் காட்டிய சிவசக்தியை – வைரவ மூர்த்தியை அனைவரும் போற்றினர். (அகங்காரத்தால் அறம் மறந்த தட்சனைத் தண்டித்துப் புகழ் பெற்ற வீரபத்திரரைப் போல) நான்கு முகனுக்குச் சிவன் பெருமை உணர்த்தி வைரவர் பெருமை பெற்றார்.

வைரவருக்கு காலவைரவர், மஹாவைரவர், க்ஷேத்திர பாலர், பிரம்மா சிரஸ் சேதமூர்த்தி என்று பல பெயர்கள் உண்டு. தமிழ் நூல்கள் வைரவரை "வடுக தேவர்" என்று குறிப்பிடுகின்றன. நரசிம்ம உக்கிரத்தைக் குறைந்த சட்டைநாதராகவும் வைரவர் வணங்கப்படுகிறார். சீர்காழியில் தோணியப்பர் கோயிலில் வைரவரின் ஆத்தாரண மூர்த்தம் எனப்படும் சட்டநாதரைக் காணலாம். இப்பெருமான் நரசிம்ம உக்கிரத்தைத் தணித்ததை சீர்காழி தலபுராணம்.

"துங்கமாமணித் தூணில் வந்திரணியன் றோள் வலிதனை வாங்குஞ்
சிங்கவேற்று உரி அரைக்க சைத்தலகெலாந் தேர்ந்தளந்தவன் மேனி
யங்கம் யாவும் ஓர் கதையதாய்க் கொண்ட தனங்கியாப் புனைகாழி
சங்கவார் குழைச் சட்ட நாயகன் துணைத்தாமரைச் சரண் போற்றி"

என்று குறிப்பிடுகின்றது.

வைரவ உபாசனை, வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்கவல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை இருள் கௌவி வரும் இந்நாட்களில் மீண்டும் புத்தொளியும் புது வாழ்வும் பெற வடுநாதனை அனைவருமே உபாசித்து உய்ய வேண்டுவது அவசியமாகும். இந்திய பூமியிலே உள்ள வைரவ சந்நிதிகளில் காசியில் உள்ள கால வைரவரைக் காணாமல் திரும்புவதில்லை. வைரவ உபாசனையை ஸ்திரீகள், கோழை மனமுடையவர்கள் செய்யக் கூடாதென்று ஐதீகம் உண்டு. வைரவர் உக்கிர மூர்த்தி என்பதனால் இருக்கலாம்.

வேதத்தில் ருக்வேதத்திலும், அதர்வண வேதத்திலும் வைரவரைப்பற்றிக் கூறப்படுகின்றது. காசி காண்டத்தில் வைரவ சரித்திரம் விஸ்தாரமாய்க் கூறப்படுகின்றது. எல்லோராலும் வைரவ உபாசனை தீவிரமாகச் செய்ய முடியாது போனாலும் தீமைகள் அகலப் பூசிக்கப்படவேண்டிய தெய்வ நிலைகளில் ஒன்றாக வைரவர் இடம் பெற முடியும். சிவனின் ஞான மூர்த்த வடிவமே இன்று பெரும்பாலும் ரைவராக வழக்கில் வைத்து வழிபடப்படுகின்றது. இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் முறைப்படி ஆகமம் கூறும் விதிகளை அனுட்டித்து ஆலயங்களில் வைரவரை வணங்குகிறார்கள். காவல் தெய்வமாக, ஞானவைரவராக, யாழ்ப்பாணத்தில் அநேகமான ஆலயங்கள் உண்டு. வைரவர் சிவனின் ஓர் அம்சமாதலால் சிவனாகவே கொண்டு வழிபட வேண்டும்.

பெருகுதன் புகழுளனோர் பிரதாப மடக்கியாங்கு
முருகுதங் கலனின் மேலோன்முண்ட வெண்கபாலத்தூடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற நீ
திருகுதீர் வடுகப்புத்தேள் சேவடி சென்னிசேர்ப்பாம்.

("திருநாகைக்காரோணப் புராணம்")

(நன்றி : வைரவ மான்மியம் – 1995)

## கற்பூர ஆராத்தியின் தத்துவம்

பூஜை முடிவில் கற்பூர தீபம் காட்டுவது வழக்கம். இறைவனுக்கு கற்பூர ஆராத்தி எடுக்கும் போது கற்பூரம் எரிந்த பின்பு சாம்பலோ, தூசியோ வேறு எதுவுமே மிச்சம் இருப்பதில்லை. கற்பூரம் தன் வாசனையை ஞானத் தீயில் இட்டு எதுவும் மீதம் இல்லாத நிலையில் தெய்வத்தை அடைகின்றது. கற்பூர தீபம் ஏற்றிக் காட்டுகையில் இறையருள் உலகத்தில் இருக்கும். அது எரிந்து சாம்பலாவது போல ஆண்டவனுடைய ஜோதியில் ஆன்மா கரைந்து ஒன்றுபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

*(இந்து மாமன்ற வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*

# ஈழத்து இந்து மதத்தில் வைரவர் வழிபாடு

**திருமதி கௌரி சுரேசன் M. Ed.**
*விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி*



பல்வேறு ஆதாரங்களினூடாக, மக்கள் பல தெய்வங்களை வணங்கினார்கள் என்ற உண்மை காணப்படுகின்றது. பயமும் இயற்கை நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட அச்சமுமே தெய்வ நம்பிக்கையை உண்டாக்கின. அந்த வகையில் ஈழத்து இந்து மதத்தில் வைரவர் வழிபாடும் ஓர் இன்றியமையாத வழிபாடாக அமைந்தது.

## பைரவர் எனும் பதம்

"பீரு" (அச்சம்) என்னும் வடமொழிச் சொல்லின் அடியில் இருந்து பிறந்ததே பைரவர் என்ற பதமாகும். பைரவர் என்ற சொல்லுக்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். எதிரிகளுக்குப் பயம் தந்து தன்னை அண்டியவர்களுக்கு அருள் பாலிப்பதால் பெருமானுக்குப் பைரவர் என்பது பெயராயிற்று.

மேலும் ப – படைத்தலையும், ர – காத்தலையும், வ – அழித்தலையும் ஆகிய இம் முத்தொழில்களையும் ஆற்றுவதால் இறைவன் "பைரவன்" என்று அழைக்கப்படுகின்றார்.

வைரவர் என்ற சொல்லின் பொருளை நோக்கின், வைரம் போன்று திண்மையான தேகம் படைத்தவராகவும், பக்தர்களுக்கு வைரத்தாலான கோட்டை போன்று காவல் தெய்வமாக விளங்குவதாலும் சிவபெருமானின் காவல் திருக்கோலம் வைரவர் என அழைக்கப்பட்டது.

பிரம்ம சிரச்சேத மூர்த்தி



உக்கிரவைரவர்

## வைரவர் வழிபாட்டின் தோற்றுவாய்

கிராமமக்கள் மத்தியில் நாட்டார் வழிபாட்டு நெறிகள் பற்றிக் குறிப்பிடும் போது இவற்றில் கோயில்களோ அன்றிச் செல்வாக் குள்ள பூசகர்களோ காணப்படுவதில்லை. இத்தகைய கோயில்கள் வீட்டுக் கோடியில், மரங்களின் கீழ் அல்லது சிறுகொட்டில்களில் காணப்படுவது இயல்பு.

கிராமங்களில் உள்ள வழிபாட்டு முறைகள், யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய உடனும் அதன் பின்னர் டச்சுக்காரர் ஆட்சியிலும் வளர்ச்சி பெற்றன. நாட்டிலுள்ள பிரதான ஆலயங்களை இவர்கள் தகர்த்து விட்டது மட்டுமன்றிப் பகிரங்கமாக இந்துக்கள் தமது வழிபாட்டுக் கடமைகளை மேற்கொள்வதற்கும் தடை விதித்திருந்தனர். இதனாலேயே அந்நியருக்குத் தெரியாமல் வைரவரது சூலத்தை வளவின் ஒதுக்குப் புறங்களில் வைத்து வழிபடும் மரபு தீவிரமடைந்தது.

இக்கட்டான காலகட்டத்தில் முத்தலைச் சூலத்தை மரத்தில் வைத்து வழிபட்ட மக்கள், அதனை அந்நியரின் பயத்தின் நிமித்தம் தேவையேற்படும்போது கிறிஸ்தவர்களுடைய சிலுவையாகவும் இருதலைகளையும் மடித்துப் பாவித்தனர். இம்முத்தலைச் சூலம் மும்மூர்த்தி தத்துவத்தையும் ஈழத்து இந்து மரபில் வைரவர் வழிபாட்டின் அடித்தளத்தையும் ஆதாரத்துடன் சுட்டிக் காட்டுகின்றது. பின்னர் இச்சூலத்தைக் கோயில்களில் அமைந்துள்ள மரங்களாகிய வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது முதலியவற்றில் குத்தி வழிபட்டனர். இவையே பின்னர் வேம்படி வைரவர். புளியடி வைரவராக மாறி உருவ வழிபாட்டோடும் பின்னிப் பிணைந் துள்ளதை எடுத்துக் காட்டலாம்.

## வைரவர் உற்பத்தி

### 1. பிரம்மன் தலையைக் கொய்தது

மும்மூர்த்திகளில் ஒன்றான பிரம்மன் அகந்தையால் அறிவு மயங்கிச் சிவநிந்தனை செய்தபோது சிவபெருமான் வைரவரைத் தோற்றுவித்தார். வைரவர் பிரம்மதேவனின் ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்துக் கபாலமாக்கிக் கொண்டார். அவனுக்கு அச்சமூட்டி அறிவை விளக்கம் பெற வைத்தார்.

அநீதிகள், கொடுமைகள் தோன்றுகின்ற போது அவற்றை ஒடுக்கவே சிவபெருமான் பல மூர்த்தங்களை எடுக்கிறார் எனச் சைவசமயத் திருநூல்கள் எடுத்து இயம்புகின்றன. இவ்வாறு எடுத்த மூர்த்தங்களில் ஒன்றே வைரவ மூர்த்தமாகும்.

2. மகா வைரவர், அட்ட வைரவர் தோற்றம்

ஒரு சமயம் அந்தகசூரன் என்பவன் தேவர்களை துன்புறுத்தியதுடன் அவர்களைப் பெண் வேடத்துடன் திரியும்படி செய்து அவமானப்படுத்தினான். தேவர்களின் முறையீட்டுக்குச் செவிசாய்த்த சிவபெருமான் மகாவைரவரை உற்பத்தி செய்து அந்தகனைக் கொன்றுவரும்படி ஆணையிட்டார். வைரவர் அதி உக்கிரத்துடன் அவன் மீது போர் தொடுத்தார். அவருடைய திருமேனியிலிருந்து அஷ்ட வைரவர்கள் தோன்றினார். அந்த எட்டு வைரவர்களுக்கும் தேவர்கள் அஷ்ட மாதர்களை அளித்து இன்பம் பெறச்செய்தனர்.

3. நரசிம்ம வைரவர் தோற்றம்

சிவனடியார்களுக்கு இடர் விளைவித்துத் துன்புறுத்திய கயாசுரன் என்ற யானையை அடக்க வைரவர் தோற்றம் நிகழ்ந்தது. மேலும் ஒரு முறை இரணியவதம் செய்வதற்கு மகாவிஷ்ணு நரசிம்ம வடிவம் எடுத்து இரணியனைக் கொன்ற பின் கர்வம் கொண்டார். அதன் தோலை உரித்து நிர்க்கிரகம் செய்ய நரசிம்ம வைரவர் தோற்றம் ஏற்பட்டது. நரசிம்ம அவதாரம் எடுத்த திருமாலின் தோலை உரித்து வைரவர் தனக்குப் போர்த்தியதால் சட்டைநாதர் எனும் பெயர் பெற்றார்.

இவ்வாறே அநேக அசுரர்கள் தோன்றிய போதெல்லாம் சிவபெருமான் அநேக வைரவர்களை உற்பத்தி செய்தார். அந்த வைரவர்கள் தமது பணி முடிந்த பிறகு, ஈசான பாகத்தில் உள்ள வைரவ பதம் என்னும் இடத்தில் தங்கி சிவபூசை செய்து வருகின்றனர்.

## வைரவர் உருவம்

வைரவரிற்கு எண்ணற்ற வடிவம் உண்டு. இவரிற்கு நான்கு, எட்டு, பத்து; எண்ணற்ற கரங்கள் உண்டு. நிர்வாணமாக விளங்குவர். உக்கிரப் பார்வை, கோரப்பற்கள், ஜுவாலாகேசம், கபாலமாலை, சிங்கிணி மாலை, சிலம்பு, பாம்பு இவற்றுடன் விளங்குவர்.

# அஷ்ட வைரவர்


அசிதாங்கபைரவர்



குரு பைரவர்


சண்ட பைரவர்


குரோதன பைரவர்


கபால பைரவர்


உன்மத்த பைரவர்


பீஷண பைரவர்


சம்ஹார பைரவர்

கூர்மையான வாள், திரிசூலம், பகைவரை அஞ்சி ஓட வைக்கும் சத்தத்தை எழுப்புகின்ற டமறுகம், பாசம், அங்குசம், வச்ரம், அக்கினி, கதை, வில், அம்பு, தண்டம், கபாலம், ஜபமாலை, சங்கு, சக்கரம், உலக்கை, மான், மழு, கட்வாங்கம், சக்தி, ஈட்டி இவற்றைக் கையில் ஏந்தி இருப்பார்.

அட்ட வைரவர்கள் அசிதாங்க வைரவர், குரு வைரவர், சண்ட வைரவர், குரோதன வைரவர், கபால வைரவர், உன்மத்த வைரவர், பீஷண வைரவர், சம்ஹார வைரவர் ஆகியோர். சப்த மாதர்களான பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர்களுடன் சண்டி ஆகிய எட்டு மாதர்களுடன் முறையே அன்னம், இடபம், மயில், கருடன், குதிரை, யானை, சிங்கம், நாய் ஆகிய வாகனங்களுடன் காட்சி தருவார்.

இதனை விட வைரவர் 64 கோலங்களில் விளங்கும் போது 64 யோகினிகளையும் தனது சக்தியாகக் கொண்டு விளங்குவார். வைரவர் தாத்ரிகை, கௌரிகை என்னும் இரு தேவியருடன் விளங்குவதாகவும் கூறப்படுகின்றது. சுவர்ணாகர்ஷண வைரவர், சுவர்ணதா என்கின்ற சுவர்ண பைரவியைத் தன்மடிமீது அமர்த்திக் கொண்டு காட்சியளிக்கின்றார்.

## வைரவ நாமங்கள்

வைரவர் ஞானிகளிடம் அறிவுச் சோதியை விளக்கும் ஞான வைரவராகவும் யோகியர்க்குக் காவலாக இருப்பதுடன் தாமே பெரிய யோகியாகி யோக வைரவராகவும், மகாவீரர்களிடம் உக்ர வைரவராகவும், பஞ்ச பூதங்களைக் காக்கும் பூதவைரவராகவும், பிரம்மன் தலையைக் கொய்து பிரம்ம சிரச்சேத மூர்த்தியாகவும், புண்ணிய தலங்களைக் காக்கும் ஷேத்ர பாலகராகவும் இன்னும் அநேக வடிவங்களையும் கொண்டு மக்களைக் காப்பவர். வடுகர், அபத்தோத்தாரணர், சட்டைநாதர், கஞ்சுகன், கரிமுக்தன், நிர்வாணி, சித்தன், காபாலி, வாதுகன், ஞாளியூர்தியோன், கருங்குதிரையாளி எனப் பலபெயர்களும் உண்டு.

## தேவாரங்களில் வைரவர் வழிபாடு

*"கலையிலங் கும்மழு கட்டங்கங் கண்டிகை குண்டலம்*
*விலையிலங் கும்மணி மாடத்தர் வீழி மிழலையார்*
*தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலந் தமருகம்*
*அலையிலங் கும்புன லேற்றவர்க் கும்மடி யார்க்குமே."*

என்று திருஞானசம்பந்தர் வைரவரைப் போற்றினார்.

*"விரித்த பல்கதிர் கொள்சூலம், வெடிபடு தமரு கங்கை*
*தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்*
*உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ள*
*சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே."*

என அப்பர் திருச்சேறைத் தலத்திலுள்ள மகா வைரவரைத் துதிப்பர்.

## திருமந்திரம்

10ஆம் திருமுறையாகிய திருமந்திரத்தில் வைரவச் சக்கரம், வைரவருடைய உருவத்தியானம், வைரவ உபாசனையின் பயன், வைரவ பூசைக்குரிய சாதனங்கள், வைரவரைத் தியானம் செய்பவர் எய்தும் பயன்கள் என்பன 1292 – 1296 வரையான பாடல்களில் விரிவாக விரித்துரைக்கப்படுகின்றன. இவ்வாறே வைரவர் சக்தியாகிய வைரவியின் உபாசனை, வைரவிச் சக்கரம், வைரவி மந்திரம், வைரவியின் அருட்திறம் மற்றும் நாராயணி முதலிய சக்தியின் உபாசனை என்பன 1076 – 1124 வரையான பாடல்களில் கூறப்படுகின்றது.

திருமந்திரப் பாடல்களில் வைரவரது உருவத்தியானம் உணர்த்தப்படுவதைக் கீழ்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

*ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்*
*ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்*
*காமே தமருக பாசமுங் கையது*
*வாமே சிரத்தொடு வாளது கையே.*

*கையது வாறுங் கருத்துற நோக்கிடு*
*மெய்யது செம்மை விளங்கு வயிரவன்*
*துய்யரு ளத்தில் துளங்கு மெய் யுற்றதாய்ப்*
*பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே.*

மற்றும்

*ஓதிய நந்தி உணருந் திருவருள்*
*நீதியில் வேத நெறிவந் துரை செய்யும்*
*போதம் இருபத் தெழுநாள் புணர் மதி*
*சோதி வயிரவி சூலம்வந் தாளுமே – 1080*

என்றவாறு வைரவி ஞானத்தையும் அருளி சூலத்துடன் வந்து காத்தருள்வார் எனத் திருமூலர் கூறுவர்.

## பெரியபுராணம்


சிறுதொண்ட நாயனாரை உய்விக்க வந்த பைரவர்

இயற்பகையார், சிறுத்தொண்டர், மானக் கஞ்சாறர் ஆகியோர் வைரவ சமயத்தைச் சார்ந்தவர்கள்.

சிவனடியார்களை திருவமுது செய்விக்கும் திருத்தொண்டு செய்பவரான திருத்தொண்ட நாயனாரிடம் "வைரவச் சங்கிரமா" வேடம் தாங்கி வந்த சிவபெருமான் ஆறு மாதத்திற்கொருமுறை மட்டும் நரபசு உண்பதாகக் கூறி அதற்குரிய நாள் இன்று என உணவு கேட்டமையை பெரிய புராணம் கூறும். இந்த நாளே வைரவ விரதமாகிய சித்திரைப் பரணி அல்லது ஐப்பசிப் பரணியாக இருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர் கூறுவர். நரபலி கேட்டு வந்த காரணத்தினாலேயே இன்றும் பல வைரவ ஆலயங்களில் பலியிடல், மடை பரவுதல் வழமை இருந்து வருகிறது.

## புராணங்கள்

கந்தபுராணத்தில் வைரவருடைய உற்பத்தி, அவருடைய தோற்றம், வைரவர் அற்புதங்கள், வைரவ வழிபாடு என்பன பற்றி தக்ஷகாண்டத்தின் ததீசியுத்தரப் படலத்தில் மிக விரிவாகக் கூறப்படுகின்றது. இவை தவிர காஞ்சிப் புராணம், மயூரப்புராணம், கடம்பவனப்புராணம் முதலிய நூற்றுக்கணக்கான தல புராணங்களில் வைரவர் பற்றிக் கூறப்படுகின்றது.

வைரவமூர்த்தம் உக்கிரம் நிறைந்தது. ஆனால் தீங்கு செய்யாது. நன்மையே புரிவதாகவே காணப்படுகின்றது என வைரவ மூர்த்தியின் தோற்றம் பற்றிய கந்தபுராணப் பாடல் விளக்குகின்றது.

*"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்*
*ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்*
*குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்"*

நாம் திரிகரண சுத்தியுடன் வைரவப் பெருமானை வழிபடுவோமாயின் எம்மிடமுள்ள அசுரத் தன்மையும் விலங்குணர்வுகளும் நீக்கப்பட்டு நன்னெறியில் வாழ வழி வகுக்கும்.

## ஆகமங்களில் வைரவ வழிபாடு

ஸ்ரீமத் உத்தரகாரணாகமம் 9 ஆவது கிராமசாந்தி விதிப் படலத்தில் மகோற்சவம், பிரதிஷ்டை முதலியவற்றின் ஆரம்பத்தில் கிராமசாந்தி செய்யப்படல் வேண்டும். இதில் வைரவர் வழிபாடு முக்கியமாக இடம்பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

24ஆவது மகோற்சவ விதிப்படலத்தில் 68ம் சுலோகத்தில் கோயில் அமைப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் ஈசானத்தில் வைரவருடைய சந்நிதானம் அமைத்தல் பற்றிக் குறிப்பிடப் படுகின்றது.


உத்தரகாரணாகமம் 70 ஆவது படலத்தில் வைரவ க்ஷேத்ர பாலகப் பிரதிஷ்டா விதியும், பூர்வகாரணாகமம் 103 ஆவது படலத்தில் க்ஷேத்ரபால அர்ச்சனா விதியும், அஜிதாகமம் 36வது படலத்தில் க்ஷேத்ரபால சொரூபம் கிரியாபாதமும், சுப்ரபேதாகமத்தில் சேத்திரபால பிம்பலட்சணமும், மகுடாகமத்தில் 07ஆவது மகுடத்தில் க்ஷேத்திரபாலர் தியானம் மற்றும் பூசை முறைகளும் ரௌரவாகமம் 51ஆவது படலத்தில் க்ஷேத்திரபாலர் ஸ்தாபன விதியும் குறிப்பிடப்படுவது மட்டுமன்றி மற்றும் பல ஆகமங்களிலும் வைரவர் பற்றிய விவரங்கள் சுட்டப்படுகின்றன.

## பிற நூல்களில் வைரவர் வழிபாடு

பிரதிமாலட்சணம், பிரதிமாகோசம், சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம், சிற்பரத்தினம், சிவமஞ்சரி, ஆகாச வைரவ கல்பதந்திரம், ஸ்ரீமகாலட்சுமி மந்திரகோசம், பிரபஞ்சசார சங்கிரகம், மந்திர மஹார்நவம், ஆகம அமிர்தவர்சினி, வடுகவைரவ கல்ப்பம் முதலிய நூல்களில் வைரவரது தோற்றம், வைரவ வழிபாடு, வைரவ உருவங்கள் என்பன பற்றிச் சிறப்பிக்கப்படுகின்றது.

## வழிபாட்டு முறைகள்

வைரவரது வழிபாட்டு முறைகள் ஆகம முறையில் – பெருந் தெய்வ வழிபாடாகவும், கிராமிய முறையில் – சிறு தெய்வ வழிபாடாகவும் இடம்பெற்று வருகின்றது.



வைரவர் ஆயுதங்களும் சின்னங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. அங்குசம் | 2. ஸ்வந்தம் | 3. பாசம் | 4. கேடகம் |
| 5. வாள் | 6. சேவல் | 7. மழு | 8. திரிசூலம் |
| 9. தோமரம் | 10. வஜ்ரம் | 11. வஜ்ரம் | 12. அக்கினி |
| 13. திரிசூலம் | 14. டங்கா | 15. கதை | 16. வில் |
| 17. அம்பு | 18. தாமரை | 19. தாமரை | 20. கட்வாங்கம் |
| 21. சக்திவேல் | 22. கண்ணாடி | 23. டமருகம் | 24. கிளி |
| 25. மணி | 26. அக்கமாலை | 27. கமண்டலம் | 28. ஏடு |
| 29. டமருகம் | 30. அக்கமாலை | 31. கமண்டலம் | |

1. ஆகம வழிபாட்டு முறை

ஆலயங்களில் நடைபெறுகின்ற பூசைகள், கிரியைகள் போன்ற வழிபாடுகளில் விநாயகருக்கு வணக்கம் செலுத்துதல் முதலிடம் பெறுவது போன்று இவற்றின் முடிவிலே வைரவருக்கு வணக்கம் செலுத்துதல் முக்கிய இடம் பெறுகின்றது. ஆகம விதிப்படி அமைந்த விநாயகர், சிவன், முருகன், சக்தி ஆலயங் களில் வைரவப் பெருமான் பரிவாரத் தெய்வங்களில் ஒருவராகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மூலமூர்த்தியாக வைரவர் அமைந்த தனி வைரவ ஆலயங்களும் ஈழத்தில் காணப்படுகின்றன. ஆலய மகோற்சவத்தின் இறுதியில் வைரவர் சாந்தி செய்யப் படுவதும் நித்திய பூசையில் அர்த்தசாமப் பூசை முடிந்த பின் ஈசானபதத்தில் உள்ள வைரவரிடம் ஆலயத்திறப்பு ஒப்படைக்கப் படுவதையும் காணலாம். அது மட்டுமன்றி மகோற்சவ ஆரம்பத்தின் கிராமசாந்தியில் வைரவர் வழிபாடும் இடம்பெறுகின்றது.

கோயிலைக் காவல் செய்யும் தெய்வம் மாத்திரமல்ல சுற்றாடலையும் வைரவர் காக்கின்றார். காவல்தெய்வமாகிய வைரவரின் வாகனமாக அமைந்திருப்பதும், காவல் செய்வதில் வல்லமை பெற்றதும் நாயாகும். நாயைச் "சுவானம்" என்பர். கோயில்களிலோ அல்லது அதன் சூழல்களிலோ திருட்டு, கொலை முதலிய பழிபாவங்களைப் புரிய மக்கள் அஞ்சுவதும் வைரவர் மீதுள்ள பயத்தினால் ஆகும். வைரவர் வழிபாட்டில் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன ஏற்பட்டு உள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது. வைரவர் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்பவர் ஆவர்.

2. கிராமிய வழிபாட்டு முறை

கிராமங்களில் அமைந்துள்ள ஏராளமான சிறு, சிறு வைரவர் ஆலயங்களில், மக்கள் தாம், தாம் விரும்பிய படியும் அங்குள்ள கிராம வழக்குப் படியும் தமது வசதிக்கேற்பவும் வைரவர் வழிபாட்டை ஆற்றி வருகின்றனர்.

இதுமட்டுமன்றி உக்கிரமூர்த்தமாக வைரவர் இருப்பதால் அவர் மாமிச உணவை விரும்பி உண்பவர் எனப் பழைய நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாலும் வைரவர் ஆலயத்தில் நீண்ட காலமாகப் பலியிடல் இடம் பெற்று வந்திருக்கின்றது. பின்னர் அறிவு ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் பலியிடல் கைவிடப்பட்ட போதிலும் இன்றும் கூடக் கவுணாவத்தை வைரவர் ஆலயம் முதலிய இடங்களில் ஆயிரக்கணக்கில் ஆடுகளை பலியிடும் வழக்கம் இருக்கின்றது. இதன் தொடர்ச்சியாகப் பலியிடுவதன் அடையாளச் சின்னமாகக் கிராம சாந்தியின் போது சில ஆலயங்களிலே கோழி ஒன்றைக் கொண்டு வந்து பலியிடும் பாவனை காணப்படுகிறது. ஏனைய இடங்களில் இதற்குப் பதிலாக நீத்துக்காயை வெட்டு வதைக் காணலாம்.

வைரவர் வழிபாட்டில் பக்தி, பரவசம், ஆவேச ஆட்டங்கள், வாக்குச் சொல்லுதல் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. ஆண்டிற்கொருமுறை பொங்கல், மடை பரவுதல் என்பன இடம் பெறுகின்றன. கரகம், காவடி காத்தவராயன் கூத்து என்பனவும் முக்கிய இடம் பெறுகின்றன.

## விரதங்களும் பூசனை முறைகளும். பயன்களும்

1. தை மாதத்தில் வரும் முதல் செவ்வாய் தொடங்கி ஒவ்வொரு செவ்வாயும் ஆகும். (மங்கள வாரம்).
2. சித்திரை மாதப் பரணி நட்சத்திரத்தையும்.
3. ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரத்தையும் விரதமாக அனுட்டிப் பார்கள்.

இந்த நாட்களில் விரதமிருந்து வைரவருக்கு விருப்பமான சிவப்புப் பட்டு, மாவிளக்கு, நெய், அபிஷேகம், நெய்த்தீபம், உடைக்கப்படாத முழுத்தேங்காய், நார்ப்பழங்கள், சிவப்பு வண்ணம் தோய்த்த கல்யாணப் பூசனிக்காய், தேன், வடை, அவித்த உணவுகள் முதலியவற்றைப் படைப்பார்கள். வைரவரிற்கு நந்தியாவர்த்தம் பூவால் அர்ச்சனை செய்யக் கூடாது. வைரவரிற்கு விருப்பமான பூ செண்பகப்பூ.

மிளகுப்பொட்டனியை நெய் அல்லது நல்லெண்ணெயில் வைரவருக்கு எரித்தால் வறுமை நீங்கும். செல்வம் பெருகும். இழந்த செல்வத்தை மீளப் பெறலாம்.

ஆபத்துக் காலங்களிலும், எதிரிகளால் நாட்டிற்கு யுத்தபயம் ஏற்படும் போதிலும், கொடிய விலங்குகளினால் துன்பம் நேரும் போதும், திருடர்களால் தொல்லைகள் ஏற்படும் போதும் வைரவருக்குச் சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் எல்லாவித கஷ்டங்களும் நீங்கி நன்மைகள் ஏற்படும்.

குழந்தைப் பாக்கியம் இல்லாத கணவர், மனைவியர் ஆறுதேய் பிறை அஷ்டமியில் வைரவருக்குச் சிவப்பு அரளியினால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் விரைவில் சந்தான பாக்கியம் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரங்களில் வில்வ இலைகளினாலும், வாசனை மலர்களாலும் வைரவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் வறுமை நீங்கிச் செல்வம் பெருகும்.

வைரவருக்கு சனிக்கிழமைகளில் சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் சனீசுவரரும் மகிழ்ச்சி அடைந்து ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமத்துச் சனி, முதலிய சனிக்கிரக உபாதைகள் முழுவதையும் நீக்குவதுடன் நல்ல யோகமான பலன்களையும் அருள்கிறார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ராகு காலத்தில் வைரவருக்கு உருத்திர அபிஷேகமோ அல்லது விபூதி அபிஷேகமோ செய்து வடைமாலை சாற்றிச் சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபடுவதால் திருமணமாகாத ஆண், பெண், இருபாலாருக்கும் விரைவில் திருமணம் நடைபெறும்.

வைரவரை இடைவிடாமல் வழிபட்டு வருபவர்களுக்கு, ஆகம தந்திர சாஸ்திரங்கள், உயர்ந்த குரு கிடைத்து உபாசன (வழிபாட்டு) மார்க்கத்தில் மேன்மேலும் முன்னேற அருள் பாலிக்கின்றார்.

வைரவ சகஸ்ரநாமத்தை ஒன்பது முறை வைரவருக்கு அர்ச்சனை செய்து அவரவர் வசதிக்கேற்றபடி தயிர், அன்ன பள்ளையம் (தயிர் அன்னப்பாவாடை) தேங்காய், தேன் படைத்து வழிபட்டால் வழக்கில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். பங்குதாரர்களுக்குள் ஒற்றுமை நிலவும். எதிரிகளால் ஏற்படும் தொல்லை மற்றும் பில்லி சூனியம் போன்ற மந்திரப் பிரயோகத்தால் ஏற்படும் தொல்லைகள் அடியோடு அகலும்.

இவ்வளவு பெருமைகளையும் அருட்திறன்களையும் கொண்டு விளங்கும் வைரவரைச் சிவாலயங்களிலும் தனி ஆலயங்களிலும் கண்டு வழிபடலாம்.

## யாழ்ப்பாணத்தில் வைரவர் வழிபாடு

யாழ்ப்பாணத்தில் காணப்படும் வைரவர் ஆலயங்களுள் கொக்குவில் தலையாழி ஞான வைரவர் ஆலயம் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் ஈழத்தில் வைரவப் பெருமானுக்கு அமைந்துள்ள ஆலயங்கள் எல்லாவற்றிலும் தனித்துவமானதும் அளவால் பெரியதுமாக விளங்குகின்றது.

காங்கேசன்துறைக்குச் சமீபமாக உள்ள மாவிட்டபுரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே பளை என்ற பழைமையான ஊர் உண்டு. இங்கு பசுமையான மரங்கள் சூழக் கம்பீரமான இராஜகோபுரத்துடன் பார்ப்பவரை வியக்க வைக்கும் வைரவர் திருக்கோயில் உள்ளது. இராஜகோபுரத்துடன் கூடிய கோயில் கொண்ட வைரவர் ஆலயம் இதுவேயாகும். இக்கோயிலின் நாய் வாகனம் மிகப்பெரியதாகவும் புதுமையுடனும் விளங்குகின்றது.

கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் ஆலயம் சிறப்பு வாய்ந்தது. இது மட்டுமன்றி உரும்பிராய்க் காட்டு வைரவர் கோயில், சங்கானை நிகரை வைரவர் கோயில், இணுவில் ஞானவைரவர் கோயில், கரம்பொன் ஞானவைரவர் கோயில், ஈழத்துச் சிதம்பரம் எனச் சிறப்பிக்கப்படும் காரைநகரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திண்ணைக்களி வைரவர் ஆலயம் என்பன யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்புப்பெற்ற வைரவ ஆலயங்களாக இன்றும் திகழ்கின்றன.

## ஏனைய மாவட்டங்களில் வைரவர் வழிபாடு

திருகோணமலை பாலையூற்று உவர்மலை, பெருந்தெரு செக்கடி வைரவர் ஆலயங்கள் சிறப்புப் பெற்றவை. இவ்வாலயங்களில் அலங்காரத் திருவிழாக்களே இடம் பெறுகின்றன.

மட்டக்களப்பில் – ஸ்ரீநரசிங்க வைரவர் ஆலயம் சிறப்புப் பெற்றது. தனிக்கோயில் கர்ப்பக்கிரக மூர்த்தியாக அமர்ந்து அருள் பாலிக்கும் வைரவர் ஆலயம் இதுவாகும். மேலும் ஏனைய மட்டக்களப்பு வைரவ ஆலயங்கள் எங்கிலும் கதவு திறத்தல், பொங்கல், மடை பரவுதல், காவியம் பாடல், கதவு அடைத்தல் எனும் ஒழுங்கு முறைக்கமைந்த சடங்கு முறைகளே நடைபெறுகின்றன.

## கருத்தேற்றம்


1. வைரவர் வழிபாட்டினுடைய பாரம்பரிய வழிபாட்டு முறைகளை நிலைநாட்ட வேண்டும். தற்காலத்தில் அவை அருகி வரல். இவற்றிற்கு மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக் கருத்தரங்குகள், இந்து மாநாடுகள், இலத்திரனியல் ஊடான செயற்பாடுகள், நாடகங்கள் என்பவற்றை ஏற்படுத்துதல்.
2. யுத்தத்தால் அழிந்த, சிதைந்த, பூட்டிய வைரவர் ஆலயங்களைப் புனரமைக்கப்படல் வேண்டும்.
3. பராமரிக்க முடியாத வைரவ ஆலயங்களிற்கு, இந்துமாமன்றங்கள், இந்துத்தொண்டர் அமைப்புக்கள் உதவிகளை, நன்கொடைகளை வழங்கல்.
4. தற்கால சமூகத்தினரிடையே பெரியவராயினும் சரி, சிறியவராயினும் சரி அவர்களிடையே ஒழுக்கச் சீர்குலைவுகள் காணப்படுகின்றன. இதற்கு நிம்மதி, பாதுகாப்பு, நம்பிக்கை, பக்தி, அன்பு, அகிம்சை போன்ற மேம்பாடுகளை நன்மை செய்கின்ற, பாதுகாக்கின்ற வைரவ வழிபாட்டினூடாக மேம்படுத்தல்.
5. பாரம்பரியத்தை நிரூபித்தல் அதாவது அன்னியரது ஆட்சியிலிருந்து பாதுகாத்த வைரவர் வழிபாட்டைக் கட்டிக் காத்துச் சிறந்த பண்பாடு, பழக்கவழக்கம், சமயப்பற்றுக் கொண்ட சீரிய சமூகத்தைத் தோற்றுவித்தல்.
6. சமாதானத்தோடு கூடிய வாழ்க்கை முறையையும் சீர்மியத் துடன் கொண்டு செல்ல இவ் வைரவர் வழிபாடே பெரிதும் உதவுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. பேராசிரியர். எஸ். நாராயணசாமி
"மகா பைரவர்", திருவாவடுதுறை ஆதீனம் 2004
2. முதலியார் குலசபாநாதன்
"யாழ்ப்பாண வைபவமாலை"
3. கலாநிதி. சி. க. சிற்றம்பலம்
"யாழ்ப்பாண இராச்சியம்" யாழ் பல்கலைக்கழகம் திருநெல்வேலி 1992
4. கலாநிதி சி. க. சிற்றம்பலம்
"யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு", யாழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம். 01.10.1993
5. சைவப்புலவர் தேசியமணி
"சைவசமய சிந்தாமணி", கொழும்பு. ஏ. வி. ஆர். ஏ அச்சகம். 1960
6. கலாநிதி. க. குணராசா
"ஈழத்தவர் வரலாறு", பூபாலசிங்கம் பதிப்பகம் 340 செட்டித் தெரு, கொழும்பு. 1996
7. திருமதி சிவகாமி சாமிசிதம்பரனார்
பழந்தமிழ் வாழ்வும் வளர்ச்சியும் இலக்கிய நிலையம், சென்னை. 1961
8. புலவர் உ. த. கோவிந்தசாமி
"ஆலயங்களின் வரலாறு", பூம்புகார் பதிப்பகம் சென்னை 1993.
9. பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா
"இதுதான் இந்துமதம்", சர்வானந்தமய பீடம், இணுவில் 2004
10. ஸ்ரீ. ஆறுமுகநாவலர் பொன்னம்பலபிள்ளை
"கந்தபுராணம்", வித்தியாநுபாலயந்திரசாலை, சென்னைபட்டணம். 1953
11. அ. தட்சணாமூர்த்தி
"தமிழர் நாகரிகமும் பண்பாடும்", எம். ஏசு. பிரிண்டர்ஸ் சென்னை 1999.
12. அருள் ஒளி
ஐப்பசி மாத இதழ், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை. 2003
13. சைவநெறி – தரம் 11
கல்வி வெளியீட்டுத் திணைக்களம். 2000.


*(மாமன்ற பொன்விழா சிறப்புமலரில் (2005) வெளிவந்த கட்டுரை)*

## இராஜ கோபுரம்



"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பன ஆன்றோர் வாக்கு. கோயிலிலே மிக உயர்ந்த அமைப்புடன் விளங்குவது ராஜ கோபுரமாகும். இதற்கு தூல லிங்கம் என்பது பெயர், (தூலம் – கண்ணால் பார்க்கக்கூடியது) யோகிகள். "பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்", என கோபுரத்தை குறிப்பிடுவர்.

சுப்பிர பேதாகமத்தில் "தூரஸ்ய சிகரே த்ருஷ்ட்வா யாவத் கைலாச பூதலம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கோபுரத்தில் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூரஇடமும் பூலோகக் கைலாசம் என்று அழைக்கப்படும்.

கோபுரம் மூன்று அடுக்குகள் கொண்டும் அமைந்துள்ளது. இது ஜாக்ரம், சொப்னம், சுசுப்தி எனும் மூன்றைக் குறிக்கும். அதுபோல் ஐந்து அடுக்கு ஐம்பொறிகளைக் குறிக்கும். ஏழு அடுக்கு ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பவையைக் குறிக்கும். ஒன்பது அடுக்கு ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றைக் குறிக்கும்.

*(இந்து மாமன்ற வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*

# வைரவ மான்மியம்

(அமரர்) சிவநெறிச்செல்வர் இரா. மயில்வாகனம்

**வை**ரவ மான்மியம் என்னும் தலையங்கம் இரண்டு சொற்களைக் கொண்டது. ஒன்று வைரவர். மற்றது மான்மியம். வைரவர் என்பது வடமொழியில் பைரவர் என்று உச்சரிக்கப்படுகிறது. மான்மியம் பெருமை என்னும் பொருள் கொண்டது.

வைரவக் கடவுளை பல நாமங்களால் அழைப்பார்கள்.



**சூடாமணி நிகண்டு**

"முத்தனே குமரன் பிள்ளை
மூடுவல் வெம் படையோன் காரி
சித்தன் கேத்திர பாலன்னே
செந்தொடைக் குரிய கோமான்
வித்தகன் ஞாளி யூர்தி
விறற் கருங்கு திரையாளி
வைத்த சீர்வடுக னின்ன
வைரவ நாமமே"

முத்தன், குமரன், பிள்ளை, முடுவற் படையோன், காரி, சித்தன், கேத்திர பாலன், செந்தொடைக்குரிய கோமான், வித்தகன், ஞானியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன் இப்பெயர்கள் காரணங் கொண்டும் இயல்பாகவும் வந்தன.

**அபிதான சிந்தாமணியில்**

கண்டா வைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர், விபூஷண வைரவர், மார்த்தாண்ட வைரவர், சுதந்திர வைரவர், சுவேச்சர வைரவர், உலோக வைரவர், உக்கிர வைரவர், பிரச்சயன வைரவர், நிர்வாண வயிரவர், பூஷண வைரவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

**நம் பெரியோர்கள்**

காலவைரவர், மஹாவயிரவர், க்ஷேத்திரபாலர், பிரும்ம சிரஸ்சேத மூர்த்தி என்று பலவாறு கூறுவர். வடுகதேவர், சட்டநாதர், நரசிம்ம வைரவர் என்பன தமிழ் நூல்களால் எடுத்தாளப்படும் பெயர்களாகும்.

**புராணங்களில் கூறப்பட்டுள்ள வைரவ மூர்த்தங்கள்:-**

**மஹாவயிரவர்**

ஒளி பொருந்திய உக்கிரமும், எண்கரங்களில் சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், அமிர்தம், கலாபம், வரம், அபயம் ஆகியவற்றைத் தாங்கியும் உள்ளவர். மரகதம் போன்ற நிறமுடையவர், சந்திரனைச் சிரசில் கொண்டவர். ஜடாமுடியும், மூன்று கண்களுமுடையவர் என்று சிற்ப சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இவரது வாகனம் சுவானம் (நாய்); ஆயுதம் சூலம்.

**காலவைரவர்**

கபாலத்தைக் கையில் ஏந்தியவர், காதுகளில் அழகிய குண்டலங்களை தரித்திருப்பவர், கையில் தண்டம் இருக்கும், கருமை நிறமுடையவர், சர்ப்பத்தைப் பூணூலாகக் கொண்டவர், போர்க் கோலக் காட்சியால் இடையூறுகளை மாய்த்து தன் பக்தர்களுக்கு இன்பமளிப்பவர்.

**உக்கிர வைரவர்**

காண்போரை மிரளச் செய்யும் உக்கிர வடிவமாய் இருப்பார். முகத்தில் கோபக்கனல் கொந்தளிக்க ஆவேசத்துடன் இருந்து பிரம்ம சிரச்சேதம் செய்தவரும் இவரே.

ஆலய சிற்பங்களில் காண்கின்ற உக்கிர வைரவர் எனப்படுபவர். ஜடாமுடி, தீச் சுடர், பயங்கர ஆயுதம் என்பனவற்றைக் கொண்டு இருப்பார்.

**வடுகநாதர்**

சுவான (நாய்) வாகனத்தை உடையவராய் அருள் பாலிப்பவர். சாதாரணமாக இப் பெயரையே பேசுவார்கள். காண்போர்க்கு எளிமையான முறையில் அருள் பாலிப்பார். வடுகநாதர் கருணைமிக்கவர். அட்சமாலை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்ட இவர் வாக்தேவியுடன் இருப்பார். தன்னை உள்ளன்போடு வணங்குபவர்களுக்குக் குறையாத அருளைக் கொடுப்பார். பல ஆலயங்களில் வடுகநாதருக்கு வேறான ஸ்தாபனமும், சிற்ப வேலை அமைந்த கோபுரங்களுமுண்டு. தஞ்சை, மதுரை, காஞ்சி, காசி இவைகள் விசேடம் பெற்றன. பிரமதேவர் செருக்கடைந்த காலத்து அவரது ஐந்து சிரங்களுள் ஒன்றைக் கிள்ளிய சிவன் திருவுரு.

**சட்டைநாதர்**

வைரவமூர்த்தியின் மற்றோர் வடிவம், நரசிம்ம உக்கிரத்தைக் குறைத்தவர். சட்டைநாதருக்கு தஞ்சை மாவட்டத்து சோழர்களினது பழைய கோயில்களில் சிற்ப படிமக்கோலங்கள் உண்டு. ஆவேசமான நரசிம்மத்தைக் கௌவி அதன் உக்கிரத்தை குறைந்த இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்ற பாணியில் சிற்பத்தைக் காணலாம். சீர்காழியில் தோணியப்பர் கோயிலில் வைரவரின் ஆபத்துத் தாரணமூர்த்தம் எனப்படுஞ் சட்டைநாதரைக் காணலாம். விஷ்ணு மூர்த்தியின் செருக்கடக்க எடுத்த நரசிம்ம சாபத் திருவுருவுக்குப் பின்பு விஷ்ணு மூர்த்திக்குத் தரிசனம் தந்த திருவுரு.

#### சீர்காழிப் புராணம்

*"துங்கமாமணித் தூணில் வந்து இரணியன் வலிதனை*
*வணங்கும்*
*சிங்கரத்து உரி அரைக்கு அசைத்து உலகு எலாம் தேர்ந்து*
*அளந்து அவன் மேனி*
*அங்கம் யாவும் ஓர் கதையதாய்க் கொண்டு அதன் அங்கியாய்ப்*
*புனைகாழி*
*சாங்கவார் குழைச் சட்ட நாயகன் துணைத் தாமரைச் சரண்*
*போற்றி"*

இவ்வாறு கூறுகிறது.

திருவண்ணாமலை, அருணாசலேஸ்வரர், ஆலயங்களில் உள்ள வைரவ சந்நிதி ஏகப்பிரபல்யமாக விளங்குகிறது. இன்றும் பெருமையுடன் விளங்குகிறார் அண்ணாமலை வைரவர். இது பார்ப்பதற்கு மிக அழகியது. சிற்பம், தஞ்சை மாவட்டம் பட்டீச்சுவரத்தின் ஆலயத்திலுள்ள வைரவ மூர்த்தியும், க்ஷேத்திரபாலபுரத்திலுள்ள மூர்த்தியும் மிக அழகானதாகும், பிரசித்தமானதும் கூட.

#### அஷ்ட வைரவர்

"பராக்கியம்" என்னும் நூல் எட்டு வைரவர்களின் சிறப்பைப் பற்றிக் கூறும். இவைகள் காலவைரவர், கல்பாந்த வைரவர், உக்குரோத வைரவர், கபால வைரவர், ஸம்ஹார வைரவர், உன்மத்த வைரவர், சண்ட வைரவர், உக்கிர வைரவர் என்னும் பெயர்களாகும். சென்னைக்கடுத்த திருவான்மியூரில் சந்நிதிகள் உண்டு. ஆலய பலிபீடத்தில் அட்ட வைரவர்கள் உறைவதால் பலிபீடத்தின் பூசையின் போது இவர்களுக்கும் பூசை உண்டு.

ஆலயங்களில் வைரவமூர்த்தி காவல் தெய்வமாக அமைந்துள்ளார். கோவிற் பூசைகள் எல்லாம் முடிந்து கடைசியாக இவரைப் பூசித்து இவ்வாலயத்தைக் காப்பாயாக என்று வணங்கி திறப்பை ஒப்புவிப்பதும் வழக்கமாயுள்ளது. இவற்றை விட முனீஸ்வரர் என்ற பெயரோடு அமர்ந்திருப்பதையும் காணலாம். ஆலயங்கள் திறந்து பூசிப்பதன் போதும் இவர் பூசிக்கப்படுகிறார்.

நதிதீரங்களில் நீராடச் செல்பவர்களும் முதலில் வைரவக் கடவுளை வணங்கியே நீராடச் செல்வார்கள்; ஆன காரணங்களால் காவல் தெய்வம் என்பது பொருந்தும்.

#### ஞானவைரவர்

சாதாரணமாக எல்லா இடங்களிலும் காணப்படும் கடவுளாவர். இவரை நாம் விநாயகரை வணங்குவது போல தரிசனத்துக்கு இலகுவாக்குகிறோம். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகத்துக்கு கர்த்தா என்று பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியதுமன்றி அவருடைய திருக்குமாரர்களுள் வைரவக் கடவுளும் ஒன்றென்றார். எவ்வாறாக இம் மூர்த்தம் உண்டாகியது என்பது அறியா வினாவாகும்.

ஒன்றாய், ஆதியாய், நிர்மலமாய், வேதங்களுமறிய முடியாத பரஞ்சுடராய், வெண்மதியும், புனைந்த குழைகளையுடைய பரம்பொருளாய், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளானவர். மாதவனும் மலரவனும் அறியமுடியாத ஒளிவளர் விளக்கு. பாரொடு விண்ணாய்ப் பரந்த பொருள். மாயையின் பிடியினின்று விலகமாட்டாதிருக்கும் எம்மனோர்க்கு எப்படி அறிய முடியும் இவரை.

நினைப்புமாய் மறப்புமாகி, நினைவினுக்கு எட்டா தொன்றாய், அனைத்துமாய் நின்று அருமறைக் கொழுந்தாய் உள்ளவர். கடுக்கையாங் கண்ணியோடு புனிற்று வெண் திங்கள் புனைந்த செஞ்சடை, அரவணிந்த அங்கம், புரமூன் றெரித்த புன்முறுவல், இவ்வாறாய சிவன் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவும், துஷ்டரை நிக்கிரகஞ் செய்யவும் எடுத்த மூர்த்தங்களுள் வைரவக் கடவுளுமொருவர் ஆவர்.

சிவன்என்னும்நாமம்தனக்கேயுரியசெம்மேனியெம்மான் என்றும் சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை என்றும் தேவ தேவனென்றும் பலவாறாகப் போற்றுவர். நிறை மலம் அனாதியின் நீங்கி நிற்றலின் இறைவன் என்றார். வேதங்கள் நான்கும் விரிவாக இவரின் பெருமையைக் கூறுகின்றன. வைரவக் கடவுள் என்ற பெயருடன் இவர் புகழ் கூறப்படுகின்றது.

கடவுள் நிறைந்த அன்பும், இன்பமும், தூய்மையும், ஆற்றலும் உள்ளவர். கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று சிறப்பு இயல்பு என்றும் கூறும் சொரூபலட்சணம். ஊரிலான், பேரிலான், குணமிலான் என்பதினாலே,

*"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி*
*மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்*
*ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்*
*ஒருர னல்லனோ ருவம னில்லி*
*அப்படியு மந்நிற மவ்வண்ணமு*
*மவனருளே கண்ணாகக் காணினல்லால்*
*இப்படிய னிந்நிறத்த னிவ் வண்ணத்த*
*னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே"*

என திருநாவுக்கரசு நாயனாரும் திருத்தாண்டகத்திலே கூறினார்.

இறைவனின் இரண்டாவது நிலை பொதுவியல்பு என்னும் தடத்த லட்சணம். இது ஆன்மாக்களுக்கு அருள் புரிய எழுந்தருளும் நிலை. "அறிதரு சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நின்றவன்" என்கிறார் சிவஞான சித்தியார்.

இறைவனை அருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத்திருமேனி என மூவகையுள் அடக்கலாம். நாதம், விந்து, சக்தி, சிவம் என்பன அருவத் திருமேனியுள் அடங்கும். சிவலிங்கம் அருவுருவத் திருமேனி. உருவத்திருமேனி போக வடிவம், கோரவடிவம், யோகவடிவம் என மூன்றாகும். இவற்றுள் சிவன் கோரவடிவமுடையவராய் ஆன்மாக்களுள் துஷ்டரை நிக்கிரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனஞ் செய்பவராய் உள்ளவரே நாம் கூறும் வைரவக்கடவுள், ஆன்மாக்களின் வினைகள் கழிவதற்கு உபகரிப்பது வீரட்டானம். இது பற்றி வீரட்டானத்துறை அம்மானே என்கிறார்.

காசி காண்டம் வைரவரின் பெயரை எடுத்தருளுகிறது.

*"காண்டலோடு மலர்க் கிழவனுள்ள மதனிற் கனல் கொளுத்தி*
*தூண்டுமுனிவு பிடித்துந்தவெனது புருவந்துணை நாப்பண்*
*நீண்ட சடையினொடும் புதல்வனலையோ நீயென்ன*
*மூண்டவெகுளி **வயிரவனை** முக்கட்கனியாண்டளித்ததுவே.*

ஒரு சமயம் பிரமாவுக்கு மயக்கம் காரணமாக அகந்தை யுண்டாகவே அவரின் அறியாமையைப் போக்குவதற்கு

வைரவமூர்த்தம் உண்டானது. இதன் விரிவை மான்மியத்தில் காணலாம்.

வைரவர் பொதுவாக நீலமேனியும், சிலம்பொலிக்கும் திருவடியும், பாம்புகள் பொருந்திய திரு அரையும், தலைமாலைகள் புரளும் திரு மார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கு இவைகள் ஏந்திய திருக்கரங்களும் மூன்று கண்களும் பெரிய கோரப்பற்கள் இரண்டும், சிவந்த சடையும், கோபச்சிரிப்பும், உக்கிரவடிவுங் கொண்டவர். சர்வ சங்கார காலத்தில் பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களின் தலைகளைக் கொய்து புவனங்கள் ஒடுக்கியவர். இக்காரணத்தினாலே கால வைரவர் என அழைக்கப்படுகிறார். வைரவ மூர்த்தத்தில் கால வைரவர், கற்பாந்த வைரவர், சங்கார வைரவர், உன்மத்த வைரவர், உக்கிர வைரவர், கண்ட வைரவர், ஞான வைரவர் என்பன காரணங் கருதி வந்தமைதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் :

*"தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்*
*சதுர் முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்*
*மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்*
*வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்*
*துன்னிய செஞ் சடை மேலோர் புனலும் பாம்பும்*
*தூயமா மதியுடனே வைத்த தோன்றும்*
*பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்*
*பொழிறிகளும் பூவணத்தெம் புனிதனார்க்கே.*

சதுர்முகனைத் தலையரிந்த தன்மை, வேழத்தினுரி விரும்பிப் போர்த்தமை என்பன வைரவக் கடவுளால் செய்யப்பட்டன என்பதை திருமுறைகளிலும் காணலாம். காசி காண்டத்திலும்

*"இமையாப் பறவையேற் றெகினப் பாகனுள்ளச் செருக்கினையும்*
*துமியாத் திருப்பாற்கடற் சேர்ப்பனுள்ளச் செருக்கும்*
*தொலைத்தியென*
*அமையா வெகுளிக்கனல் கொள்ளுங்குமர லோன்னைந்தாந்*
*தலையதனை*
*கமை **தீக்காரி** தன்னிடக்கை யினுகிராற் கிள்ளிக் களிப்புற்றான்."*

காரி என்னும் வைரவ நாமமும், உகிராற் கிள்ளியதும் பெறப்பட்டன.

காவற் கடவுளாகக் கிராமங்கள் தோறும் சிறந்து விளங்கும் வைரவப் பெருமானின் பெருங்கருணையைப் போற்றி நிற்கிறோம். காசி, வைரவப் பெருமான் தனித்து ஆளும் திருத்தலமாக விளங்குகிறது. இதை காசியின் தனிச்சிறப்பு, காசிகண்டத்தில் வைரவர், என்னும் தலையங்கங்களில் சுவைக்கலாம். பிள்ளையாரைப் போல வைரவப் பெருமானும் வேம்பு, ஆல், மா முதலிய மரங்களிலும் சூலாயுதத்தை அறிகுறியாக வைத்து வணங்கப்படுபவர்.

அக்கால அந்நியராட்சியால் நாம் துன்பமுறும் பொழுது காவற் தெய்வமாக விளங்கியவர் வைரவரே, அன்றியும் பிரமஹத்தி தோஷநிவிர்த்திக்கும் வைரவ வணக்கம் சிறந்தது என்பது புராணங்கள் வாயிலாக அறியுமாறுள்ளது.

பொங்கல், படையல், மடைபரவுதல், வடை மாலை சாத்துதல், செவ்வரத்தம் பூமாலையணிதல் என்பன எல்லா ஆலயங்களிலும் பொதுவாக நடைபெற்று வருவதைக் காணலாம். சித்திரைப் பரணி நாள் வைரவரின் விசேட நாளாகும். வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமை நாட்களும் பிரதானம். வைரவர் பூசை நடக்கும் போது இடைமறித்தல், குறுக்கே போதல், கர்ப்பிணிகள் ஆலயங்களை வலம் வருதல் என்பன தவிர்க்கப்பட்டன.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பூசை செய்ய சமயாசாரியர்கள் பயந்து மறுத்தனர். அதனால் சமயகுருமாராக பூசாரி என்று அழைக்கப்படுவோர் பூசை செய்தார்கள். இக்காலத்திலும் பூசாரியர் என்று அழைக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

வைரவ உபாசனை வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்க வல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை ஆகிய இருள் கவ்விவரும் நாட்களில் மீண்டும் புத்தொளியும் புதுவாழ்வும், பெற வடுக நாதனை உபாசித்து வணங்க வேண்டியது அவசியமாகும். பரதகண்டத்திலுள்ள வைரவ சந்நிதிகளுள் காசியில் உள்ள கால வைரவர் கோயில் மிகப் பிரசித்தி பெற்றது. காசிக்குச் செல்லும் எவரும் அப்பெருமானை வணங்காமல் வருவதில்லை. நாயன்மார்களது திருமுறைகளிலும் சிவனது மூர்த்தமாக வைரவக்கடவுள் வர்ணிக்கப்பட்டுள்ளார்.

காசியில் பாபத்துக்கு தண்டனை கொடுக்க இயமதர்ம ராசாவுக்கு அதிகாரங்கிடையாது. காசியில் யாராவது இறந்தால் யமவாதனை கிடையாது. காசியில் வைரவர்தான் சிட்ஷகர். கால வைரவர் காசிநகரின் சேனாதிபதி. வைரவ உபாசனை உக்கிரமானது. விரக்தன், கபாலிக்கன், வைராகி போன்ற சாதகர்களால் சித்தி செய்யக்கூடியது. இது தேவதா உபாசனை. எல்லோரும் செய்யக்கூடாது. வேதங்களில் ரிக்வேதம், அதர்வணவேதம் என்பன வைரவரைப் பற்றி விரிவாகக் கூறும்.

காசி காண்டத்தில் வைரவரின் சரித்திரம் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. பிரமன் சிவனை தூஷித்ததினால் வைரவராக வந்து அவன் தலையைக் கிள்ளி எறிந்து விடுகிறார். அதனால் பிரமஹத்தியைப் போக்குவதற்கு உலகம் பூராவும் அலைகிறார்.

இவ் வைரவர் நர்மதா நதிதீரத்தில் ரிஷிகளிடம் சென்று தன் குறையை முறையிடுகிறார். முனிவர்கள் அது சமயம் 'காசி போவீராகில் உம் பிரமஹத்தி தீரும்' என்று கூறி என்று கூறி 'காசி எங்கிருக்கிறது என்று கேட்பாயானால் ஆனந்த கானம் என்ற ஆரணியம் இருக்கிறது. அதற்கே காசி என்று பெயர்' என்று அநேக அடையாளங்களைக் கூறினார்கள். கடைசியாக 'எந்த இடத்தில் உம் கையில் இருக்கும் கபாலம் தெறிந்து விழுகிறதோ அதுதான் காசி என்று புரிந்து கொள். கபாலம் விழுந்தால் பிரமஹத்தி நீங்கி விட்டது.' என்று எண்ணுவாயாக. கபாலம் கையில் இருப்பதால் கபாலவைரவர் என்று அழைப்பார்கள். எல்லாமும் இப்படியே நடந்தது. கபாலம் தெறித்து விழுந்தது. உடனே இதுதான் ஆனந்த கானம் என்று தெரிந்தார். விசாகமோசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விஸ்வநாதரைப் பிரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்யப் பகவான் விஸ்வநாதர் வைரவரை அனுக்கிரத்து இன்று முதல் காசியில் இருந்து கொண்டு காலன் அதிகாரம் இங்கு செல்லாததலால் காலனின் காரியத்தை நீயே கவனித்துக்கொள்" என்று சொல்லி காலவைரவர் என்ற பெயரையும் வைத்து காசிக்கு சேனாதிபதியாக்கினார்.

வைரவர்தான் பிரளய காலத்தில் சகல ஜகத்தையும் ஸம்ஹாரஞ் செய்து வந்தார் என்ற விஷயத்தை

ஹரத்ததாசாரியார் சருதிஸிரித்திமாலை என்ற கிரந்தத்தில் கூறி இருக்கிறார். அதன் சாராம்சம் எல்லோராலும் வைரவ உபாசனை தீவிரமாகச் செய்யக் கூடாது என்பதாகும். எனினும் தீமைகள் அகல பூஜிக்கப் படவேண்டிய தெய்வநிலைகளில் பூஜிக்க வேண்டும்.

காசி கண்டத்தில் (காண்டம் இக்காலத்தில் கண்டம் என்பன வழங்கப்படுகிறது) காலவைரவர். கந்தபுராணத்தில் கபாலீஸ்வரர். காசியின் தனிச் சிறப்பு என்பன இலகுவாக விளங்கக் கூடியனவாக உள்ளன.

படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றவர்களாகிய திசைமுகனும் திருமாலும் இருந்து வந்தாலும் வைரவரின் அருட்கடாட்சம் அனைவரும் அறிய வேண்டும் என்று சிவன் எண்ணியதால்

*"தீய தன்றடுஞ் செயலும் நல்லரும்*
*ஆயின் ஆவிகள் அழிந்துந் தோன்றியும்*
*ஓய்வி லாதுழன் றுலைவு றாமலே*
*மாய்வு செய்திறை வருத்தம் மாற்றலாம்"*

என்னும் கந்தபுராணச் செய்யுளை நோக்கும் போது பிரமதேவனின் வரம் பெற்று அவர் வாக்குக் கிணங்குவேன் என்று முடிவு செய்த கயாசுரன் சிவனைக் கண்டவுடனே வாக்குறுதியை மறந்து போரிட்டான். இதனால் தோல் உரிபட்டான். வைரவக் கடவுளின் பெருமையை விளக்க இக்கதை வேண்டப்பட்டது.

திருஇசைப்பாவில் திருமாளிகைத் தேவர் சிவனின் பெருமையினால் வைரவரைத் தொடர்ந்துள்ளார்.

*"தக்கனற் றலையு மெச்சன வன்றலையுஞ்*
*தாமரை நான்முகன் றலையு*
*மொக்க விண்டுருள வொண்டிருப்புருவ*
*நெறித் தரு ளியவுருத் திரனே*
*அக்களி புலித்தோ லாடைமே லாட*
*வாடப் பொன்னம்பலத் தாடுஞ்*
*சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்*
*தொண்டனேன் தொடருமா தொடரே"*

என்றார்.

மணிவாசகப் பெருமான் திருப்பொற்சுண்ணத்தில் இடம் கொடுக்கிறார்.

*"அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி*
*அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்*
*கயனதனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்*
*காலனைக் காலால் உதைத்தல் பாடி*
*இயைந்தன முப்புரம் எய்தல் பாடி*
*ஏழை அடியோமை ஆண்டு கொண்ட*
*நயந்தனைப் பாடி நின் றாடியாடி*
*நாதர்க்குச் சுண்ணம் இடித்துநாமே"*

அயன்தலை கொண்டாடல், கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் என்பன இடம் பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற திருப்பிரமபுரம் முதலாந் திருமுறையில் நாலாம் பா.

*"விண் மகிழ்ந்தமதி லெய்தது மன்றி விளங்குதலை யோட்டில்*
*உண்மகிழ்ந்து பல தேரியவந்தெ துள்ளங் கவர்கள்வன்*
*மண்மகிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்தவரைமார்பிற்*
*பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே"*

"விளங்கு தலையோட்டில் உண்மகிழ்ந்து, பலி தேரியவன்"

*"ஊனியன்ற தலையிற் பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்*
*கானியன்ற கரியின்னுரி போர்த்துழல்கள்வன் சடைதன்மேல்*
*வானியன்ற பிறை வைத்த வெம்மாதி மகிழும் வலிதாயத்*
*"தேனியன்ற நறுமா மலர் கொண்டுநின் றேத்த தெளிவாமே"*

"கானியன்ற கரியின்னுரி போர்த்துழல் கள்வன், தலையிற் பலியேற்றல்"

மூன்றாம் பதிகம், ஆறாம் பா

*"ஆறணி செஞ்சடையானழகார் புரமூன்றுமன்று வேவ*
*நீறணியாக வைத்தநிமிர் புன்சடையெம் மிறைவன்*
*பாறணிவெண்டலையிற் பகலே பலியென்று வந்துநின்ற*
*வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே"*

"பாறணி வெண்டலையிற் பகலே பலி"
(நூற்றி நாலாம் பதிகம், மூன்றாம் பா)

*"செய்யதிரு மேனி மிசை வெண்பொடியணிந்து கருமா*
*னுரிவை போர்த்*
*தைய மிடு மென்று மடமங்கை யொடகந் திரியுமண்ணலிடமாம்*
*வையம்நிலை மாறிடினுமேறுபுகழ்மிக் கழிவிலாத வகையார்*
*வெய்யமொழி தண்புலவருக்குரை செயாதவர் திருடியே."*

"கருமானுரிவை போர்த்தையமிடுமென்று மடமங்கை யொடகந்திரியும்"

(பதிகம் முன்னூற்று முப்பத்தாறு, ஆறாவது பா)

இவைகளினால் வைரவ மூர்த்தம் சிவாம்சம் உடைய தென்பது தெளிவாகிறது.

திருநாவுக்கரசு நாயனார் ஆறாவது திருமுறை திருவாவடுதுறைப் பதிகம்,

*"கோணாரணங்கத் தோள் மேற்கொண்டு*
*கொழுமலரான் தன் சிரத்தைக் கையிலேந்திக்*
*காணார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்*
*கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்*
*நாணாருமக் கோர் வினைக் கேடனே*
*னல்வினையும் தீவினையும் மெல்லா முன்னே*
*ஆனாயடியேனை யஞ் சேலென்றா*
*யாவடு தண்டுறை யுமமரரேறே"*

"கொழுமலரான் சிரத்தைக் கையிலேந்தி"

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் திருவெஞ்சமாக்கூடல் என்னும் திருப்பதிகம், நாற்பத்திரண்டாம் பா

*"கடமாகளியானை யுரித்தவனே கரிகாடிட மாவனல்வீசி நின்று*
*நடமாடவல்லாய் நரையேறுந்தாய் நல்லாய் நறுங் கொன்றை*
*நயத்தவே*
*படமாயிரமாம் படுத்துத்திப்பைங்கண்பகுவாயெயிற்*
*றேடழலேயுமிழும்*
*விடவாரரவாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடி யேனையும்*
*வேண்டுதியே"*

"கடமாகளியானை உரிபோர்த்தவனே"

இவ்வாறே திருமுறைகளிலும் வைரவமூர்த்தியின் நினைவினை குரவர்கள் நால்வரும் எடுத்தாண்டுள்ளார்கள்.

திருமுதுகுன்றப் பதிகம் நாற்பத்திமூன்று. பா மூன்று

*"தொண்டர்கள் பாட விண்ணோர்கள் தவுழிதர் வீர*
*பண்டகந் தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே*
*கண்டகர் வாளிகள் வில்லிகள் புறங்காக்குஞ்சீர்*
*மொண்டகை வேள்விமுழக்கருமுது குன்றரே"*

இப்பதிகத்தில் பண்டகந்தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே" என்று காசி வாசியாயிருந்து பலியேற்றது ஞாபகமாகிறது.

இப்பதிகத்தில் எட்டாவது பா

*"அந்நி திரிந்தடியாரு நீருமகந்தோறும்*
*சந்திக டோறும் பலிக்குச் செல்வது தக்கதே*
*மந்தி கடுவனுக் குண்பழநாடி மலைப்புறம்*
*மூந்தியடி தொழ நின்ற சீர்முது குன்றமே"*

இங்கே "சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்கதே" என்னும் இடத்தில் பலியேற்றது படிப்புக்குரியதாகும்.

திருக்கச்சியேகம்பம் என்னும் திருப்பதியினை நினைந்து பாடும்போது பதிகம் அறுபத்திஒன்று பா மூன்று

*"திரிபுமுப்புரந்தீப்பிழம்பாகச் செங்கண்மால் விடை மேற்றிகழ் வானைக்*
*கரியினீருரி போர்த்து கந்தானைக் காமனைக் கனலா விழித்தானை*
*வரிகொள்வெள்வளையாளுமை நங்கை மருவியேத்தி வழிபடப் பெற்ற*
*பெரியகம்பனை யெங்கண்பிரானைக் காணக் கண்ணடியேன் பெற்ற வாறே.*

இப்பாவில் "கரியினுரி போர்த்தானை" என யானை உரிபோர்த்தல் காணப்படுகிறது. இவ்வாறே பற்பலவான பதிகங்களின் பாக்களில் வைரவமூர்த்தம் போற்றப்படுகிறது.

இனி நாம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் வைரவரைப் பற்றி எப்படி ஞாபகப்படுத்துகிறார் என்பதைப் பார்ப்போம்.

*"இல்லாளே முப்பத்திரண்டறமுஞ் செய்திருப்பச்*
*செல்லார் பொழிற் காசிச் செல்வனார் - மெல்லப்*
*பரக்கின்ற புண்ணீர் படுதலை கொண்டையம்*
*இரக்கின்ற வாறென் சொலகேன்"*

இவ்வெண்பாவில் இல்லாள் உமாதேவியார். இவர் நிலை பொருளில்லாதவராய் இருப்பவர் எனக் கருதுகிறார். செல்வனார் அகிலேசர் செல்வமுடையவர் எனக் கருதுகிறார். புண்ணீர் - இரத்தம், ஐயம் - பிச்சை எனப் பொருள் கொண்டு பொருளில்லாதவளான மனைவி முப்பத்திரண்டு அறங்களையும் செய்யும் செல்வராகிய கணவர் தலையோட்டால் பிச்சை யெடுப்பது என்ன வியப்பு என்ற படி தலையோட்டால் இரத்தப் பிச்சையெடுத்த காசி நகரில் சிவனே வைரவமூர்த்தமாக வந்தது பிரமஹத்தி தோஷத்தை நிவிர்த்தி செய்வதற்காகவே.

"பங்கயாசனன் ஒரு தலை கிள்ளியது வெளிப்படையாயிற்று" இன்னும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

காசியில் பாவஞ் செய்தவருக்கு யமதண்டனை இல்லை என்பதும் வைரவ தண்டனை மட்டும் உண்டு என்பதும் புராண வரலாறுகள். இதைத் தலைவி கூற்றாக,

*"ஆமோ வவிழுத்தத் தையரே பெண்பழிவீண்*
*போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ*
*தேமோது கொன்றை செழுந்தாம நல்காநீர்*
*தாமோ தருவீருமது பரந்தாமமே (665ம் பா)*

"வயிரவர் தஞ் சாதனமும் பொய்யாமோ" என்று கூறுகிறார். திருநாகைக்காரோணப் புராணம் சுந்தரவிடங்கற் படலத்தில் களம் த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

*"திரிபுர மெரித்தவாறுஞ் சிலைமதிற் காய்ந்தவாறுங்*
*கரியத ளுரித்த வாறுங் காலனைக் காய்ந்தவாறும்*
*விரிமலர்க் கிழவன் சென்னி விழுத்திய வாறுநெய்த் தோர்*
*அரியுடயற் கவர்ந்த வாறும் மனத்தொடு வகையோர்பாட*

எனக் கூறுகிறார் சித்தாந்த சைவமணி த. சி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

திரிபுர மெரித்தது அதிகை வீரட்டானம். சிலைமதிற் காய்ந்தது குறுக்கை வீரட்டானம். கரியதள் உரித்தது வழுவை வீரட்டானம். மலர்க்கிழவன் சென்னி விழுத்தியது கட்டியூர் வீரட்டானம். நெய்த்தோர் அரியுடற் கவர்ந்தமை வைரவக் கோலத்துடனாகும்.

சிவன், விநாயகர், முருகன், திருமால் ஆகியோருக்கு புராணங்கள் இருப்பது போன்று வைரவருக்கு ஒரு புராணமும் இல்லை.

முதலியார் திரு. செ. இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத் தகவல்களையும் அறிவோம்.

அந்நியர் ஆட்சியில் நாம் துன்பமுற்றபோது காவற் தெய்வமாக விளங்கியவர் வைரவரே என்பது தெளிவாகிறது. "பெறண்டி" என்று சிங்கள மொழியிலும் அழைக்கப்பட்ட, வைரவ ஆண்டி என்று தமிழ் மொழியிலும் அழைக்கப்பட்ட வைரவ கோயில் ஒன்று 1575 இல் இருந்ததென்றும் இதைப் போர்த்துக்கேயர் சூறையாடி அழித்தனர் என்னும் முதலியார் குறிப்பிட்டுள்ளார். (BERENDA = பெறண்ட) என்னும் சிங்கள மொழி பாவநிவிர்த்தி என்றும் பொருளுடையது. முதலாம் இராசசிங்கன் செய்த பாவங்களின் நிவிர்த்திக்காக சிவப்பிரதிஷ்டை செய்து இக்கோயிலைக் கட்டினான்.

பெறண்டி என்று சிங்கள மொழியிலும் வைரவ ஆண்டி என தமிழாலும் அழைக்கப் பெற்ற வைரவர் கோயில் ஒன்று சீதவாக்கையில் இருந்ததென்றும் அது போர்த்துக்கேயரால் அழிக்கப்பெற்றதென்றும் முதலியார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கற்பாலது. இராசசிங்கன் தான் செய்த பாவங்களுக்கு யாது பிராயசித்தஞ் செய்யலாமென பிராமணர்களைக் கேட்க சிவப்பிரதிஷ்டை செய்தால் அப்பாவம் ஒழியுமென அவர்கள் உறுதி கூறி அதன் நிமித்தமாக அப்பாரிய கோயிலைக் கட்டினான் என்று யாழ்ப்பாணச் சரித்திரம் (பக்கம் 131) சொல்கிறது.

# திருத்தலங்களில் வைரவப்பெருமானின் மகத்துவம்

1. கந்தபுராணம்

*பரமனை மதித்திடாப் பங்க யாசனன்*
*ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்*
*குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்*
*புரிதரு **வடுகனைப்** போற்றி செய்குவாம்.*

முன்னொரு காலத்தில் சிவபெருமானை அவமதித்த தாமரை மலர் ஆசனனான பிரம்ம தேவனது ஒப்பற்ற நடுத்தலையைக் கிள்ளி மற்றைய தேவர்களது உதிரத்தையும் கர்வத்தையும் வாங்கிக்கொண்டு அவர்களுக்குத் தண்டனை புரிந்த வைரவக்கடவுளைத் துதிப்போம்.

*வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு*
*மஞ்சனப் புகையென வால மாமெனச்*
*செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்*
***கஞ்சுகக் கடவுள்** பொற்கழல் களேத்துவாம்.*

கடுங்கோபமுள்ள வடவாமுகாக்கினியானது தன்மீது போர்த்துக் கொண்ட கருநிறமமைந்த புகையைப் போலவும் ஆலகாலத்தைப் போலவும், சிவந்த பிரகாசமுடைய திருமேனியின் மீது விசேடித்த சிறப்பமைந்த நீலமணியின் நிறம் வாய்ந்த சட்டையணிந்துள்ள வைரவக் கடவுளின் பொன்மயமான திருவடிகளைத் துதிப்போம்.

2. பழைய காஞ்சிபுராணம்

*கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா*
*லரிபிரமர் கூடிவீணின்*
*மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு*
*வரை மிகவும் வெறுக்கு நாளி*
*லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெருக்கி*
*யினிதருளே செய்யுங்*
***கச்சிவடு கக்கடவுண்** மூச்சிகை வேற்*
*படையினையே கருதிவாழ்வாம்.*

அஃறிணை உயிராகிய அன்ன, வராகப் பிறப்படைந்ததனால் பிரம்ம விஷ்ணுவும் சேர்ந்து சண்டையிட்டுப் பகைத்து ஒருவருக் கொருவர் மிகவும் வெறுத்துக் கொள்ளும் நாளில் அவர்களுடைய கர்வத்தை விடும்படியாக, நெருக்கியும் தாக்கியும் திருவருள் புரியும் காஞ்சி வடுகக் கடவுளின் முத்தலைச் சூலாயுதத்தினைப் போற்றுவாம்.

3. திருவாவடுதுறை புராணம்

*காலன் மார்பிற் கான்மலர் நீட்டிய*
*சீலன் கோயிற் திறமிகழ்ந் தோர்களைச்*
*சூல மேற்றுஞ் சுழல் விழிக் **கேத்திர***
***பாலன்** பொற்பதம் பற்றிப் பணிகுவாம்.*



எமனுடைய மார்பு முறியும்படி மலர்போன்ற காலைத்தூக்கி நீட்டியுதைத்தருளிய குணசீலனாம் வடுகக் கடவுளின் கோயிற் பெருமைகளை இகழ்ந்து பேசியவர்களைச் சூலாயுதத்தால் குத்தும் சுழல் கண்ணனாகிய வைரவக்கடவுளின் பொன்டிகளைப் பணிவோம்.

4. காஞ்சிபுராணம்

*எளியரை வலியர் வாட்டின் வலியரையிருநீர் வைப்பி*
*னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே*
*தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்*
*வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வோம்.*

கடல் சூழ்ந்த உலகத்தின் கண் விசுவாசமில்லாமல் எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் பார்த்து அடிக்கும் என்னும் பழமொழிக்கிணங்க மாவலி தலைமேல் கால் தூக்கிய வாமனனை அழித்து அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட கச்சிக்காவலரும் காருண்ய மூர்த்தியுமான வயிரவமூர்த்திக்கு அன்பு செலுத்துவோம்.

5. திருவானைக்கா புராணம்

*உலக மளித்தல் சுதந்தர மன்றுவண*
*முயர்த் தோர்க் கெனவ வன்சே*
*யிலகு முருவம் பொடித்த வன்பா*
*லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்*
*றலர்மெல் லணையாற் கெனவவனை*
*யரங்கத் **திசைமாமு கனாக்கிப்***
*பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்*
*புகுந்தோன் பதம் பணிவாம்.*

கருடக் கொடியோனாகிய மகா விஷ்ணுவுக்கு உலகம் அளித்து பாதுகாத்தல் சுதந்தரமானதன்றென்றும் கூறி உயிர்களைப் படைப்பதும் பதுமனுக்குச் சுதந்தரமான தன்றென்று பிரம்மதேவன் தலை அழிய நான்முகமுடையவனாக்கி, பலரும் அஞ்சச் சிந்துமவ் இரத்தத்தில் பிச்சையெடுத்தோனாகிய முழு நீற்றுருவ வைரவ மூர்த்தியின் பாதம் பணிவாம்.

*கோணா ரணங்கத் தோண் மேற் கொண்டு*
*கொழுமலரான் தன்சிரத்தைக் கையிலேந்திக்*
*கானார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்*
*கங்காள வேடரா யெங்குஞ் செல்வீர்*
*நானா ருமக்கோர் வினைக் கேடனே*
*வல்வினையுந் தீவினையு மெல்லாமுன்னே*
*ஆனா யடியேனை யஞ்சே லென்னா*
*யாவடு தண்டுறையுறையு மமர ரேறே.*

திருமுறை 6வது

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

இத்திருத்தாண்டகத்திலும் "கொழுமலரான்றன் சிரத்தைக் கையிலேந்திக் கானார் களிற்றுரிவைப் போர்வைமூடி" இரண்டு திருவிளையாட்டை இயற்றிய சிவனே வைரவமூர்த்தியாக இயற்றினார் என்பது வெள்ளிடை.

### 6. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

*தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்*
*கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி*
*யருணநீர் பலிக்கிமையோர் நடுங்கவலம்*
*வந்து மாற்காவி நல்கி*
*மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக*
*முடுக்கையிவை வயங்க வேந்திக்*
*கருணைமறம் பூண்டெழில் செய்கடைஞாழல்*
***வயிரவரைக்** கருதி வாழ்வாம்*

செந்தாமரையில் வாழ் பிரம்மனுடைய உச்சிமுடிக் கபாலத்தை உள்ளங்கையிலேந்திக் கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம் வரும் படியாகச் சூரியோதய பலிப்பிச்சை எடுத்துத் திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத்தக்க மூவிலைச் சூலமும் மாணிக்கமுடைய பாம்பும் உடுக்கையுமாக இவை விளங்கத் தாங்கி மறக்கருணை பூண்டு, கொன்றைப் பூவணியும் வைரவமூர்த்தியைக் கருதித் துதிப்போம்.

### 7. திருச்செந்தூர் புராணம்

*கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா*
*னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே*
*மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்*
*கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம்.*

கிளியைப்போல வேதாத்தியனம் செய்யும் பிரம்மதேவனுடைய ஐம்முகத்தில் ஒரு தலையற்றுவிழக் கிள்ளி மேகத்தினும் அதிகமான கருநிறங் கொண்ட யானைத்தோல் போர்த்துக் கொள்ளும் வைரவ மூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றுவோம்.

### 8. கடம்பவனப் புராணம்

*கருதய லளினதபர னெற்றியிற்றோன் றிச்சூல கபாலமேந்தி*
*வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாய ண்டதத்து வங்கண்மாற்றி*
*பரிசரும கஞ்சு கியாய் வேதவெகி னூர்த்து முன்போல வுண்டாக்கி*
*யிருமை பெறக் **காத்தருளுங் கேத்திரபாலன்** றிருத்தா ளேத்தல் செய்வாம்.*

உமையம்மையின் நாயகராம் பரமசிவன் நெற்றியில் தோன்றிச் சூலமேந்தி பிரமனுடைய கபாலத்தையேந்தி நரசிங்க மூர்த்தியின் உடலைக்கிழித்து அதன் தோலை இடுப்பில் உடையாக அணிந்து வயிரவன் என்னும் பெயரைத் தாங்கி அண்ட தத்துவங்களை மாற்றியமைத்து சீவான்மாக்களை இருமை பெறக் காத்தருளும் கேத்திர பாலனாம் வயிரவ மூர்த்தியைப் போற்றி வணங்குவாம்

### 9. கடம்பர் கோயிற்புராணம்

*கயிரவ நான்மலர்க் கவின்க ணார்மயற்*
*செயிரவ நாடொறு மியற்றி யேதிரி*
*யுயிரவ நானென வொறாது காத்தருள்*
***வயிரவ நாதனை** வணங்கி வாழ்த்துவாம்.*

ஆம்பற் பூவைப் போலும் அலங்காரக் கண்களையுடைய மாதர்களின் நோயை எந்நாளுமே யுண்டாக்கித் திரியும் மனத்துள் நான் எனது என அலையாமல் இருக்கக் காத்து இரட்சிக்கும் வயிரவக்கடவுளை வணங்கி வாழ்த்துவாம்.

### 10. புலியூர்ப்புராணம்

*விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா*
*புரத்தினிது மேவினோர்கண்*
*மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற்*
*சூலத்தின் மருவ வைத்தே*
*யுதிப்பாலன்னையர் முலைகண் மீட்டருந்தா*
*வகை மூத்தியுதவுந்தில்லை*
*பதிப்பால்வயிரவன்றன் பாதசாரோ குகங்களென்றும்*
*பரவி வாழ்வாம்.*

விதியால் வந்த படைத்தலான பிறவி வினையைத் தவிர்க்கும் புலியூரின் கண் வாழப்பட்டவர்களுக்கு மதிப்பில்லாமல் துன்புறுத்தும் மலமாயா கன்மத்தை மூன்றிதழ்களுடைய சூலாயுதத்தில் அடக்கி மீண்டும் பிறந்து தாயினர் முலைப்பாலை உண்ணாவண்ணம் பதமுத்தியை உபகரிக்கின்ற தில்லையம்பலத்து வைரவக் கடவுளின் பாதாம்புயங்களை என்றைக்கும் போற்றி வாழ்வாம்.

### 11. சீர்காழிப் புராணம்

*துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்*
*சிங்க வேற்றுரி யரைக்கசைத்து லகெலாந் தோந்தளந்த வன்மேனி*
*யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத னங்கியாப் புனைதாழிச்*
*சங்க வார் **குழைச் சட்டை நாயகன்**றுணைத் தாமரைச் சரண் போற்றி.*

நவரத்தினங்கள் பதித்த தம்பத்தைப் பிளந்து கொண்டு வந்து இரணியன் வயிற்றைக் கிழித்து அவன் புயவலிமையை வாங்கும் நரசிங்கத்தைக் கொன்று, அதன் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தவரும் ஈரடியாலே மூவுலகளந்தோனாகிய வாமனன் உடல் உறுப்புக்களையெல்லாம் ஒரு கதாயுதம் கொண்டும் தோலை உடையாக உடுத்தவருமாகிய சீகாழிச் சங்கின் கவச குண்டலராகிய சட்டை நாயகருடைய இரண்டு பாதாரவிந்தங்களுக்கும் வணக்கம்.

### 12. திருப்பூவணப் புராணம்

*அரிபிரம ரகந்தை கெட வண்டங்க*
*ளுடைத் தெரிய மங்கிக் கோட்பட்*
*டுரியபல வுலகமெலா மொழிந் திடுநா*
*ளவர்கடம துடன் மேற் கொண்டு*
*குருதிவாய் கொப்பளிங்குங் கூரயின்மூ*
*விலைச் சூலங்கொண்ட திண்டோட்*
*கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைப்*
*புரப்பக் கைகூப்புவாமே.*

ஆகாயமெல்லாம் பற்றி எரியும் அக்கினிச் சுவாலைப்பட்டு சுந்தரமான பல உலகங்களும் ஒழித்திடுங் காலத்திலே பிரம்ம விஷ்ணுக்களின் கர்வம் கெட்டொழியும் படியாக அவர்கள் தம் உடல்மேல் பாய்ந்து, இரத்தத்தைச் சொரிவிக்கும் கூரிய வேலும்

மூவிலைச் சூலமுங் கொண்ட (மலைபோலும்) புயவலிமையுடைய வடுகக்கடவுள். நம்மைக் காக்கும் படியாக நாம் அவருக்குக் கைகூப்பி அஞ்சலிப்போம்.

### 13. அவிநாசிப் புராணம்

*அஞ்சுகனை யாதிலகு மாடரவக்*
*கங்கணனை யகலும் வானில்*
*விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை*
*வாசியென விரைந்து தாவும்*
*பைஞ்சுகளை யேயெரித்த புக்கொளியா*
*ரெயில் காவல் பரிக்கும் வீரக்*
*கஞ்சுகளை வேணிமலர்க் கிஞ்சுகனைப்*
*பரசுகனைக் கழறல் செய்வாம்.*

அழகிய சுகங்குறையாது விளங்கியாடும் அரவாபரணனாய் பரந்த ஆகாசத்தின் மிகுந்த மழைபோலும் திருவருளுடைய திருமேனியனாய் பாணம் விடுத்துக்கொண்டே சமீபத்து வரும் மன்மதனை எரித்த சிவபிரானுடைய எல்லைக்காவல் காக்கும் வீரவைரவனாய் விளங்கும் சிவந்த மலர் அணிந்த சடாதரனாம் பரமசுகனைத் துதிப்போம்.

*தன்னடியார்க் கருள்புரியுந் தகவு தோன்றுஞ்*
*சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்*
*மின்னனைய நுண்ணிடையாள் பாகன் தோன்றும்*
*வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்*
*துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்*
*தூயமா மதியுடனே வைத்த தோன்றும்*
*பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்*
*பொழி நிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.*

திருமுறை திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்
திருப்பூவணம் 34 ம் பக்கம்

திருப்பூவணத்தை நினைந்து தோத்தரிக்கும் போது திருநாவுக்கரசு நாயனார் "சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்" என்றார். "வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த தோன்றும்" என்றவை நினைவுக்கு வரவேண்டியன.

இங்கேயும் வைரவக்கடவுள் குறிக்கப்பட்டமை காண்க.

### 14. பவானி கூடற் புராணம்

*பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுள்ளங்*
*கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேறா*
*வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்*
*வரிதிலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்*

ஐம்முகம் பொருந்தி உள்ளதால் சிவபெருமானென்று கருதித் கர்வித்தவனும் பிரணவத்துக்குப் பொருள் சொல்லாதவனும் நீதானென்னக் கூறிப் பிரமனின் ஒரு தலையை நகத்தினால் கிள்ளி திருமால் உதிரத்தை வாங்கும் மூவிலைச் சூலாயுத பாணியனாகிய வைரவனை வணங்குவாம்.

### 15. திருவோர்த்தூர் புராணம்

*வேரி மலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை*
*நகநுதியால் வீட்டி யுற்ற*
*சோரிமலர் தலை நிலத்திற் பாயாதச்*
*சிரத் தேற்றுத் தொடர்ந்து போந்து*
*வாரிமலர் கண்வளர்மா னெற்றி பெற்றிக்*
*குருதிகொடு மமதை நீக்கும்*
*காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்*
*கூப்பி நிதம் கருதி வாழ்வாம்.*

செங்கமலாசனனாகிய பிரம்மதேவனுடைய தலைகளில் ஒன்றை நகத்தினாற் கிள்ளி ஒழுகிய இரத்தம் பூமியில் விழாமற் படி அம்பில் கோர்த்துக் கொண்டு அதே விரைவில் போய்ச் சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமால் நெற்றிக்கிலக்காக விட்டு மூளையைப் பேர்த்துக் கர்வத்தைப் போக்கும் வைரவருடைய மலர்ப்பாதங்களிரண்டையும் எந்நாளும் இரு கரங்களாலும் கூப்பி வணங்குவாம்.

### 16. மருதூர்ப் புராணம்

*கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று*
*வாய் மூடுவற் குதிரை யானைப்*
*பாணியிற்கங் கணம் புனைந்த வுகரமணி*
*வெயில் விரிக்கும் பண்பினானை*
*வேணியரன் திருக்கோயில் காப்பானை*
*நிருவாண வேடத்தானை*
*வாணிலவு முத்தலைவேல் வடுகளைச் செந்*
*தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்.*

கோணி வளைந்த மூன்றாம் பிறைச்சந்திரனைப் போல் கூரிய வக்கிர தந்தமுள்ள நாயைக் குதிரை வாகனமாய்க் கொண்டவனாய் கையில் கங்கணமாகக் கட்டிய அரவத்தின் மாணிக்கம் வெயில் போல் பிரகாசிக்கத்தக்கவனாய் சடாதரனாகிய சிவபெருமான் கோயிலைக் காக்கப்பட்டவனாய் விளங்கி நிர்வாண வேடங் கொண்டவனாய் வாழ்ந்து நிலைபெறும் முத்தலை வேல் வடுகனைச் செந்தமிழ்ப் பாமாலையால் துதித்து வணங்குவாம்.

### 17. ஆதித்தகிரிப் புராணம்

*பரநாத வரைமணிகிண் கிணி யொலிப்பப்*
*படமெடுத்துப் பார்க்குந் துத்தி*
*வரநாக கங்கணத்தான் மாலகந்தை*
*யிருளகற்ற வந்த ஜோதி*
*யுரனாகும் வித்துருமச் செஞ்சடையா*
*னருளத்தி யுயரா தித்த*
*புரமேவு மணிவரை வாழ் சட்டைநா*
*யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வாம்.*

பரநாதச் மணிச்சிலம்பு கிண்கிணியாக ஒலிக்கும் படியாக படமெடுத்தாடும் பொறிகளையுடைய அரவை ஆபரணமாக அணிந்தவனாய் ஆணவ மலவிருளை நீக்கவரும் பரஞ்சோதியாய் மார்பினிடமாக அணியும் பவளம் போன்ற செஞ்சடைக் கடவுளின் அருளுடைய கங்கையின் வளப்பம் பெருகும் ஆதித்தபுரத் திருக்கோயிலில் வாழ் சட்டை நாயகனுடைய பாதாம்புயங்களைப் போற்றி வாழ்வாம்.

## 18. திருநெல்வேலிப் புராணம்

*பகருமறைப் பணவனத்திற் பண்டிருந்த தாபதர்க*
*ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்*
*புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல் வேலி*
*நகரினிது புரந்த* ***சட்டை நாதனிரு*** *பதம் பணிவாம்*

சொல்லா நின்ற வேதாரணியத்தில் பூர்வமிருந்த சைன முனிவர்கள் பிரமாணமில்லாத அவத்தைத் தவமென்று நெறியில்லாமற் செய்யும் யாகத்தின் கரிய யானையை உரித்த சடாதரனாகிய சகரனுடைய திருநெல்வேலித் தலத்தை இனிது காத்த சட்டைநாதர் திருவடியிணைகளைப் பாடிப் பணிவாம்

## 19. மருதவனப் புராணம்

*மேலையோர் கற்பத் திருதியிற் கதிர்கண்*
*மேவுடுக் கணங்கள் கீழுறத் தீம்*
*பாலை யொத் திருசங் கீன்றமுத்தினங்கள்*
*பரந்திடப் புவியிடத் தெழுந்த*
*வேலையின் மிகுந்த புகலியந் தோணி*
*விளங்கிடு வடுகனாங் கடவுள்*
*காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்*
*கடுந்துயர் மாலைதீர்ந்திடவே*

முன் ஒரு கற்ப கால முடிவில் மூன்றொளிகளையுடைய நட்சத்திரக்கூட்டங்கள் கீழுதிர்த்தாற் போல பால் என வெளுத்த சங்குகள் ஈனும் முத்துத் தினுசுகள் பரவும் படியாகப் பூமியைச் சுற்றி உள்ளம் மகிழும் காசியில் உறைகின்ற வைரவக் கடவுளது திருப் பாதங்களைச் சிரமேற்கொண்டு பிறவித்துயர் தீர்த்திடுவோம்.

## 20. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

*புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்*
*பணிவிடைகள் பொருந்தி நாளுஞ்*
*செயற் காக வெங்கள் குலந்தனை*
*யடிமை கொண்டு வளர்தேவதேவ*
*னயற்காதி யமலனருள்செய்த புர*
*மெனவுலக மனைத்துங் கூறும்*
*வயற் காழி நகர்ச்சட்டை நாதனிரு*
*பாதமலரை வணங்கி வாழ்வாம்*

மேகநாயகனாகிய இந்திரன் பணியும் வள்ளலாகிய சிவபெருமானுக்கு எந்நாளும் திருத்தொண்டு செய்வதற்காக நம்முடைய குலத்தை அடிமையாகக் கொண்டு வளருந்தேவனும், பிரம்மாதி தேவர் முதலானவர்களுக்கும் வரம் அளிக்கும் முதல்வனாகிய பரமசிவன் ஏற்படுத்தியதாம் என உலகமெல்லாங் கொண்டாடும் வயல் வளப்பமுடைய சீகாழிச் சட்டைநாதனுமான வைரவ மூர்த்தியின் பாதாம் புயங்களிரண்டையும் வணங்குவாம்.

## 21. காசி ரகசியம்

*தளம் பொரிமலரோ னாதிவானவர் தாழ்ந்து போற்ற*
*வுளம் பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்*
*களம் பொலியாது தண் டங் கண்டற வொழிந்து முத்தி*
*வளம் பொரிவகை செய்கால* ***வயிரவற்கன்பு*** *செய்வாம்*

கமலாசனனாகிய பிரம்மாதி தேவர்கள் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும் காசியில் வாழ்கின்ற சீவாத்துமாக்கள் செய்த பாவங்களையெல்லாம் தண்டிக்காது, பணிந்து தண்டனிடக் கண்டு அவர்கள் பாவங்களை ஒழித்து முத்தி சாம்ராச்சியம் அடைய வழிகாட்டும் காலவயிரவற்கு அன்பு பூண்டொழுகுவாம்.

## 22. திருநாகைக்காரோணப் புராணம்

*பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு*
*முருகுதங் கலரின் மேலான் முண்ட வெண்கபாலத் தூடு*
*கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற*
***திருகுதீர் வடுகப் புத்தேள்*** *சேவடி சென்னி சேர்ப்பாம்.*

பெருகிய தன் பிரதாபத்துள் மற்றவர்களுடைய புகழை அடக்கிக் கமலாசனத்தின் மேல் வரும் பிரம்மனுடைய முண்டமான கபால ஓட்டில் கருகிய நீலமேக சரீரம் கவிழ்ந்து புரண்டாலன்ன சிவந்த இரத்தங் கொண்ட கள்ளமில்லா வடுகக் கடவுளின் சேவடிகளைச் சிரமேற் கொள்வாம்.

## 23. திருக்குடந்தைப் புராணம்

*எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொன் றேனு*
*நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளிசெய் தாங்கு*
*முழுவலி நெடியோ னாதிமொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்*
*வழுவறக்* ***கபாலத் தேற்ற வடுகனை*** *வணங்கி வாழ்வாம்*

இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், ஆய தாதுவகை ஏழுங்கூடித்தான் உயிர்கள் நடைபெறும். இல்லாவிட்டால் ஒன்றும் நடைபெறமாட்டா என்று சொல்லுவதைப் பிரசிப்படுத்தி முழு வன்மையுடைய மகாவிஷ்ணு முதலான தேவகூடங்களின் தேக இரத்தக் குற்றமற்ற பிரம்ம கபாலத்தில் ஏந்திய வடுக நாதக் கடவுளை வணங்குவாம்.

திருநாகைக்காரோணம் கோயில் கொண்ட ஐயனை நினைந்து பாடும்போது திசைமுகன் சிரமொன்றேந்தும் ஐயனைக் குறித்த சிறப்புக் காண்க.

திருநாகைக்காரோணப் புராணம்

*வையனை வையமுண்ட மாங்கத் மேற்கொண்ட*
*செய்யனைச் செய்ய போதித்* ***திசைமுகன் சிரமொன்றேந்தும்***
*கையனைக் கடல் சூழ் நாகைக்காரோணக் கோயில் கொண்ட*
*ஐயனை நினைந்த நெஞ்சேயம்மநா முற்றவாறே.*

*வெம்பனைக் கருங்கையானை வெருவவன்றுரிவை போர்த்த*
*கம்பனைக் காலாற் காய்ந்த காலனை ஞாலமேத்தும்*
*உம்பனை உம்பர்கோனை நாகைக்கா ரோணமேய*
*செம்பொனை நினைத்த நெஞ்சே திண்ணநா, முற்றவாறே.*

இங்கேயும் திருநாகைக்காரோணத்தானைத் துதிக்கும்போது "வெம்பனைக் கருங்கையானை வெருவவன் றுரிவை போர்த்த சிவனே" வைரவராக நாமமேந்தினார் என்பது விளக்குகிறது.

## 24. மாயூரப் புராணம்

*ஓங்குநாற் படை முன்னஞ்சு மொள்ளுகிர் படையுந் தேசு*
*வீங்குசக் கரமுன்னாள் வெம்படை அஞ்சுமஞ்சுந்*
*தாங்குசூர் படையுங் கொண்டோர் தலைக்கல நெந்தோரேற்ற*
*பாங்குசேர்* ***வடுக்கப்புத்தேள்*** *பதமலர்க் கன்பு செய்வாம்.*

ஓங்கிய சதுரங்கசேனைகளும் அஞ்சத்தக்க நகக் கூர்மையும் அழகிய சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதையாய ஐம் படையையும் பயப்படத்தக்க சூலாயுதத்தையும் தாங்கிக் கொண்டு பிரம்ம கபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பெருந்தகையனாம் வடுக நாதக் கடவுளின் பாத தாமரைக்கு அன்பு செலுத்துவாம்.

## 25. உறையூர்ப் புராணம்

*உலக மூன்றி னுக்குந்தானே யொருமுத தெரிந்தாங்*
*கலகிரீப் பொறிக டும்பி யலங்குமுத் தலைவேறாங்கி*
*வலனுடை மாயனாதி வானவர் செருக்கு மாறப்*
*பலருமுன் **னஞ்ச நெயத்தோர்** பலிக்கொண்டோன் சரணஞ்சார்வாம்*

சுவர்க்க, மத்திய, பாதாளமென்ற திரிலோகங்களுக்கும் தானே ஒரு முதல்வனெனத் தெரிவித்துக் கையில் அளவில்லாத தீப்பொறிகளைச் சிந்திப் பிரகாசிக்கும் முத்தலை வேலாயுதத்தை தாங்கி வலம்புரிச் சங்கமேந்திய மாயோன் முதலான வானவர்களின் கர்வமடங்கவும், அவர்கள் பற்பலவுமாகப் பயப்படவுமாக இரத்தப்பலி வாங்கும் வைரவக் கடவுளின் சரணார விந்தங்களைச் சார்ந்தடைவாம்.

## 26. திருவம்பர்ப் புராணம்

*சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்*
*தூத்தவ வேட்டுவர் பொருவச்*
*செவைமலர் **கிழவன் றலைச்சுவை** முன்னந்*
*தெரிந்து பின்னக் குதவுகிரு*
*நவை கொண்மா னெய்த் தோர்ச் சுவைமுனந் தெரிந்து*
*நயந்துபினத்தலைக் குதவுங்*
*கவைபடு திறற் சூலமுங்கரங் கொண்ட*
*கடவுடன் சேவடி போற்றி*

முன்னே சுவை பார்த்த பின்னே தனக்குதவுங் கண்ணப்ப நாயனாரைப் போலச் செந்தாமரையனாகிய பிரமன் தலைச்சுவையை முன்னேயுணர்ந்ததால் பின்னும் வளர்த்த நகமும், பழியா நின்ற திருமால் உதிரத்தைச் சுவைத்து முன்னமினிமையடைந்ததால் பின்னுமத்தகையை சமயங்கட்குதவா காரண பெற்றியுடைய சூலாயுதமும் கையிற் கொண்டேற்றும் வைரவக் கடவுளின் சேவடிகளைப் போற்றுவோம்.

## 27. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

*மறைகமழ் கபாலத்தோடு மாயவன் மேனிநெய்த்தோர்*
*துறைகமழ் கொடிய வெந்தீச் சூலமுங் கரத்திற்றாங்கி*
*முறைகமழ் உலகில் யார்க்குமூடிய பெருக்கு மாய்க்கு*
*மிறைகமழ் **வடுகப் புத்தே** ளிணையடிக்கன்பு செய்வாம்.*

பிரம்மாவின் கபாலவோட்டில் மகாவிஷ்ணுவின் உதிரத்தை வாங்கும் கொடிய வெந்தீச் சூலத்தைக் கையில் தாங்கிக் கொண்டு உலகத்திலே யாராக்குங்கர்வம் மூடியதோ அக்கர்வத்தை மாய்க்கும் இறைவனான வடுகப் பெருமானுடைய திருவடி இணைகளுக்கு அன்பு பூண்டு ஒழுகுவாம்.

## 28. விளத்தொட்டிப் புராணம்

*இருட்பெரு நிரய மேவற் கேது வாஞ் செருக்கு மேவில்*
*வெருட்பெருந் தண்டமேவு மகவுமென் றுணர்த்தி யாங்கு*
*மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம்புரித்துப் போர்த்த*
*வருட்பெரு **வடுகன் வெம்பொனம்புயப் பாதம்** போற்றி.*

அதியந்தகாரமான நரகம் அடைவதற்கு காரணமாம் கர்வத்தைப் படைத்தால் மிகவும் கொடூரமான தண்டனைக்குட்பட வேண்டுமென்று தெரிவித்து மயக்கமான கொடுஞ் செயல் விட்டு நீங்கா உக்கிர நரசிங்கத்தைப் பிளந்து தோலையுரித்துப் போர்த்த பேரருள் உடையோனாகிய வடுகக் கடவுளின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம்.

## 29. கோயிலூர்ப் புராணம்

*தெருட்பெரு நலனை வாவித் தீவிர தாத்துற்றோர்க்கு*
*வருட் பெரு மாயை நூறி வல்வினைப் படலங் கீறிச்*
*சுருட்பெருங் கொடிய துக்க நிவர்த்தியுஞ் சுகத்தின்பேறு*
*மருட்பெருஞ் செயலானல்கும் **வடுகனை**யடைந்து வாழ்வாம்*

தெளிந்தோர் பேரின்பத்தை இச்சித்து தீவிர தரத்தை அடைந்தோர்களின் பெரு மயக்கமான மாயையை அழித்து வல்லினை என்னும் படலத்தைக் கீறி சுருள் போல் பெருகுங் கொடுந்துக்க நிவாரணமும் பரம சுகத்தின் முத்திப்பேறும் திருவருட் செயலால் அருள்புரியும் வடுகக் கடவுளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம்.

## 30. திருக்குறுக்கைப் புராணம்

*ஆக்கும் வினைமலர வனதன் றென்றற*
*கவனுத் தமாங்க நான்குங்*
*காக்கும் வினைமாய வனதன் றென்றற்*
*கவன் மேனி கழிநெய் தோரும்*
*தாக்கும் வினையாள ருந்தோர் சான்றுரைக்கக்*
*கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு*
*போக்கும் வினை சூற் படையுபாங்கமுங்கொள்*
*வடுகனடி போற்றி வாழ்வாம்.*

தாழ்ந்த சிறுத் தொண்டருமறிந்து சாட்சி கூற உண்டாக்கும் படைப்புத்தொழில் பிரம்மதேவனுடையதல்லவென்பதாய் அவனுடைய நான்கு முகமும் பாதுகாக்குந் திதித்தொழிலில் விஷ்ணுவினுடையதல்லவென்பதாய் அவனுடைய இரத்தம் ஒழுகும் தேகமும் விளங்கும் கூரிய நகவொழுங்கும் உயிரைப் போக்கத்தக்க சூலாயுதமேந்திய கையும் கொண்ட வைரவருடைய திருவடிகளைப் போற்றி வாழ்வாம்.

## 31. தனியூர்ப் புராணம்

*மறைபுகழ் தானேயோம்ப வயங்க கேத்திரத்தினெல்லை*
*பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்றதண்டங்*
*குறையற வியற்று தண்டதரன்குறுகாது தானே*
*முறையுற வுன்றிப் போக்கு **முதல்வனை** வணக்கஞ் செய்வாம்.*

வேதங்களால் புகழ்ந்து கொண்டாடத்தக்க சிவபெருமான் கோயில் எல்லையருகில் உடலை விட்டிறந்தவர்களின் பாவ சம்பந்தத்துக்கீடான தண்டனையைக் குறைவில்லாமல் நிறைவேற்றும் எமன் நெருங்காத வண்ணம் எல்லாந்தானே நெறி முறையாகச் செய்து பாவத்தைப் போக்கி முத்தி தரும் வடுகநாதக் கடவுளை வணங்குவாம்.

***(நன்றி : வைரவ மான்மியம் – 1995)***

**விபுலானந்தர் பக்கம்**

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரும் சைவமும்



- செல்வி பிரியங்கா கணபதிப்பிள்ளை
அம்மன் அறநெறிப்பாடசாலை ஆசிரியர், வந்தாறுமூலை.

*"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ*
*வெள்ளை நிற பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது "*

மணித்திருநாடாம் இலங்கை மாநகரின் கிழக்கே மட்டக்களப்பிற்கு தெற்கே காரேறும் மூதூர் என்று அழைக்கப்படும் காரைதீவு எனும் இயற்கை எழில் கொஞ்சும் அழகான இக் கிராமத்தில் தலைவனாக விளங்கிய சாமித்தம்பி கண்ணம்மைக்கு அருந்தவப் புதல்வனாக மயில்வாகனன் பிறந்து, மொழி பயின்று பின்நாளில் சிவனடியே சிந்தித்திருந்த பாரம்பரியத்தில் வளர்ந்த சாமித்தம்பியின் மகனான இவர் சிறுபராய காலம் தொட்டு தமிழரின் பண்பாட்டு அம்சங்களை அறிந்திருந்தார்.

மயில்வாகனன் தனது சிறுபருவ ஆரம்பக் கல்வியை தனது தந்தையிடமே கற்றார். இருப்பினும் மயில்வாகனனின் பண்பாட்டு அம்சங்களை ஊட்டிவிட்ட பெருமை புலோலி பொ.வைத்தியலிங்க தேசிகரையே சாரும். ஆரம்பக் கல்வியை கல்முனை மெதடிஸ்த கல்லூரியிலும், புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றார். பின்னர் கொழும்பிலே கல்வி பயின்று பல நல்லறிஞர்களின் நட்பையும் பெற்று இலங்கையில் இருந்து முதன் முதலாக பண்டிதர் என்ற பட்டத்தை பெற்ற பெருமை இவரையே சாரும்.

விபுலானந்தர் ஒரு விஞ்ஞான பட்டதாரி ஆயினும் அவர் ஒரு ஆன்மீகவாதியாகவும் காணப்பட்டார். மெய்ஞானமும் விஞ்ஞானமும் ஒன்றித்தே அவரிடம் காணப்பட்டது. இவருடைய வாழ்க்கை முழுவதும் சமய நெறியில் நின்று சமூகத்திற்காக தொண்டாற்றியவராவார். மனிதனின் வாழ்க்கையை நன்நெறியில் கொண்டு செல்வதும், தெய்வ நிலைக்கு உயர்த்துதலும் சமயத்தின் நோக்கமாகும். இச் சமயத்தையும் உலகினையும் ஒன்றாக இணைப்பதிலேயே விபுலானந்த அடிகளார் உறுதியாக இருந்தார். சமத்துவம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு என்பன மக்களிடையே நிலவ சமயம் உடன்படாது உள்ளமையை தனது செயல்களாலும் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் சமூகத்திற்கு விளக்கினார்.

இவர் வாழ்ந்த காலம் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் நிலவிய காலமாக திகழ்ந்ததால் சமய, கலை கலாசாரங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் மனமுடைந்த மயில்வாகனன் மறுமலர்ச்சியினை ஏற்படுத்த புறப்பட்டார். இதன் விளைவுதான் இவருடைய பிரசங்கங்களும், சஞ்சிகைகளும், நூல்களும் பாடசாலைகளும் தோன்ற காரணமாகின என்றால் மிகையாகாது.

ஆன்மீக கடலிலே மூழ்கி தொண்டெனும் முத்தெடுக்க விரும்பியவராய் லௌகீக வாழ்க்கை பற்றறுத்து சுவாமி சர்வானந்தருடன் இணைந்து துறவை நாடிச் சென்றார். இதனால் பண்டிதர் வாழ்வில் ஒரு மாற்றம் துளிர் விட்டது. இத்துறவின் மூலமே மயில்வாகனன் எனும் பெயர் நீங்கி பிரபோத சைதன்யர் என பெயர் பெற்று சைவசமயத்தை வளர்க்க முன் வந்திருந்தார்.

இவர் ஸ்ரீஇராமகிருஸ்ண விஜயம் சஞ்சிகையில் கூடுதலாக சமயம் சார்ந்த ஆக்கங்களை எழுதியிருந்தார். விநாயகக் கடவுள், வினைப்பயன், வைதீக நெறி போன்ற பல கட்டுரைகளை எழுதினார். அத்தோடு சுவாமி விபுலானந்தர் அவர்கள் சைவ சித்தாந்தத்தின் உண்மைகளையும் இராமகிருஸ்ண விஜயத்திலே மிகவும் சிறப்பாகக் கூறியிருந்தார்.

சமயம் ஒரு தத்துவம், அது மனிதனின் வாழ்வியல் நெறி என்பதனை விபுலானந்தர் அறிந்திருந்தார். இதனாலேயே சமயம் சார்ந்த பல வசன நூல்களை இயற்றியமை அவரது சமயப் பற்றையே காட்டுகிறது. நடராஜ வடிவம், உமாமகேஸ்வரர் போன்ற வசன நூல்களும், கணேச தோத்திர பஞ்சகம், கதிரயம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை போன்ற பல கவிதை நூல்களும் இவரால் உதித்தவை எனலாம்.

இவருடைய சைவப் பாதையில் நூல்கள் இயற்றியது மாத்திரமன்றி சைவப் பாடசாலை மூலமாகவும் பல்வேறு நல்லொழுக்கம் மிக்க சமய ஆசாரம் ததும்பும் மாணவர்களை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். அந்த வகையில் சுவாமி அவர்களுடைய சிந்தனையின் கருவூலமாக மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தை நிறுவி அதனூடாக சமயத்தை வளர்த்ததுடன் அதனுடன் ஒன்றிய சமூகத்தையும் மேம்படுத்தியிருந்தார்.

பாடசாலைக் கல்வியிலே இசையை ஒரு பாட நெறியாக சேர்ப்பதற்கு இவரது ஊக்கத்தின் பலனாக பத்து ஆண்டுகள் ஈடுபட்டு உழைத்து யாழ் நூலினை ஆக்கித் தந்திருந்தார். யாழ்நூலின் அரங்கேற்றம் நிகழ்ந்து நாற்பத்து ஐந்தாவது நாளில் இம் மண்ணுலகை விட்டு மறைந்தார்.

இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் சமூக சிந்தனையுடன் கூடிய சைவசமய பணிகளானது மனிதர்களை இவ்வுலகில் நீதிநெறியில் நின்று வாழவும், மனம், வாக்கு, காயத்தால் பக்குவத்தை பெற்று சமய நெறிகளை பின்பற்றி இறை சக்தியை பெற்று வாழவும் என்றும் வழிகாட்டி நிற்கின்றது.

# அகில இலங்கை இந்து மாமன்றம்
# நாட்காட்டி - 2015

### ஜனவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

### பெப்ரவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 2 | 9 | 16 | 23 |
| செ | | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | |

### மார்ச்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | 31 | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

### ஏப்ரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | |
| ச | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

### மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 4 | 11 | 18 | 25 |
| செ | | 5 | 12 | 19 | 26 |
| பு | | 6 | 13 | 20 | 27 |
| வி | | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | 31 |

### ஜூன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | |
| வி | 4 | 11 | 18 | 25 | |
| வெ | 5 | 12 | 19 | 26 | |
| ச | 6 | 13 | 20 | 27 | |
| ஞா | 7 | 14 | 21 | 28 | |

### ஜூலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

### ஆகஸ்ட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

### செப்டெம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

### அக்டோபர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

### நவம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

### டிசம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

● நோன்மதி தினம்

○ அரச வங்கி விடுமுறை

□ அரச வங்கி வர்த்தக விடுமுறை

## அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறை தினங்கள் (2015)

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 04 | ஞாயிறு | நோன்மதி தினம் | § † ‡ |
| ஜனவரி | 04 | ஞாயிறு | நபிகள் நாயகம் பிறந்த தினம் | § † ‡ |
| ஜனவரி | 15 | வியாழன் | தைப்பொங்கல் | § † ‡ |
| ஜனவரி | 03 | செவ்வாய் | நோன்மதி தின ம் | § † ‡ |
| பெப்ரவரி | 04 | புதன் | தேசிய தினம் | § † ‡ |
| பெப்ரவரி | 17 | செவ்வாய் | மகா சிவராத்திரி | § † |
| மார்ச் | 05 | வியாழன் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஏப்பிரல் | 03 | வெள்ளி | நோன்மதி தினம் | § † ‡ |
| ஏப்பிரல் | 03 | வெள்ளி | பெரிய வெள்ளி | § † |
| ஏப்பிரல் | 13 | திங்கள் | தமிழ் சிங்களப் புதுவருட முன்தினம் | § † ‡ |
| ஏப்பிரல் | 14 | செவ்வாய் | தமிழ் சிங்களப் புதுவருட தினம் | § † ‡ |
| மே | 01 | வெள்ளி | மே தினம் | § † ‡ |
| மே | 03 | ஞாயிறு | வெசாக் நோன்மதி தினம் | § † ‡ |
| மே | 04 | திங்கள் | வெசாக் மறுதினம் | § † ‡ |
| ஜூன் | 02 | செவ்வாய் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஜூலை | 01 | புதன் | நோன்மதி தினம் | § † ‡ |
| ஜூலை | 18 | சனி | றம்ழான் பெருநாள் | § † |
| ஜூலை | 31 | வெள்ளி | நோன்மதி தினம் | § † ‡ |
| ஆகஸ்ட் | 29 | சனி | நோன்மதி தினம் | § † ‡ |
| செப்டெம்பர் | 24 | வியாழன் | ஹஜ்ஜுப் பெருநாள் | § † |
| செப்டெம்பர் | 27 | ஞாயிறு | நோன்மதி தினம் | § † ‡ |
| அக்டோபர் | 27 | செவ்வாய் | நோன்மதி தினம் | § † ‡ |
| நவம்பர் | 10 | செவ்வாய் | தீபாவளி | § † |
| நவம்பர் | 25 | புதன் | நோன்மதி தினம் | § † ‡ |
| டிசம்பர் | 24 | வியாழன் | நபிகள் நாயகம் பிறந்த தினம் | § † ‡ |
| டிசம்பர் | 24 | வியாழன் | நோன்மதி தினம் | § † ‡ |
| டிசம்பர் | 25 | வெள்ளி | நத்தார் திருநாள் | § † ‡ |

§ அரசாங்கம் † வங்கி ‡ வர்த்தகம்

# இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் – 2015

### ஜனவரி

| | | |
|---|---|---|
| 01 – | வியாழன் | : கார்த்திகை விரதம், சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் |
| 02 – | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 04 – | ஞாயிறு | : பூரணை விரதம் |
| 05 – | திங்கள் | : திருவெம்பாவை நிறைவு |
| 09 – | வெள்ளி | : சங்கடஹர சதுர்த்தி |
| 15 – | வியாழன் | : தைப்பொங்கல் |
| 16 – | வெள்ளி | : ஏகாதசி விரதம் |
| 18 – | ஞாயிறு | : பிரதோஷ விரதம் |
| 20 – | செவ்வாய் | : அமாவாசை விரதம் |
| 23 – | வெள்ளி | : சதுர்த்தி விரதம் |
| 25 – | ஞாயிறு | : சஷ்டி விரதம் |
| 28 – | புதன் | : கார்த்திகை விரதம் |
| 30 – | வெள்ளி | : பீம ஏகாதசி விரதம் |

### பெப்ரவரி

| | | |
|---|---|---|
| 01 – | ஞாயிறு | : பிரதோஷ விரதம் |
| 03 – | செவ்வாய் | : பூரணை விரதம் தைப்பூசம் |
| 07 – | சனி | : சங்கடஹர சதுர்த்தி |
| 15 – | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 16 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 17 – | செவ்வாய் | : மகா சிவராத்திரி |
| 18 – | புதன் | : அமாவாசை விரதம் |
| 22 – | ஞாயிறு | : சதுர்த்தி விரதம் |
| 24 – | செவ்வாய் | : சஷ்டி விரதம் |
| 25 – | புதன் | : கார்த்திகை விரதம் |

### மார்ச்

| | | |
|---|---|---|
| 01 – | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 03 – | செவ்வாய் | : பிரதோஷ விரதம் |
| 04 – | புதன் | : மாசி மகம் |
| 05 – | வியாழன் | : பூரணை விரதம் |
| 09 – | திங்கள் | : சங்கடஹர சதுர்த்தி |
| 16 – | திங்கள் | : ஏகாதசி விரதம் |
| 18 – | புதன் | : பிரதோஷ விரதம் |
| 20 – | வெள்ளி | : அமாவாசை விரதம் |
| 23 – | திங்கள் | : சதுர்த்தி விரதம் |
| 24 – | செவ்வாய் | : கார்த்திகை விரதம் |
| 25 – | புதன் | : சஷ்டி விரதம் |
| 28 – | சனி | : ஸ்ரீராம நவமி |
| 31 – | செவ்வாய் | : ஏகாதசி விரதம் |

### ஏப்ரல்

| | | |
|---|---|---|
| 01 – | புதன் | : பிரதோஷ விரதம், |
| 03 – | வெள்ளி | : பங்குனி உத்தரம் |
| 04 – | சனி | : பூரணை விரதம் |
| 08 – | புதன் | : சங்கடஹர சதுர்த்தி |
| 14 – | செவ்வாய் | : சித்திரைப் புதுவருடப் பிறப்பு |
| 15 – | புதன் | : ஏகாதசி விரதம் |
| 16 – | வியாழன் | : பிரதோஷ விரதம் |
| 18 – | சனி | : அமாவாசை விரதம் |
| 20 – | திங்கள் | : கார்த்திகை விரதம் |
| 21 – | செவ்வாய் | : அட்சய திருதியை |
| 22 – | புதன் | : சதுர்த்தி விரதம் |
| 24 – | வெள்ளி | : சஷ்டி விரதம் |
| 29 – | புதன் | : ஏகாதசி விரதம் |

### மே

| | | |
|---|---|---|
| 01 – | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 02 – | சனி | : சித்திரைச் சித்திரை |
| 03 – | ஞாயிறு | : சித்திரா பூரணை விரதம் சித்திரை குப்த விரதம் |
| 07 – | வியாழன் | : சங்கடஹர சதுர்த்தி, |
| 14 – | வியாழன் | : ஏகாதசி விரதம் |
| 15 – | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 17 – | ஞாயிறு | : அமாவாசை விரதம் |
| 18 – | திங்கள் | : கார்த்திகை விரதம் |
| 21 – | வியாழன் | : சதுர்த்தி விரதம் |
| 23 – | சனி | : சஷ்டி விரதம் |
| 29 – | வெள்ளி | : ஏகாதசி விரதம் |
| 31 – | ஞாயிறு | : பிரதோஷ விரதம் |

### ஜூன்

| | | |
|---|---|---|
| 01 – | திங்கள் | : வைகாசி விசாகம் |
| 02 – | செவ்வாய் | : பூரணை விரதம் |
| 06 – | சனி | : சங்கடஹர சதுர்த்தி |
| 12 – | வெள்ளி | : ஏகாதசி விரதம் |
| 14 – | ஞாயிறு | : கார்த்திகை விரதம் பிரதோஷ விரதம் |
| 16 – | செவ்வாய் | : அமாவாசை விரதம் |
| 20 – | சனி | : சதுர்த்தி விரதம். |
| 22 – | திங்கள் | : சஷ்டி விரதம் |
| 24 – | புதன் | : ஆனி உத்தரம் |
| 28 – | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 29 | திங்கள் | : பிரதோஷ விரதம் |

### ஜூலை

| | | |
|---|---|---|
| 01 | புதன் | : பூரணை விரதம் |
| 05 – | ஞாயிறு | : சங்கடஹர சதுர்த்தி |
| 11 – | சனி | : கார்த்திகை விரதம் |
| 12 | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 13 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 15 – | புதன் | : அமாவாசை விரதம் |
| 19 | ஞாயிறு | : சதுர்த்தி விரதம் |
| 21 – | செவ்வாய் | : ஸ்கந்த பஞ்சமி |
| 22 – | புதன் | : குமார சஷ்டி விரதம் |
| 27 – | திங்கள் | : சயன ஏகாதசி விரதம் |
| 29 – | புதன் | : பிரதோஷ விரதம் |
| 31 – | வெள்ளி | : பூரணை விரதம், |

### ஆகஸ்ட்

| | | |
|---|---|---|
| 03 – | திங்கள் | : சங்கடஹர சதுர்த்தி |
| 08 – | சனி | : கார்த்திகை விரதம் |
| 10 – | திங்கள் | : ஏகாதசி விரதம் |
| 12 – | புதன் | : பிரதோஷ விரதம் |
| 14 – | வெள்ளி | : ஆடி அமாவாசை விரதம் |
| 16 – | ஞாயிறு | : ஆடிப்பூரம் |
| 18 – | செவ்வாய் | : நாக சதுர்த்தி விரதம் |
| 19 – | புதன் | : கருட பஞ்சமி |
| 20 – | வியாழன் | : சஷ்டி விரதம் |
| 25 – | செவ்வாய் | : ஆவணி மூலம் |
| 26 – | புதன் | : ஏகாதசி விரதம் |
| 27 – | வியாழன் | : பிரதோஷ விரதம் |
| 28 – | வெள்ளி | : வரலக்ஷ்மி விரதம், ஆவணி ஓணம் |
| 29 – | சனி | : பூரணை விரதம் |

### செப்டம்பர்

| | | |
|---|---|---|
| 02 – | புதன் | : சங்கடஹர சதுர்த்தி |
| 04 – | வெள்ளி | : கார்த்திகை விரதம் |
| 05 – | சனி | : ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 09 – | புதன் | : ஏகாதசி விரதம் |
| 10 – | வியாழன் | : பிரதோஷ விரதம் |
| 12 – | சனி | : அமாவாசை விரதம் |
| 17 – | வியாழன் | : ஆவணி சதுர்த்தி விரதம் |
| 18 – | வெள்ளி | : ரிஷி பஞ்சமி |
| 19 – | சனி | : சஷ்டி விரதம் |
| 24 – | வியாழன் | : பரிவர்த்தன ஏகாதசி விரதம் |
| 25 – | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 27 – | ஞாயிறு | : பூரணை விரதம் உமாமகேஸ்வர விரதம் |

### அக்டோபர்

| | | |
|---|---|---|
| 01 – | வியாழன் | : கார்த்திகை விரதம் சங்கடஹர சதுர்த்தி |
| 08 – | வியாழன் | : ஏகாதசி விரதம் |
| 10 – | சனி | : பிரதோஷ விரதம் |
| 12 – | திங்கள் | : அமாவாசை விரதம் |
| 13 – | செவ்வாய் | : நவராத்திரி விரதாரம்பம் |
| 16 – | வெள்ளி | : சதுர்த்தி விரதம் |
| 18 – | ஞாயிறு | : சஷ்டி விரதம் |
| 19 – | திங்கள் | : சரஸ்வதி பூஜாரம்பம் |
| 21 – | புதன் | : சரஸ்வதி பூஜை மஹா நவமி விரதம் |
| 22 – | வியாழன் | : விஜயதசமி, கேதார கௌரி விரதாரம்பம் |
| 23 – | வெள்ளி | : ஏகாதசி விரதம் |
| 25 – | ஞாயிறு | : பிரதோஷ விரதம் |
| 27 – | செவ்வாய் | : பூரணை விரதம் |
| 28 – | புதன் | : ஐப்பசிப் பரணி |
| 29 – | வியாழன் | : கார்த்திகை விரதம் |
| 30 – | வெள்ளி | : சங்கடஹர சதுர்த்தி |

### நவம்பர்

| | | |
|---|---|---|
| 07 – | சனி | : ஏகாதசி விரதம் |
| 09 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 10 – | செவ்வாய் | : தீபாவளி |
| 11 – | புதன் | : அமாவாசை விரதம், கேதாரகௌரி விரத நிறைவு |
| 12 – | வியாழன் | : கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 15 – | ஞாயிறு | : சதுர்த்தி விரதம் |
| 17 – | செவ்வாய் | : கந்தசஷ்டிவிரத நிறைவு |
| 22 – | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 23 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 25 – | புதன் | : பூரணை விரதம் திருக்கார்த்திகை விரதம் குமாராலய தீபம் சர்வாலயதீபம் |
| 26 – | வியாழன் | : விஷ்ணுவாலய தீபம் விநாயக விரதாரம்பம் |
| 29 – | ஞாயிறு | : சங்கடஹர சதுர்த்தி |

### டிசம்பர்

| | | |
|---|---|---|
| 07 – | திங்கள் | : ஏகாதசி விரதம் |
| 08 – | செவ்வாய் | : பிரதோஷ விரதம் |
| 11 – | வெள்ளி | : அமாவாசை விரதம் |
| 15 – | செவ்வாய் | : சதுர்த்தி விரதம் |
| 16 – | புதன் | : விநாயகர் விரதாரம்பம் |
| 17 – | வியாழன் | : திருவெம்பாவை ஆரம்பம் |
| 21 – | திங்கள் | : சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் |
| 22 – | செவ்வாய் | : கார்த்திகை விரதம் |
| 23 – | புதன் | : பிரதோஷ விரதம் |
| 25 – | வெள்ளி | : பூரணை விரதம் |
| 26 – | சனி | : திருவெம்பாவை நிறைவு |
| 29 – | செவ்வாய் | : சங்கடஹர சதுர்த்தி |

## மாமன்ற நிகழ்வுகள் (2015)

### நடேசர் அபிஷேக தினங்கள்

| | |
|---|---|
| 05. 01. 2015 | (மார்கழி திருவாதிரை) |
| 04. 03. 2015 | (மாசி பூர்வபட்ச சதுர்த்தசி) |
| 10. 05. 2015 | (சித்திரை திருவோணம்) |
| 24. 06. 2015 | (ஆனி உத்தரம்) |
| 28. 08. 2015 | (ஆவணி பூர்வபட்ச சதுர்த்தசி) |
| 26. 09. 2015 | (புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தசி) |
| 26. 12. 2015 | (மார்கழி திருவாதிரை) |

### மாமன்ற வருடாபிஷேகம்

03 .05 .2015 : (சித்திரை சுவாதி)

### குருபூசை தினங்கள்

| | |
|---|---|
| 31. 03. 2015 | : யோகர் சுவாமிகள் |
| 12. 05. 2015 | : திருநாவுக்கரசு நாயனார் |
| 04.06. 2015 | : திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் |
| 22. 06. 2015 | : மாணிக்கவாசக சுவாமிகள் |
| 24. 07. 2015 | : சுந்தரமூர்த்தி நாயனார் |
| 02. 12. 2015 | : ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |

### நினைவு தினங்கள்

| | |
|---|---|
| 19. 07. 2015 | : சுவாமி விபுலானந்தர் |
| 05. 12. 2015 | : ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |

நாவலர் பக்கம்

# நாவலர் பெருமான் இருண்ட வாழ்விற்கு ஒளியேற்றிய ஞானபாநு



- ஓய்வு நிலை விரிவுரையாளர்
திருமதி நாச்சியார் செல்வநாயகம்
யாழ். பல்கலைக்கழகம்

சைவத்தமிழ் உலகில் என்றுமே மறக்கப்பட முடியாதவர் நாவலர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஒப்பற்ற பணியைப் போற்றிப் பாராட்டி அவரின் பெரும்பணிகளை சைவத்தமிழர் உணரவும், அவர் வழியில் உண்மையான சைவவாழ்க்கை வாழவும் அதற்குக் கருவிநூலான தமிழை வளர்க்கவும் நாவலர் நினைவாக மாநாடுகளையும் விழாக்களையும் சைவத்தின் மேல் நம்பிக்கை கொண்டவர்கள் நடத்தி வருகின்றனர்.

நாவலர் இருண்ட உலகிற்கு ஏற்றிய ஒளியே இன்றும் நாம் அவரை ஐந்தாம் குரவர் எனக் குருபூசை கொண்டாடுவதற்குக் காரணமாகும். சைவசமயி என்பவன் அகத்தூய்மையும் புறத்தூய்மையும் கொண்டவன் என்பதைத் தன் வாழ்வால், வாக்கால் வெளிப்படுத்தியவர் நாவலர்.

சைவசமயிக்குப் பேச்சொன்றாகவும் செயலொன்றாகவும் இருக்கக்கூடாது என்றவகையிலே சைவர்களைத் தட்டி எழுப்பி உண்மை வாழ்க்கை வாழ வழிகாட்டிய ஒளியே நாவலர் பெருமான்.

பிறமதத்தின் தாக்கத்தினாலும் எம் மதத்தவரின் முறையற்ற போக்கினாலும் சைவ சமய உண்மைகள் மங்கிக் கொண்டிருந்த காலத்தில் "சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது" என்ற உயரிய நோக்கினை மக்கள் மத்தியில் தெளிவுபட எடுத்துக் கூறி அதற்கான கருவி நூல்களையும் தந்து உண்மை சைவனாக வாழ நம் அறிவுக்கு ஒளி ஊட்டிய உத்தமத் தியாகியே நாவலர்.

நாவலர் சைவத்தை வளர்க்க தன் இல்லற வாழ்க்கையைத் துறந்தார். ஆசிரியத்தொழிலைத் துறந்தார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தவர் நாவலர். அத்தகைய மொழிப் புலமையை வைத்து சைவன் ஒருவன் உண்மைச் சைவனாக வாழ்வதற்கான வழிமுறைகளைச் செய்தார். அவரின் சமய அறிவே அவருக்கு அந்நிய மதத்தவரினதும் சைவ சமயத்தவரினதும் சமயத்துக்கு மாறான செயற்பாடுகளைக் கண்டிக்கவும் சமய உண்மைகளை எடுத்துக்கூறவும் வழி செய்தது.

சமயம் என்பது எல்லா இறைமைகளும் வாய்க்கப் பெற்ற அரசு. எனவே அதுபற்றிய ஐயந்திரிபற்ற உண்மையை அறிந்து உணர்ந்த நாவலர் அந்நிலையைச் சைவர்கள் தங்கள் வாழ்வில் அநுபவமாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் செயற்பட்டவர். எனவே சைவர்கள் உண்மைச் சைவர்களாக வாழ்வதற்காகவே சைவ உண்மையை மக்கள் சந்தேக விபரீதமின்றி அறிந்து கொள்ளும் வகையிலேயே தமிழ் மொழியைக் கருவியாகப் பயன்படுத்தினார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது பொய்யாமொழி. வையத்துள் வாழ்வாங்கு வாழும் அறநெறியாகச் சைவசமயம் இருப்பதை நாயன்மார்களின் வாழ்வியல் மூலமாக அறிந்து தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகியமையால் அவர் திருவருட்பிரகாசத்தைப் பெற்றார். எனவே இறை அருள் ஒளி கிடைக்கப்பெற்றவரே நாவலர்.

நம்மக்கள் முறையாகச் சைவவாழ்க்கையைப்பேணாது வாழ்க்கையை அலட்சியப்படுத்துவதை கண்டு மனம் வருந்தினார். அவரின் கீழ்க்காணும் கருத்துக்களிலிருந்து இது தெளிவாகின்றது. "நம்முடைய சைவசமயிகள் தங்கள் சமயமும் மொழியும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரம் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறும் செய்கின்றார்கள். இதனால் யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்கு சிறிதும் இல்லை. எனக்குச் செயப்படுவனவற்றைக் காணும் தோறும் கேட்குந்தோறும் பிறருக்குக் தமிழ் கற்றலின் கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கமும் கிளரா வண்ணம் தடை விளைகின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமய விருத்தியின் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சைவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. ஆனால் தற்போது சைவசமயித்தவர்களாலேயே இடையூறுகள் ஏற்படுகின்றன.

சைவசமய விருத்தியின்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்ட போது நான் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டிய முயற்சிகளிலும் போக்கும் காலத்தை முன்பயின்ற இங்கிலீஸிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே மதிக்கப்படல்வேண்டு மென்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத்திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடையதாயதோர் பெருஞ்செல்வம்."

மேற்போந்த கருத்தானது நாவலரின் அசையாத இறைநம்பிக்கையையும், மக்களின் மதிப்பிலும் இறைவனது கருணையே மேலான செல்வம் என்பதையும் எடுத்துக் காட்டுவதாகும். இந்நோக்கிற்கு அமைய சைவ சமய உண்மைகளை மாணவர்கள் அறிந்து வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுகுவதற்கு சைவக்கல்வியைப் போதிக்கும் சைவப் பாடசாலைகளை நிறுவினார்.

சைவ ஒழுக்கத்தைப்பேணும் வகையில் இக்கல்லூரிகள் செயற்படும் வகையில் தகுந்த ஆசிரியர்கள் அதிபர்களைக் கொண்டு அமைவதற்கான திட்டங்களை வகுத்தார்.

சமய வாழ்க்கைக்கு முக்கியம் கொடுத்த நாவலர் உலகக் கல்விக்கான முயற்சிகளையும் திட்டங்களையும் மேற்கொண்டவர் என்பதையும் மறந்துவிடலாகாது. எனவே நாவலரின் பள்ளிக்கூடங்களில் வடமொழி, ஆங்கிலம், தமிழ்மொழிக் கல்வி, பௌதீக நூல்கள், உலகியல் நூல்கள் என்பன கற்பிக்கப்பட்டன.

கிறிஸ்தவர்கள் கையாண்ட மதப்பிரசங்கத்தைப் பின்பற்றி தமிழில் பக்தி பூர்வமான பிரசங்க மரபைத்தோற்றி வித்தவர் நாவலர். கற்றவர்களும் கல்லாதவர்களும் எல்லோரும் இறைபக்தி மூலம் இறை அருளை பெறும் வகையில் சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் பிரசங்க மரபின் மூலம் சைவர்கள் அருள்ஒளி பெறும் வாய்ப்பு நாவலர் என்ற ஞானபாநுவினால் வாய்க்கப் பெற்றது. நாவலர் பிரசங்கத்தின் போது சிவப்பொலிவுடன் விளங்கியமையால் மக்களை ஈர்க்கும் வகையில் சமயப்பிரசங்கம் மிக முக்கிய மான இடத்தைப் பெற்றது. நாவலரின் பிரசங்க வன்மையே அவருக்கு நாவலர் என்ற அழியாப்பெயரைக்கொடுத்தது.

நாவலரின் பிரசங்கம் சைவமக்களிடையே சமயப் பற்றையும் பக்தியையும் ஒழுக்கத்தையும் வளர்க்கவும் அவர் தம் வாழ்வு சிறக்கவும் உள்ளொளி பெருக்கவும் வாய்பினை கொடுத்தது. மேலும் நாவலரின் புராணபடன செயற்பாடும் சைவத்துக்கும் சைவமக்களுக்கும் ஒளியூட்டியது. நாவலருக்கு முன்பே புராணபடன மரபு தோற்றம் பெற்று சிறப்புற்றிருந்தாலும் இவர் காலத்தில் புராணபடனம் உயர்நிலை அடைந்தது. பிரசங்கம் போன்று கற்றோரையும் மற்றோரையும் இணைத்து சமய உண்மைகளை பக்தி நிலையில் உணர்வதற்கான வழியாக இது பெருச்சிறப்படை யலாயிற்று.

உண்மையில் நாவலர் என்பவர் எத்தகையவர் என்பதையும், அவர் யார் என்பதையும் நாம் அறிவதற்கு நமக்குப் பெரிதும் உதவுவன அவருடைய கண்டனங்களே. அவருடைய கண்டனங்கள் இருவகைப்பட்டன.

1. கிறிஸ்தவர்களுக்கான கண்டனங்கள்
2. சைவசமயிகள் மேற்தொடுத்த கண்டனங்கள்

கிறிஸ்தவமதத்தினர், சைவசமயிகளின் சமயநூல்கள், வழிபாடு, கிரியைகள், சடங்கு, நம்பிக்கை, சமயத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவு முதலானவற்றிலே காணப்படும் குறைபாடுகளைத் துலாம்பரமாகக் காட்டிச் சைவம் விருத்தம் உடைய மதமென கற்பிக்கத் தொடங்கினர். மிஷனரிமார்களின் இவ்வகையுக்திகளுக்கு ஈடுகொடுக்க முடியாது சைவசமயிகள் அங்கலாய்க் கலாயினர். இவ்வாறான பிரசாரங்களைக் கண்டித்து அதற்குச் சரியான பதிலடி கொடுக்கும் வகையில் பல கண்டன நூல்களை எழுதினாலும் அதில் தலைசிறந்ததாக சைவதூஷண பரிகாரம் என்னும் நூல் விளங்கியது. இந்நூல் 19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக எழுந்த கண்டன நூல்களுள் தலையாயது என்றும், உலக கண்டன நூல்களில் சிறந்ததொன்று என்றும் பன்மொழிப் புலவோர் குறிப்பிடுவர். பாதிரிமார் சைவம் பற்றிக் கூற வந்த கருத்துக்கள் சைவத்துக்கு மாத்திரமல்ல கிறிஸ்தவ மதத்திலும் அவை நிறைந்து காணப்படுகின்றன என்பதைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டியது.

இந்நூல் சைவமக்களிடையே சைவம் பற்றிய தெளிவையும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த சைவர் களிடையே கிறிஸ்தவம் பற்றிய மறுபரிசீலனையையும் கிறிஸ்தவப் பாதிரிமார்களிடத்தே ஆழ்ந்த யோசனையையும் ஏற்படுத்தியது.

1855ஆம் ஆண்டில் இலண்டன் வெஸ்லியன் மிஷன் அறிக்கை சைவ தூஷண பரிகாரம் பற்றி மேல்வருமாறு விதந்துரைப்பது கவனிக்கத்தக்கதாகும்.


"இவ்வாண்டின் மகத்தான நிகழ்ச்சி சைவ தூஷண பரிகாரம் என்ற தமிழ் நூல் வெளிவந்தமையாகும். அஃதோர் தலைசிறந்த இலக்கிய நூல். கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகச் சைவசமயக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது முற்றிலும் புதிய தந்திரத்தைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகிறது. சைவத்தை விடக் கிறிஸ்தவ மதத்தில் என்ன விசேடம் இருக்கிறது என்பதை எடுத்து ஆராய்கிறது. முழுக்கு, தீர்த்தம். பிரார்த்தனை, விரதம், யாத்திரை, இலிங்காராதனை எல்லாம் நம்மிடம் உள்ளதென்று பைபிள் ஆதாரத்துடன் காட்டு கின்றது. முதல்தரமான மூளைதான் இதனை எழுதியிருக்க வேண்டும். இந்நூல் எமக்கு பெருங்கெடுதலை செய்கின்றது."

மேற்போந்த கருத்துக்கள் நாவலர் சைவத்துக்கு ஒளியூட்டிய சைவஞானபாநு என்பதை அரண் செய்வதாகும். சமண பௌத்த மதங்களால் பல்லவர்காலத்தில் சைவர்கள் அனுபவித்த துன்பத்தைப்போக்கி சைவத்தை ஒளிபெறச்செய்த நாயன்மார்கள் போன்று நாவலரும் சிவதொண்டையே தன் வாழ்வாகக்கொண்டு யார்க்கும் அஞ்சாத நெஞ்சினராய்த் திகழ்ந்தமை ஈடிணையற்ற பெரும்செயலே.

நாவலர் சைவசமயிகள் மேற்தொடுத்த கண்டனங்களும் சைவர்கள் உண்மைச் சைவர்களாக வாழ வழிகாட்டு வதாகும். நாவலரின் பதிப்பு முயற்சியும், உரைநடைச் செயற்பாடும் சைவசமய உண்மைகளைக் கூறும் நூல்களின் உருவாக்கமும் குறிப்பாகச் சைவவினா விடை போன்ற நூல்கள் அவர் சமய உண்மைகளை சாதிபேதமற்ற நிலையில் சைவசமயிகள் அனைவரும் கற்றுத்தேறி அதன் வழி செயற்பட வழிசெய்வன. ஆலயங்களில் பலியிடல், சின்னமேள நடனம் போன்ற பல ஆகம விரோதச் செயல்களை ஒழிப்பதற்கு பெரிதும்முயன்று உழைத்தவர் இவர். கோயில் அமைப்பு, கோயில் அதிகாரிகளின் ஒழுக்கம், அங்கே பூசனை செய்யும் கிரியாகுருவின் ஒழுக்கம், வழிபடுவோரின ஒழுக்கம் என்பன பற்றிய அவருடைய கருத்துக்கள் மனிதனை உண்மை ஒளியான சிவபரம்பொருளின் அருளுக்குப் பாத்திரமாக்குவன.

மேன்மைகொள் சைவநீதி விளங்கித்துலங்க வாழ்வை ஆகுதி செய்தவரே நாவலர். அந்த உயரிய நோக்கை இலட்சியமாக்கிச் சிவதொண்டாகத் தன் வாழ்வை அமைத்துக்கொண்ட நாவலர் சைவர்களுக்கு ஒளியூட்டிய கதிரவனே.

இறைவனின் இருப்பைத் தம் திருமுறைப் பாடல்களின் மூலம் நிறுவியவர்கள் சைவ நாயன்மார்கள். எனவே அவற்றிற்கு வீட்டு வழிபாட்டிலும் ஆலய வழிபாட்டிலும் முதன்மை கொடுக்கப்பட வேண்டியதன் இன்றியமை யாமையை மக்கள் மத்தியில் பெரிதும் வெளிப்படுத்தி யவரும் நாவலரே. நாமும் நாவலர் வழி நின்று இறையருள் நலம் கொண்ட திருமுறைகளைப் போற்றி ஒளி பெறுவோமாக!



# சிவயோகர் சுவாமிகளின்
## ஐம்பதாவது குருபூசை ஆண்டு

**யாழ்ப்பாணத்து மாமுனிவர்
தவத்திரு சிவயோகர் சுவாமிகளின்
ஐம்பதாவது குருபூசை ஆண்டு இது.
கடந்த வருடம் (2014) ஏப்ரல் மாதம்
10ஆம் திகதி ஆரம்பமாகிய சுவாமிகளின்
குருபூசை நிகழ்வுகள்
நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன.**

**இவ்வருடம் (2015) மார்ச் மாதம் 30ஆம் திகதி
நிகழவிருக்கும் சுவாமிகளது குருபூசை தினம்
வரை, ஐம்பதாவது குருபூசை ஆண்டின் சிறப்பு பூசை
வழிபாடுகள் தொடர்ந்து இடம் பெறவிருக்கின்றன.**

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்
முழுவதும் உண்மை — யோகர் சுவாமிகள்

## நல்ல மருந்து

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேன் – (நல்ல)

எல்லையில் லாப்பிணி தீர்க்குமருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து – (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்தும் கணபதிக் குவந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து – (நல்ல)

தையல்நாயகி தாயே
இது நல்ல தருணம் அம்மா
வையம் புகழும் வண்ணை மாநகரில்
வந்த வாணியே, சிவகாமியே
கந்த சுவாமியைப் பெற்ற
தையல்நாயகியே தாயே
தையல்நாயகி தாயே

**- சிவயோக சுவாமிகள்**

## நற்சிந்தனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியதெனக் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படி பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் 'நான் அவனே' என்று தியானஞ் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையே யாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை அவனே அனைத்தும். அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான். அவனுக்குப் பிறப்பில்லை ஆதியந்தமில்லை. ஒரு மாறுதலுமில்லை. முழுதுமுண்மை.

– யோகர் சுவாமிகள்

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்து மதம்



- சைவ வித்தகர் யோ. மோகததாசன்

சாத்திரங்களின் தனித்துவத்தினை தன்னகத்தே கொண்டது இந்துமதம். முன்பு சிந்து நதிக்கரையில் இருந்தவர்களே இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். "சனாதன தர்மம்" என்று அழைக்கப்படுவதும் இந்துமதமே. இந்துக்களின் பிரதான வழிகாட்டியாக வேதங்களும் ஆகமங்களும் இதிகாச இலக்கியங்களும் விளங்குகின்றன. இவைகள் மனித வாழ்க்கையின் வழிகாட்டிகள் மட்டுமல்ல மக்களை வாழவைக்கும் கருவிகள் என்றும் கூறப்படுகின்றது.

மக்கள் இப்புவியில் வாழ்வதற்கே பிறந்துள்ளனர். "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறிய ஔவை மூதாட்டி பிறப்பின் நோக்கத்தை உணர்த்தியுள்ளார். சிறப்பாக வாழ்வதற்கு" தானமும் தவமும் செய்யின் வானவர் நாடு வழிதிறந்திடுமே" என்றும் ஔவை இயம்பியிருக்கின்றார். மக்கள் இம்மண்ணில் பிறந்திறந்துழலும்போது பற்றித் தொடர்வது எமது வினைப்பயன்களாகிய நல்வினை, தீவினைகளேயாகும். அதிலிருந்து மக்கள் விடுபடுவதற்கு இறைவனைத் தொழவேண்டும். பாவங்களை ஈட்டும் கருமங்களை விலக்கி கருணை, அன்பு, தயாளசிந்தை, ஈகை, தானதருமம் முதலிய நற்பண்புகளை மனிதவர்க்கம் வளர்க்க வேண்டும். தன்னுயிர் போல் மன்னுயிரையும் பேணவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றது இந்துமதம்.

உலகியல் வழிபாட்டு அனுபவ முதிர்ச்சியினால் ஞானம் பெற்று உலகியல் பற்றுக்களில் இருந்து தாமாக விடுபட்டு ஈடேற்றம் பெறுவதே வாழ்க்கைத் தத்துவம். இதற்கேற்ற வகையில் மானிட வாழ்க்கையை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு படிநிலைகளாக வகுத்துள்ளனர்.

பிரமச்சரியமானது அறிவு ஆற்றல்களைப்பெறும் கால கட்டமாகவும், கிருகஸ்தமானது பெற்ற அறிவின் துணைகொண்டு இல்லறம் நடாத்தி இன்பம் அனுபவிக்கும் காலமாகவும், வானப்பிரஸ்தமானது உலகியல் இன்பங்களில் அனுபவித்து பின் ஏற்படும் பற்றற்ற நிலையையும் கூறுகிறது. சந்நியாசமானது ஆன்ம ஈடேற்றம் ஒன்றே குறிக்கோளாக உலகியல் பற்றுக்களைத் துறந்து வாழும் வாழ்க்கையைக் குறித்து நிற்கின்றது. உடலை இறைவன் குடியிருக்கும் ஆலயமாகக் கொள்ளலாம்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்கே"

என்கிறார் திருமூலர்.

எனவே உடலை சிறப்பாகப் பேணி உயர்வாழ்வு காண எமக்குப் பல வழிமுறைகளைக் காட்டி வழிநடத்துகின்றது இந்து மதம்.

இல்லறவாழ்வுக்கு வழிவகுத்த இந்துமதம் அறவழி நின்று பொருளீட்டி அதன் மூலம் இன்பங்காண வழிசெய்கிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் அறிவுடைமையாகும். உலகிலுள்ள மற்றைய உயிர்களிடத்தில் அன்புடையவராய் இருப்பது மிக அவசியம். தூய்மை, தன்னடக்கம், வாய்மை, அகிம்சை போன்றவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக அறச்செயல்கள் வழிகாட்டுகின்றன. உண்மையான அன்புடையவர்களுக்கு திருவருள் வந்து கைகூடுகின்றது. இப்படியான அன்பு அறன் உடையோர் சிந்தையிலேயே இறைவன் கோயில் கொள்கின்றான்.

இந்துமதத்தில் கூறப்படும் பணிவும், பண்பும் வணக்கமுறையுடன் சேர்ந்து வாழ்க்கையுடன் இணைந்துள்ளது. தினமும் பெற்றோருக்கு மதிப்பளித்தல், பெரியவர்களை வணங்குதல், குருவைத் தெய்வமாகப் போற்றுதல், சத்தியத்தையும் தன்னடக்கத்தையும் கடைப்பிடித்தல் என்பன வாழ்க்கையில் பூரண நிறைவைப் பெற வழிவகுக்கும்.

உயர்ந்த வாழ்க்கைக்கு உடல் ஆரோக்கியம் இன்றியமையாதது. இந்துமதத்தில் சுகாதாரத்துடன் சேர்த்து சுத்தத்தைப் பேணுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. தோய்த்துலர்ந்த ஆடைகளைத் தினமும் அணிதலும், சைவ உணவை உட்கொள்ளுதலும், யோகாசனம் செய்தலும் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன என இந்துமதம் வலியுறுத்துகின்றது. ஆலயங்களில் வீழ்ந்து வணங்குதல், தலையில் குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல், கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தி குவித்து வணங்குதல், கோயிலை வலம் வருதல் யாவும் வணக்கமுறைகளாக இருந்தாலும் இந்து தத்துவத்தையும், உடல் ஆரோக்கியத்துக்கான விளக்கத்தையும், உயர்ந்த பண்புகளையும் உணர்த்தி வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது.

விபூதி தெய்வத்தன்மை வாய்ந்தது. அதற்குச் சான்றாக திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் விளங்குகின்றது. "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்னும் பதிகத்தைப்பாடி கூன் பாண்டியனது சூலைநோயை தீர்த்த வரலாறு இதற்குச் சான்றாகும். இந்த விபூதியானது மந்திரசக்தி வாய்ந்ததாகவும், மருந்தாகவும் நோய் தீர்க்கும் வல்லமை உள்ளதாகவும் வீடுபேற்றிற்கு உபாயமாகவும் விளங்குகிறது.

இந்துமதத்தில் அனுட்டிக்கப்படுகின்ற வாதத்தின் தத்துவமும் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது. மேலும் மாதத்தில் சில நாட்கள் உணவருந்தாது இருத்தல் உடலுக்குப் பல நன்மைகளைத் தருவதாக இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதன் மூலம் உடல் உறுப்புக்கள் புத்துணர்ச்சியுடன் இயங்குவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு உடல் ஆரோக்கியத்திற்கு வழிகாட்டியாக இந்துமதம் உழைத்துக்களைத்த மனிதனுக்கு ஓய்வளித்து ஆனந்தமூட்டும் பண்டிகை தினங்களை உருவாக்கியுள்ளது. இப்பண்டிகை மூலம் உறவுகள் ஒன்று சேர்கின்றன. அது மட்டுமன்று விருந்தோம்பல், ஒன்றுகூடல், ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், இறைத்தன்மை என்பன மூலம் வாழ்க்கைக்கு மெருகூட்டப்படுகின்றன.

சிறந்த ஆடல் கலையாகிய பரதத்தை இந்துமதம் உலகுக்கு கொடுத்துள்ளது. இங்கு சிவனின் திருநடனம் சிறந்த ஆடல் அரசனாக உயர்ந்து நிற்கின்றது. இதனை நோக்கும்போது இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. உலகின் தோற்றத்துக்குக் காரணம் "நாதம்"தான் என்று கூறுவதுடன் வேதங்களில் சாமவேதம் இசைக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் இந்து தத்துவம் உணர்த்துகின்றது.

"இசையில் வசமாகா இதயம் எது?" என்பதற்கு இணங்க ஆலயங்களில் வாசிக்கப்படும் இசைக்கருவிகள் யாவும் தெய்வீக உணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஆலயங்களில் காணப்படும் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன இயற்கை அழகுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

எல்லாவிதமான வானியலாளர்களும் அந்தக்காலத்திலே கோள்கள் பற்றியும் அவற்றின் இயக்கம் பற்றியும் கூறியுள்ளார்கள். புவியில் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் சூரிய சந்திர கிரகணங்களால் ஏற்படுத்தும் மாற்றத்தையும் கூறியிருக்கின்றார்கள். அதுபோல எவையெவை எவ்வெவ் காலங்களில் எங்கெங்கு தோன்றும் என்பன பற்றியும் இந்துமத சாஸ்திரத்தின் மூலம் அறியமுடிகின்றது.

இந்துமதத்தில் பொதிந்து கிடக்கின்ற அனைத்து செயற்பாடுகளிலும் இறை அன்பைப் புகுத்தி பக்தி உணர்வை ஏற்படுத்தி இருந்ததைக் காணலாம். இந்துமதம் மாபெரும் பொக்கிஷம். எமது சிற்றறிவுக்கு எட்டியவை சிலவே. அதற்கும் எம்மால் விளக்கம் காணமுடியாது என்பதற்காக மூடக்கொள்கைகள் என்று கூறிவிடவும் முடியாது.

ஆகவே வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் உட்புகுந்து மனித தர்மத்துடன் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய அனைத்து விடயங்களையும் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குவது இந்துமதம் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

## திருக்கோயில் வழிபாட்டுமுறை :

கோயிலுக்குச் செல்வோர் உணவு கொள்ளுமுன்னரே நீராடி, தோயந்து உலர்ந்த ஆடைகளைத் தரித்து, விபூதியும் உருத்திராக்கமும் அணிந்து, சந்தியாவந்தனம் முதலியன முடித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு மெல்லமெல்ல நடந்து செல்ல வேண்டும். திருக்கோயிலைச் சமீபித்ததும் கை கால் கழுவி, ஆசமனம் பண்ணி தூலலிங்கமாகிய கோபுரத்தை தரிசித்து வணங்கி, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். அங்கே கொடித் தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்திதேவரையும் வணங்கிக் கொடித் தம்பத்திற்கு அப்பால் ஆண்கள் அட்டாங்க வணக்கமும், பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும். அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவா, புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இங்ஙனம் வணங்கும்போது பூமியிலே சிரசை வைத்து மார்பு பூமியிற்படும்படி வலக் கையை முன்னும், இடக் கையைப் பின்னும் நேரே நீட்டிபின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னும் பொருந்தச் செய்தல் வேண்டும். பஞ்சாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இவை தவிர, திரியாங்க வணக்கமும் செயப்படுதல் உண்டு. திரியாங்க வணக்கமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்துவணங்குதலாம். இது ஆண் பெண் இருபாலாருக்கும் உரியது. இவ்வணக்கங்களும், வீதி வலம் வருதலும் ஒருதரமேனும், இருதரமேனும் செய்தல் குற்றமாம். மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் ஏழுதரமாயினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும்.

கொடித்தம்பத்திற்கு அப்பால் வணங்கிய பின் இரண்டு கைகளையும் குவித்துத் திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல மெல்ல வைத்துக் குறைந்தது மூன்று தரமாயினும், கூடியது இருபத்தொருதர மாயினும் வீதிவலம் வருதல் வேண்டும். அங்ஙனம் வந்து மீண்டும் சந்நிதியிலே வணங்குதல் வேண்டும். ஆலயத்திலுள்ள மூர்த்திகளை வணங்குங்கால் முன்பு துவாரபாலகரை வணங்கிப் பின்பு திருநந்திதேவரை வணங்கி, "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி தந்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய், முன் விக்கினேசுவரரைத் தரிசித்தல் வேண்டும். பின் சிவலிங்கப்பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து அர்ச்சனை செய்வித்து விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். அதன்பின் முறையே சபாபதி (நடராசர்), தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலியோரையும் சமயகுரவர் நால்வரையும் வணங்குதல் வேண்டும். வணங்கும்போது இரண்டு கைகளையும் மார்பிலேனும், சிரசிலேனும் குவித்துக் கொண்டு தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளை மனங்கசிந்துருகி ஓதுதல் வேண்டும். விக்கினேசுவரரைத் தரிசிக்கும் போது முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து கும்பிடுதல் வேண்டும். இப்படிக் குட்டுவதனால் அவ்விடங்களிலுள்ள நரம்புகளில் அமிர்தம் சுரப்பதாகவும், தாழ்ந்தெழுவதினால் அவ்வமிர்தம் உடல் முழுவதும் செல்வதாகவும் பெரியோர் கூறுவர். இவ்வணக்கம் தோப்புக் கர்ணம் அல்லது தோப்புக் கரணம் என வழங்கும்.

இறுதியாகச் சண்டேசுரரைத் தரிசித்துக் கும்பிட்டுத் தோத்திரம் செய்து மூன்றுமுறை கைகொட்டிச் சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்தித்து, வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்து, இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப்பெருமானைத் தரிசித்துப் பலி பீடத்திற்கு அப்பால் மும்முறை வணக்கஞ் செய்து எழுந்து, அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்தை இயன்றமட்டும் உருச்செபித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு அமைதியாக வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும்.

*(இந்து மாமன்ற வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*





# நாவலர் பெருமானின்
# சிறுவர்களுக்கான கதைகள்

## பேராசை பெருந்துயர்

ஓர் ஊரிலே, மிகவும் தரித்திரனாகிய ஒருவன் விறகுவெட்டிச் சுமந்து விற்று, அதனாலே சீவனஞ் செய்து வந்தான். அவன் ஒருநாள், சமீபத்தில் விறகுவெட்டக் கிடைக்காமையினால், மிகுந்த தூரத்தில் ஓர் ஆற்றங்கரையில் உள்ள காட்டிற்குப் போய், அதன் கரையிலே, பட்டுச் சாய்ந்து நிற்கும் மரத்தைக் கண்டு, கோடாலி கொண்டு அதைத் தறித்தான். கோடாலி கழன்று, ஆழமாய் பெருகியோடும் ஆற்று வெள்ளத்துள் வீழ்ந்தது. பசிதாகங்களினாலே மிகவும் களைப்படைந்த அவ்வேழையானவன் 'இனி என்ன செய்வேன்' என்று மனவருத்தமடைந்து, அழுதுகொண்டு நின்றான். அப்பொழுது, அக்காட்டிலிருக்கும் வனதெய்வமானது அவனுக்கு எதிரே வந்து, 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டது. அவன் நடந்ததைச் சொன்னான். உடனே அத்தெய்வம் அவனுக்காக இரங்கி, அவ்வாற்று வெள்ளத்துள் இறங்கி மூழ்கித் தடவிப்பார்த்து, ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் கொண்டு வந்து காட்டி, 'இது தானா உன் கோடாலி?' என்று கேட்டது. அவன் 'அன்று' என்றான். அத்தெய்வம் பின்னும் மூழ்கித் தடவிப்பார்த்து, ஒரு பொற்கோடாலியை எடுத்துக் கொண்டு வந்து காட்டி, 'இது தானா?' என்று கேட்டது. அவன் அதனையும் 'அன்று' என்றான். அத்தெய்வம் பின்னும் ஒரு முறை மூழ்கித் தடவிப் பார்த்து, ஓர் இரும்புக் கோடாலியை எடுத்துக் கொண்டு வந்து காட்டி, 'இது தானா?' என்று கேட்டது. அம்மனிதன் அது தன் கோடாலியாயிருக்கக் கண்டு, மிகுந்த சந்தோஷத்தோடு 'இது தான் என்கோடாலி' என்று சொல்லி, அதனை எடுத்த நன்றிக்காக அத்தெய்வத்தைத் துதித்தான்.

தெய்வம், அவனுடைய சத்தியத்தையும் உறுதியையும் புகழ்ந்து, தான் எடுத்த கோடாலிகள் மூன்றையும் இன்னும் அநேக திரவியங்களையும் பல வரங்களையுங்கொடுத்து, அவனை ஆசீர்வதித்துப் போனது. அத்தரித்திரன் அவைகளைப் பெற்றுப் பெருஞ் செல்வனாய்த் தன் குடும்பத்தாரோடு மகிழ்ந்து வாழ்ந்தான். இந்தச் சமாசாரங்களை விசாரித்தறிந்த வேறொரு விறகுக்காரன், தானும் இவனைப்போலச் செல்வனாக வேண்டும் என்று எண்ணி, அந்தக் காட்டில் ஆற்றோரத்திலே விறகு வெட்டிக், கோடாலியை ஆற்றிலே நழுவவிட்டு நின்று அழுதான். அப்போதும் அவ்வனதெய்வம் முன்போல் ஆற்றுவெள்ளத்துள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துக் காட்ட, அவன் மிகுந்த சந்தோஷத்தோடு 'இது தான் என் கோடாலி' என்றான். தெய்வம் கோடாலியை ஆற்றினுள் எறிந்து விட்டு, அவனைக் கோபித்து நித்திய தரித்திரனாகும்படி சபித்தது. அவன் பேராசை காரணமாகச் சொல்லிய ஒரு பொய்யினால் முன்னையினும் மிகுந்த தரித்திரனாய்ப், பெருந்துன்பத்தை அனுபவித்தான்.



## உண்மையின் பயன்



ஓர் ஊரிலே ஒருவன் பல பாவங்களையும் அஞ்சாது செய்துகொண்டுவந்தான். அவனுடைய குரு 'இப்படிப் பாவங்களைச் செய்து ஏன் கெட்டுப் போகிறாய்? இனி அப்படிச் செய்யாதே' என்று பல புத்திமதிகளை அடிக்கடி அவனுக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். அவன், 'எல்லாப் பாவங்களையும் என்னால் விட முடியாது. உம்முடைய சொல்லுக்காக நீர்விடச் சொல்லுகிற பாவம் ஒன்றை மாத்திரம் விட்டுவிடுகிறேன்' என்றான். குரு 'பொய் சொல்லலாகிய பாவம் ஒன்றையாயினும் ஒழித்து நட' என்று கட்டளை செய்தார்.

அதற்கு உடன்பட்ட சீடன், ஒருநாள் இரவு அந்த ஊரில் அரசனுடைய அரண்மனையிலே திருடும்படிபோய், சமயம் பார்த்துப் பதுங்கி நின்றான். அப்பொழுது, மாறுவேடம் பூண்டு நகர சோதனைக்காகப் புறப்பட்ட அரசன் அவனைக் கண்டு, இவன் திருடன் என்றறிந்து, 'நீ எங்கே வந்தாய்? உண்மைசொல்' என்று கேட்டான். அவன் 'இராசாவுடைய அரண்மனையிலே திருடும்படி வந்தேன்' என்றான். அரசன் ஆச்சரியம் அடைந்து அவன் செய்கை முழுவதையும் பார்க்க நினைந்து, 'நானும் இங்கே திருடும்படி வந்தேன். எனக்கும் பாதிகொடு' என்றான்.

திருடன் அதற்கு உடன்பட்டு, அரசனைக் காவல்வைத்து, அரண்மனைச் சுவரிலே கன்னம் வைத்து, உட்புகுந்து ஒரு பெட்டியிலிருந்த விலையேறப் பெற்ற மூன்று இரத்தினங்களுள் இரண்டை எடுத்துக்கொண்டு, மற்றை ஓர் இரத்தினத்தைப் பாகம்பண்ண முடியாமையினாலே பெட்டியில் வைத்து, வெளியே புறப்பட்டு வந்து, அரசனுக்கு ஒன்றைக் கொடுத்து, மற்றொன்றைத் தான் கொண்டுபோயினான். மாறுவேடம் பூண்டு வந்த அரசன் அவன் பெயர் ஊர்களைக் கேட்டு அறிந்து கொண்டான்.

பின்பு அரசன் அரண்மனையினுள்ளே போய்ப் பெட்டியைப் பார்த்தபொழுது, ஓர் இரத்தினம் இருக்கக்கண்டு சந்தோஷித்து, மற்றைநாட் காலையில் தன் மந்திரியை அழைப்பித்து, 'நம்முடைய அரண்மனையினுள்ளே கள்வர் வந்து புகுந்ததாகத் தெரிகிறது. பெட்டியைத் திறந்து பார்' என்றான். மந்திரி திறந்து பார்த்துப், பெட்டியிலிருந்த ஓர் இரத்தினத்தையும் தான் எடுத்து மறைத்துக் கொண்டு, 'விலையேறப்பெற்ற மூன்று இரத்தினங்களையும் காணவில்லை' என்றான். அரசன் அவனை உத்தியோகத்தினின்றும் நீக்கி, சத்தியத்திற் சிறந்த அந்தத் திருடனை அழைப்பித்து உபசரித்து, அவனைத் தனக்கு மந்திரியாக்கிக் கொண்டான்.


**(நன்றி :- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வழங்கிய பாலபாடம் - மூன்றாம் புத்தகம்)**




# மன அமைதிக்கு வழி தியானம்

செல்வி. தேவப்பிரியா பாலச்சந்திரன்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

மனம் ஒரு குரங்கு. அங்கும் இங்கும் அலைபாயும் மனதை ஒரு கூட்டுக்குள்ளே கொண்டு வருவதென்பது அத்தனை சுலபமானதல்ல. இத்தகைய மனங்களை ஒரு முனைப்படுத்தி கட்டுக்குள் கொண்டு வந்து வாழ்க்கையின் சீர்த்தன்மை விதியை மிக அழகாக எடுத்தியம்பி நிற்பது தியானம்.



லௌகீக வாழ்க்கையில் முடிவில்லா ஆனந்தத்தை அடைவதே மனித இனத்தின் குறிக்கோளாக இருக்கிறது. இவ்வுலகில் ஒவ்வொருவரும் ஆனந்தத்தை அடைய முயற்சி செய்கிறார்கள். அனால் மிகச்சிலரால்தான் அதை அடைய முடிகிறது.

ஒவ்வொரு ஆத்மாவும் சக்தி வாய்ந்த தெய்வீகத் தன்மை கொண்டது. மனிதனிடத்திலுள்ள தெய்வீகச் சக்தியைப் பயன்படச் செய்வதற்கு தியானம் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. உடல் சம்பந்தமான விடயங்களில் ஊக்கம் காட்டும் இந்தக் காலகட்டத்தில் உலகெங்கும் முன் எப்போதையும் விட முக்கியத்துவத்தை தியானம் பெற்றுள்ளது.

நமது லௌகீக வாழ்க்கையில் ஆத்திரம், கவலை, கோபம், தக்கம், ஏமாற்றம், ஆகிய உணர்ச்சிகளை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. முழுமை அடைந்த ஒருவன் இவை எவற்றாலும் பாதிக்கப்படுவதில்லை. அசைவில்லாத உறுதி பெற்ற மனிதனாய் இருப்பான். இவ்வாறு தியானத்தால் முன்னேற்றம் உண்டாவதற்கு வழிமுறைகளைப் பெரியவர்கள் விளக்கியுள்ளனர். யோக சுவாமிகளும், ஞானிகளும் சிறந்த சரியான உதாரணங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

"தியானம்" (Meditation) என்ற சொல்லைக் கேலியும், கிண்டலும் செய்வோர் பலர். தியானம் என்பது தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சமாக திகழுகின்றது என்பது ஒரு பொதுவான உண்மைதான். என்றாலும் ஆன்மிக நோக்கத்துடனேயே தியானத்தை பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் கூட தியான முறையைப் பயன்படுத்தலாம்.

"மனிதனை விலங்குகளினின்றும், பிரித்து பெருமை அளிப்பது, உயர்வளிப்பது அவனிடம் அமைந்திருக்கும் மனிதத் தன்மைதான், மனிதத் தன்மை என்பது மனிதனின் ஆளுமையைக் குறிப்பதாகும். ஆளுமை என்பது மனிதனது மகத்தான வல்லமையைக் குறிக்கும். ஒரு சொல் இவ்வாறு பிரமிப்பூட்டும் வல்லமையைப் பெறுவதற்கு தியானம் உதவுகின்றது." இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

தியானத்துக்குத் தடைகளாக இருப்பது மனமும், உடலும் வியாதியில் சிக்கி இயங்காமையேயாகும். ஸ்தூல உடல் என்பது மனிதன் உலகுடன் தொடர்பு கொள்ள உதவுவதாகும். உடலை இயக்கும் மனம் (ஆத்மா) என்னும் சூக்கும உடல். இவ்விரண்டும் ஒன்றுபட்டு இயங்கவில்லை என்றால் மனிதனில் கோளாறு ஏற்படுகிறது.

தியானம் ஓர் அழகிய, தூய்மையான விடயம். இதனை அனுபவம் செய்து சந்தோஷத்தையும், திருப்தியையும் மன நிம்மதியையும் பெருக்கிக் கொள்ளலாம். அன்பே உருவான சமுதாயத்தை அனுபவம் செய்யலாம்.

"உன்னை நேசிப்பது போல உன் அயலவனையும் நேசி" எனும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய பொக்கிஷத்தை அனுபவம் செய்வதற்கு எம்மை உடல் ரீதியாகவும், ஆத்ம ரீதியாகவும் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். தியானத்தை அனுபவம் செய்வதற்கு சுயகட்டுப்பாடு அவசியமாகின்றது.

தியானத்துக்கு – முன்னதான ஆறு படிகளை பதஞ்சலி முனிவர் வரிசைப்படுத்தியுள்ளார்.

இயமம்-மன ஒழுக்கம்
நியமம் - உடல் ஒழுக்கம்
ஆசனம் - உடற்பயிற்சி
பிரணாயாமம் - மூச்சை அடக்கல்
பிரத்தியாகாரம் - புலனடக்கம்
தாரணை – மன ஒருமை என்பவையே அவை.

ஆன்ம முன்னேற்றத்தை அடைவதற்கு முக்கியமானது மனத்தூய்மையே.

"There is no mortal truly wise a restless of one.
Wisdom is the repose of minds"

"ஞானம் பெற்ற எந்த மனிதனும் பதற்றம் அடையும் நிலையில் இருப்பதில்லை. மன அமைதி நிலையே ஞானம் என்றழைக்கப்படுகிறது." என லீயா வேட்டர் என்பவர் குறிப்பிடுகிறார்.

தியானத்தை அனுபவம் செய்ய முதல் ஒவ்வொருவரும் அநாவசிய எண்ணங்களை நீக்க வேண்டும். கடந்த கால சந்தேகங்களை பற்றியும் நீங்கள் அடைந்த தோல்விகளைப் பற்றியும் ஒருபோதும் நினைத்துச் சோர்வடையாதீர்.

எதிர்காலத்தில் நடப்பவையெல்லாம் நன்மையானவை மட்டும் தான் என்று ஆழ்மனத்துக்கு (Sub conscious mind) தியானத்தின் மூலம் தகவல் கொடுப்போம்.

தூய்மையான, அமைதியான அன்பான ஆத்மாவுடன் தியானத்தை அனுபவம் செய்யுங்கள்.

தியானத்துக்கு மிகவும் அவசியமாக இருப்பது ஆரோக்கியமான மனமே. இதற்காக ஒருவர் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உண்மையாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு பொய்யைச் சொன்னால் வரிசையாகப் பொய்யே சொல்ல வேண்டிவரும். மிகவும் புத்திசாலித்தனமாக சொல்லப்படும் பொய்கள் கூட நாளடைவில் உண்மை இல்லை என்று கண்டு கொள்ளப்பட்டுவிடும். மனதை அதிகமாகக் கவரக் கூடியது பண ஆசையும் காம உணர்வுமே. இவற்றில் மனம் பதிந்திருக்கும் வரை தியானம் கைகூடாது. மேலும் எமது வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துபவையாக ஆன்மிக நூல் படிப்பு, இறைவனைப் பணிதல் என்பனவும் இருக்கின்றது. ஒருவன் எதையும் தானே தெரிந்து கொண்டு விட முடியாது. ஆன்மிக நூல் படிப்பு என்பது ஒருவன் தன்னைப் பற்றி அறிவதுதான். உலகம் என்பது என்ன? உடல் என்பது என்ன? மனம், புத்தி, ஆன்மா என்று அதை வகைப்படுத்தி அறிவது எல்லாம் ஆன்மிக நூல் படிப்பினாலேயே முடியும். நூல்களைப் படிப்பதை வடமொழியில் "சுவாத்யாயம்" என்று கூறுவர். இது உண்மையில் ஒருவன் தன்னைப்பற்றி அறிவதே என்று பொருள்படும்.

மேலும் யோக நூல்களைப் படித்தல், பதஞ்சலி, திருமூலர், கீதை, உபநிடதம் ஆகியவற்றைப் படிப்பதாலும் எமது ஆத்மாவை தூய்மையாக்கி பரமாத்மாவுடன் இலகுவில் தொடர்புபடுத்தி சந்தோஷமாக இருக்கலாம்.

எமக்கு கிடைத்துள்ள இந்த அழகான வாழ்க்கையை மேலும் மேலும் சந்தோஷமானதாக மாற்றி, தூய்மையான அன்பை உங்களிடத்திலும், பிறரிடத்திலும் அனுபவம் செய்து வாழ்க்கையில் வெற்றி இரத்தினங்களை உங்களது ஆக்கிக்கொள்ள "தியானம்" என்னும் பொக்கிஷத்தை அனுபவம் செய்யுங்கள்.

# நாவலர் பெருமானின் நற்போதனைகள்

## பெற்றாரைப் பேணல்

நம்மைப் பெற்றவர்கள் நம்முடைய தாயும் தந்தையும். நாங்கள் பிறந்தநாள்முதல், கல்வி கற்று அறிஞர்களாய்ப் பொருள் சம்பாதித்துச் சீவனப் பருவத்தை அடையும்வரையும், நமக்கு வேண்டிய அன்னவஸ்திரங்களைத் தந்தும், நமக்கு வியாதி வந்த காலத்திலே அதற்காக மனம் பதைபதைத்து வைத்தியஞ் செய்வித்துச் சௌக்கியப்படுத்தியுங், கல்விகற்பித்தும், நல்ல பழக்கங்களைப் பழக்கியும், எப்பொழுதும் நமக்காகப் பாடுபடுபவர்கள் நம்முடைய பிதாமாதாக்களே. நம்மைக் கருவில் வகித்த நாள்முதல், நாம் பிறந்து வளர்ந்து பாலாவத்தையை அடையுமளவும், மாதாவானவள் நமக்காகப்பட்ட பிரயாசைகளையும், கவலைகளையும், நம்மால் அளவிடுதல் முடியாது.

பிதாமாதாக்கள் நம்மைக் குறித்துச் செய்யும் உபகாரங்களுக்கோ நம்மாற் பிரதியுபகாரஞ் செய்ய முடியாது. ஆயினும், அவர்கள் செய்த நன்றிகளை உள்ளத்தில் வைத்து, அவர்கள் முட்டுப்படாவண்ணம் அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றுதலும், அவர்கள் ஏவுதற்கு முன் குறிப்பறிந்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தலும், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும் அவர்களுக்கு நோய் வந்தகாலத்திலே சிறந்த வைத்தியரைக் கொண்டு வைத்தியஞ் செய்வித்தலும், அவர்கள் இறக்கும் பொழுது அவர்களைப் பிரியாது உடனிருத்தலும், அவர்கள் மனம் கடவுளிடத்தே செல்லும்படி பெரியோர்களைக் கொண்டு நல்லறிவைப் போதிப்பித்தலும், இறந்தபின் அவர்களுக்குச் செய்யும் உத்தரகிரியைகளைச் சிரத்தையோடு செய்தலும், அவர்களுடைய நன்மைகளை எடுத்துப் பாராட்டுதலும் ஆகிய இவைகளை நாம் பிதா மாதாக்களுக்குச் செய்யுங்கடமைகளாகக் கொண்டொழுகுதல் வேண்டும். நாம் இப்படிப் பிதாமாதாக்களை உபசரித்து, அவர்கள் செய்த நன்றியை மறவாதொழுகுவோமானால், அதுகண்ட நம்முடைய பிள்ளைகளும் நம்மை உபசரிக்கும்.

நாம் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அறிதற்குமுன் கண்ணாற் கண்ட தெய்வம் தாய் தந்தையர்களே ஆதலாலும், என்றும் நம்முடைய நலத்தை விரும்பி அதற்காகப் பிரயாசப்படுபவர்கள் அவர்களே ஆதலாலும், அவர்களை ஒரு பொழுதும் மறவாது, நம்முடைய தெய்வங்களாகக் கொண்டு, வழிபடுதல் வேண்டும். இக்கருத்துப் பற்றியே ஔவையாரும் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்று சொல்லியருளினார்.


- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.
(பாலபாடம்- மூன்றாம் புத்தகம்)

## உதயகாலப் பிரார்த்தனை

"பெருங் கருணைக் கடவுளே! சென்ற இராத்திரியிலே தேவரீர் அடியேனைக் காத்தருளினதின் நிமித்தம், தேவரீரை அடியேன் துதிக்கிறேன். இந்தப் பகலிலும் அடியேனைக் காத்தருளும். அடியேன் பாவங்கள் செய்யாவண்ணம், அடியேனைத் தடுத்து ஆட் கொண்டருளும். அடியேன் முன் படித்த பாடங்களும், இனிப் படிக்கும் பாடங்களும், அடியேன் மனசிலே எந்தநாளும் தங்கும்படி அருள் செய்யும்."

(நாவலரின் முதலாம் பால பாடத்திலிருந்து)

## மன்னார் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் வரலாறும், வளர்ச்சியும்



# கடந்து வந்த பாதை

**வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன்**
செயலாளர் - ஞானவைரவர் தேவஸ்தானம்.

1988 ஆம் ஆண்டு காரத்திகை மாதம் மன்னார் பெரியகடைப் பகுதியிலேயுள்ள ஒரு பெரிய நீர்த்தேக்கத்தின் கரையுடன் இணைந்த 'புறம்போக்கு' நிலத்திலே, ஒரு சின்னஞ்சிறு ஓலை குடிசையிலே, "குடிகள் இருக்குமிடத்தில் கோவில் ஒன்று அவசியம்" என ஏற்கனவே சிலரது மனதிலே கருவான சிந்தனையின் வெளிப்பாடாக உருவானதே மன்னார் பெரியகடை ஞானவைரவர் தேவஸ்தானம். உருவாகி அண்ணளவாக மூன்று தசாப்தங்களை நெருங்குகின்ற இன்றைய காலகட்டத்திலே வனப்பும் பொலிவும் நிறைந்த கம்பீரமான தோற்றத்துடன் புதிய கட்டிடத்திலே பிரதிஸ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது என்று சொன்னால், இதனது வரலாறு பத்தோடு பதினொன்றாக எழுதப்படவேண்டிய ஒன்றல்ல என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோன்று தம்மை மதச்சார்பற்ற சமரச சிந்தனையாளர்காளகக் காட்டிக்கொள்வதன் மூலம் தமது உயர்பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற எண்ணத்திலும், தமது பதவி சுகத்திற்கு தாம் சார்ந்த மதம் எதுவிதமான இடைஞ்சலாகவும் இருந்து விடக்கூடாது என்ற சுயநலம் காரணமாகவும் சில உயர் அதிகாரிகள் தமது பதவியின் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து உத்தியோகபூர்வமாகவும், உத்தியோகபூர்வமற்ற முறையிலும் இவ்வாலயத்திற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தினார்கள் என்ற "உண்மை"யை வெளிப்படுத்துவது; எல்லா இடையூறுகளையும் தாண்டி கும்பாபிஷேகம் செய்யுமளவிற்கு இவ்வாலயம் உறுதியாக உயர்ந்து விட்ட நிலையிலே பொருத்தமானது தானா? என்ற தயக்கம் என்னைச் சற்று தடுமாற வைத்தாலும்; உள்ளதை உள்ளபடி உரைப்பதுதான் வரலாறு என்ற அடிப்படையில் வரலாற்றை திரைபோட்டு மறைப்பதற்கு நான் யார்? என்ற எண்ணம், என்னைச் சுதாகரித்துக் கொண்டு தொடர்ந்து எழுதத் தூண்டுகின்றது. இந்த அதிகாரிகள் சுயநலத்திற்காக இவ்வாலயத்திற்கு எதிராகச் செயற்பட்டபோது, இவ்வாலயத்திற்கான ஆதரவினை அதிகரிப்பதற்கும், சைவ சமயத்தவரிடையே ஒற்றுமையையும், விழிப்புணர்வினையும் ஊக்குவிப்பதற்கும் தாங்களும் மறைமுகமாக ஒரு முக்கிய காரணியாக விளங்கப்போவதனைப் பாவம் அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

அந்த நேரத்தில் எல்லா இயக்கங்களும் செயற்பட்டுக்கொண்டிருந்த காலம். ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த செல்வரட்ணம் ஜெயமோகன் என்பவரும், அவருடன் சோதிலிங்கம் ஆசிரியரும் திருக்கேதீச்சரம் சென்று புலவர் திருநாவுக்கரசு ஐயாவிடம் ஒரு சூலம் ஒன்று வேண்டும் என்று கேட்க அவர் கோயில் களஞ்சிய சாலையில் ஒரு அழகிய சூலம் ஒன்று உள்ளது, எடுத்துத் தருகின்றேன் என எடுத்துக் கொடுத்தார். அந்த சூலத்தைக் கொண்டு வந்து நட்டு நான்கு பக்கமும் தடிகள் போட்டு ஓலையினால் வேயப்பட்டு ஒரு சிறு குடிசையில் வைரவர் அருள்பாலித்தார். இந்த சூலம் நாட்டப்பட்டு ஐந்து மணித்தியாலத்தில் ஈபிஆர்எல்எப் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் சூலத்தை கழட்டி எறிந்து விட்டு சென்றுவிட்டார். இது சம்பந்தமாக நடந்த வாய்த்தர்க்கத்தின் இறுதியில் குட்டிப் போராக மாற சூலத்தை கழட்டி எறிந்த இயக்கத்தைச் சேர்ந்த இருவர் துரதிர்ஸ்டமாக மரணமடைந்தனர். இந்த சூலத்தை கழட்டி எறிந்தவர் மூன்றாவது நாள் இரத்தவாந்தி எடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கும்போது உயிரிழந்தார். இதன் பின்பு மீண்டும் சூலம் அதே இடத்தில் நாட்டப்பட்டு சீமெந்து போட்டு கழட்ட முடியாமல் காவல் போடப்பட்டது. அப்போது அரசாங்க அதிபராக இருந்த திரு. தர்மபாலன் அவர்கள் இருகட்சியினரையும் அழைத்து கலந்துரையாடிதற்கு பின் அமைதி ஒன்று நிலைநாட்டப்பட்டது. இந்திய அமைதிப்படையினர் 1989 கடைசிப் பகுதியில் வெளியேற இவ்விரு இயக்க உறுப்பினர்களும் அவர்களுடன் வெளியேறிய போதும், சிறு ஓலைக்கொட்டகையாக இருந்த கோயிலில் வழிபாடுகள் தங்குதடையின்றி நடைபெற்று வந்தன. விடுதலைப்புலிகளின் இயக்க உறுப்பினர்கள் மன்னார் பட்டினத்தில் தங்களுடைய நிலையை மேம்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அவர்கள் மத சம்பந்தமான எந்தவிடயங்களிலும் தாங்கள் ஈடுபட்டு கருத்துக்கள் கூறுவதில்லை என்று சொல்லி இந்த விடயங்களில் தலையிடவில்லை. 1990 ஜூன் மாதம் முதல் மக்கள் இடம்பெயரத்தொடங்கினர். 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இராணுவம் மன்னார் தீவினைக் கைப்பற்ற விடுதலைப்புலிகள் வெளியேறினர். அரசாங்க அதிபராக அமரர் செபநாயகம் ஐயா இருந்தபோது "இந்த கோயிலை அகற்றச்சொல்லி எனக்கு நிறைய நெருக்குவாரங்கள் வந்து கொண்டிருந்தன. "என்னுடைய அரச அதிபர் வேலையினை கவனிக்க முடியாமல் இவர்களுக்கு பதில் சொல்லவும், பதில் எழுதவும் வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கின்றேன். இந்நிலையில் அடே மச்சான் நான் அடிக்கிற மாதிரி

அடிக்கின்றேன். நீ அழுகிற மாதிரி அழு" என்று சொல்லி வெளியேறும் உத்தரவு ஒன்றை அனுப்பி வைத்தார். நான் அவருக்கு பதில் எழுதும் போது "அந்த காணியில் வைரவப் பெருமான்தான் இருக்கின்றார். அவரை வெளியேறச் சொல்லி நீங்கள் வைரவருக்கு அறிவித்தல் அனுப்புங்கள்" என்று சொல்லி பதில் அனுப்பி வைத்தேன். அதன்பின் பதவியேற்ற எனது மிக நெருங்கிய நண்பராகிய திரு.கந்தையா கணேஸ் அவர்கள் இந்தக் கோயில் பிரச்சினையில் தலையிடத் தொடங்கினார். அரசாங்க அதிபரான திரு.கந்தையா கணேஸ் அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அடாத்துக்காணிச் சட்டத்தின்கீழ் இந்தக்காணியை கச்சேரிக்கு கையளிக்குமாறு எழுத்துமூலம் அறிவித்தார். இவர் அரசாங்க அதிபராக வருவதற்கு முன்பு இந்தக்காணி முழுவதும் கோயிலுக்கே சொந்தமானது என்ற நிலைப்பாட்டில் இருந்தார். இலங்கையை ஆண்ட இராவணனுக்கு பத்து தலைகள் என்றபோது நம்பமுடியாத நான் பதவியில் இருப்பவர்களுக்கு பதவிக்கு வருவதற்கு முன்னும் பின்னும் எத்தனை முகங்கள் இருக்கின்றன என நினைத்து கம்பனை முற்றுமுழுதாக நம்பினேன்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று சில கூட்டங்கள் இந்த அரசாங்க அதிபரினால் நடாத்தப்பட்டது. இந்தக்கோயில் சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் என்று அடிக்கடி கூட்டங்கள் கச்சேரியில் நடத்தப்பட்டது. இந்தச் சந்திப்புகளில் எல்லாம் கோயில் நிர்வாக சபையினரை சட்டத்தையும், ஒழுங்கையும் மதிக்காத ஒரு குழுவாக சித்தரித்துக் காட்டுவதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இதனால் இந்தக்கூட்டங்களுக்கு போகும்போது நாங்கள் சில முன்னாயத்தங்களை செய்ய வேண்டியநிலை ஏற்பட்டது. இந்த நிலையில் திணைக்கள தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று கச்சேரியில் நடைபெறும் எனவும் அப்போது இந்தக் கோயில் பிரச்சினைக்கு ஒரு தீர்வுக்கான ஒரு கலந்துரையாடலும் இடம்பெறும் எனவும், இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சிநிரலில் முதலாவதாக போடப்பட்டிருந்தது. அத்துடன் இந்தக் கூட்டத்தின் நோக்கம் நல்ல தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அல்ல கோயில் நிர்வாகத்தினரை எல்லோர் முன்னிலையிலும் குற்றவாளிகளாக எண்ண வைக்கக்கூடிய அறிவும், ஆற்றலும் அவருக்கு இருக்கின்றது என்பதனை நான் அறிவேன். இக்கூட்டத்தில் திணைக்களத்தலைவராக கலந்துகொண்ட நான் ஆரம்பத்திலேயே அரசாங்க அதிபரின் மனநிலையினைக் குழப்பினால் மட்டுமே அவருடைய திட்டத்தினை நிறைவேற்ற முடியாமல் செய்யமுடியும் என எனதுள்ளம் சொல்லியது. ஆகவே கூட்டம் தொடங்கியவுடன் இந்தக்கோயில் பல்லவர் காலத்திலிருந்து இந்த இடத்தில் இருக்கின்றது. பல்லவர் காலம் முடிந்து சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலம் முடிந்து, இலங்கை அரசர்கள் காலம் முடிந்து, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலம் முடிந்து இலங்கை சுதந்திரம் பெற்றபின்பும் இந்தக்கோயில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஆகவே இந்தக்கோயில் சம்பந்தமாகவோ, காணி சம்பந்தமாகவோ கதைப்பதற்கு தற்போதைய அரசாங்க அதிபருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்ற பந்தை வீசி எறிந்தேன். சோதனை எழுதிவிட்டேன் என்ன பெறுபேறு கிடைக்கும் என காத்திருக்கும் மாணவன் போல ஒரு பதட்ட நிலையில் நானிருந்தேன். எறிந்த பந்தினால் விக்கட் பறக்குமோ அல்லது பௌன்றி சிக்சர் அடிப்பாரோ என்ற எண்ணமே மனதைக் குழப்பிக்கொண்டிருந்தது. அப்போது அரசாங்க அதிபர் மிகவும் குழம்பிப்போய் நாக்குழற "உங்களுக்கு சசசசச சரித்திரம் தெரியாவிடில் இப்பேர்பட்ட கூட்டத்தில் வாய்திறந்து கதைக்கக்கூடாது" என்று முகம் சிவந்த நிலையில் கை, கால் நடுங்க பதிலளித்தார். நான் போட்ட பந்தில் அவர் க்ளின் போல்ட் ஆகிவிட்டார் என எனது மனம் சொல்ல நான் அவரை பார்த்து மிக அன்பாகச் சிரித்தேன். அப்பொழுது அவர் சரித்திரம் தெரியாதென்பது ஒரு சிரிக்க வேண்டிய விடயமா "என்று கேட்டார். அப்போது நான் "மருத்துவப் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் அதன் பின்னர் பட்டப்பின் படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கற்ற ஒரு மருத்துவ பட்டதாரிக்கு சரித்திரம் தெரிய வேண்டும் என்று நீங்கள் நினைத்த அறியாமையை நினைத்துத்தான் சிரித்தேன்" என்று சொன்னபோது அவர் ஆடிப்போனார். அதன்பின் கூட்டத்தில் கோயில் பிரச்சினை சம்பந்தமாக கதைப்பதை விட்டுவிட்டு நிகழ்ச்சி நிரலில் இரண்டாவது விடயத்திற்கு சென்றுவிட்டார். ஆனாலும் பல்லவர் காலத்திலிருந்து இந்தக் கோயில் இருந்தது என்று சொன்ன பெரிய பொய் எனது மனதை உறுத்திக்கொண்டிருந்தது. ஆகவே இந்தக் கோயிலைக்கட்டும்போது ஆதிவைரவரை அசைக்காமல் அதே இடத்தில் வைத்து பல்லவர் காலத்து சிற்ப முறைப்படி வடிவமைக்கப்பட்டது.

சைவ சமயத்தவர்களது தன்மானத்தின் சின்னமாகத் தலை நிமிர்ந்து நிற்கும் இந்த ஆலயத்தின் அத்திவாரத்தின் உள்ளே வெறும் கல்லும் மணலும் கொண்ட சீமெந்து கலவை மட்டுமல்ல; தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், கடின உழைப்பும், வியர்வையும் எதிர்கொண்ட நெருக்கடிகளும், அவற்றினால்பட்ட அவமானங்களும், அதனால் சுமந்த வலிகளும், வேதனைகளும் கொலை அச்சுறுத்தல்களும், கொலை முயற்சிகளும், விழுப்புண்களும், ஏக்கங்களும், ஏமாற்றங்களும், மௌனமாகச் சிந்தப்பட்ட கண்ணீர்த்துளிகளும் கூடப் புதைக்கப்பட்டுள்ளன என்ற "செய்தி" வாழும் தலைமுறையான நாம் அறிந்ததுதான் என்றாலும் வருங்காலச் சந்ததியும் தெரிந்து கொள்ளச்செய்ய வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

இவ்வாலயச் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலே பலரும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு பங்களிப்புக்களை வழங்கி வந்துள்ளனர் - வழங்கி வருகின்றனர். அவர்கள் எல்லாம் போற்றப்பட வேண்டியவர்கள் - கௌரவிக்கப்படவேண்டியவர்கள் - இவ்வாலய வரலாற்றுப் பக்கங்களிலே இடம்பெற வேண்டியவர்கள்.

இவ்வாலயச் செயற்பாடுகளிலே ஆரம்பத்திலே முக்கிய மூன்று பதவிகளை யார் யார் பொறுப்பேற்பது என்பதனைத் தீர்மானிப்பதற்கு ஆலய முன்றலிலே திருவுளச்சீட்டு மூலம் வைரவப்பெருமானது சித்தம் வேண்டப்பட தலைவராக திரு. சு. பிருந்தாவனநாதனும்,

செயலாளராக வைத்தியகலாநிதி. மு.கதிர்காமநாதனும், பொருளாளராக அமரர் ம.குணரத்தினமும் பொறுப்பேற்க வேண்டுமென வைரவப்பெருமான் திருவருள் பாலித்தார். இவர்களுடன் திரு. பவளராசா, திரு. செ.ஸ்ரீரங்கநாதன், திரு. கு.ஜெகராசா, திரு. செ.ஸ்ரீஸ்காந்தா, திரு.வீ.நடராசா, திரு.மு.கதிரவேலு ஆகியோர் முலாவது நிர்வாக சபையாகச் செயற்படத் தொடங்கினார்.

ஒவ்வொரு நாளும் காலை வேளையில் ஆலயத்தைத் துப்பரவு செய்து விளக்கேற்றி வழிபாடு செய்யும் பணியை திரு. பவளராசா அவர்களும், மாலை வேளைகளில் அப்பணியை திருமதி. மனோன்மணி அவர்களும் தாமாக முன்வந்து முன்னெடுத்தனர். வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறாக அமைதியாக இவ்வாலயம் எனும் குழந்தை உடம்பு புரட்டித் தவழத் தொடங்கியது. காலம் எதற்காகவும் காத்திருப்பதில்லையே. 1990களின் பிற்பகுதி வந்தது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தனர். புகழ்பூத்த திருக்கேதீச்சரம் ஆலயம் கூட யாருமே அப்பிரதேசத்திற்குச் சென்றுவர முடியாத நிலையில் பூசைகள் எதுவுமின்றிப் பூட்டப்பட்டிருந்தது. மன்னார் நகர மக்கள் பாதுகாப்புத்தேடி பெருநிலப்பரப்பிற்கும் மன்னார் தீவினுள்ளே தாராபுரம், எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, கரிசல், பேசாலை போன்ற பகுதிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். அதனால் மன்னார் நகரிலுள்ள ஆலயங்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தது.

மன்னார் நகரப்பகுதியில் இடம்பெயராது, இடம்பெயரமனமின்றி அச்சத்துடனும், பீதியுடனும் மனம் பேதலித்துத் தங்கி நின்ற சைவமக்களுக்கு – யாரொடு நோகோம்? யார்க்கெடுத்துரைப்போம்? என ஏங்கி நின்ற மக்களுக்கு – மன ஆறுதலும், அமைதியும் ஆற்றுப்படுத்தலும் தேவையாயிருந்த அந்த நேரத்திலே அபயம் கொடுத்து நம்பிக்கையும் மனத்தைரியத்தையும் அளித்த ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் மட்டுமே விளங்கியது. மன்னார் நகரப் பகுதியிலே பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும்; இவ்வாலயப் பிரதேசத்திலே எதுவித அசம்பாவிதமும் இடம்பெறாததால் "இவ்வாலயம் மட்டுமே தமக்குள்ள ஒரே ஒரு பாதுகாப்பு" என்ற உணர்வினையும், நம்பிக்கையையும் அது ஏற்படுத்தியது. காவல் தெய்வமாம் வைரவர் தம்மைப் பாதுகாப்பார் என மக்கள் நம்பினர். மிகவும் குறுகிய காலத்திலே மன்னார் சைவமக்களின் பெருநம்பிக்கைக்குரிய ஆலயமாக வளர்ச்சியடைந்தமைக்கு இந்த மகிமைதான் முக்கிய காரணியாக அமைந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் மெல்ல மெல்ல தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியபோது கையெடுத்துக் கும்பிடுவதற்கு, தமது மனக்குறையை இரந்து முறையிட்டு வேண்டுதல் செய்வதற்கு, பிரார்த்தனைகள் மூலம் ஆறுதலையும் தேறுதலையும் பெற்றுக் கொள்வதற்கு இந்த ஆலயம்தான் கைகொடுத்து உதவியது. இந்த ஆலயத்திலே வந்து மக்கள் வைத்த நேர்த்திகளும், வேண்டுதல்களும் அவை விரைவாகவே கைகூடியதனால் ஏற்பட்ட நம்பிக்கையும் ஈடுபாடும் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டதனால் இவ்வாலயத்தின் கீர்த்தி மீது பலருக்கு ஏற்பட்ட ஈர்ப்பும் நாளுக்கு நாள் இவ்வாலயத்திற்கு வரும் அடியார்கள் தொகையை அதிகரிக்க வைத்தது. இந்தக் காலக்கட்டத்தில் கட்டிடத்திணைக்களத்தில் பொறியியலாளராக கடமையாற்றிய திரு.வி.பி. மாணிக்கவாசகர் தன்னுடைய ஐந்து வயதில் இறந்த சரண்யா என்ற பெண்பிள்ளையின் ஞாபகமாக காண்டாமணியொன்றை அன்பளிப்புச் செய்திருந்தார். இது இருதண்டவாளங்களால் இணைக்கப்பட்டு பூசை நேரங்களில் அற்புதமான இனிய ஓசையை அந்தப்பிராந்தியம் முழுவதும் கொடுத்துக்கொண்டிருந்தது. இந்தச் செய்தியை அறிந்ததும் அரசாங்க அதிபர் அப்போது பொலிஸ் அத்தியட்சகராக இருந்த பௌத்த சிங்களவரான இரட்ணநாயக்கா என்பவரிடம் இந்த மணியை உடனடியாகக் கழட்டும்படி கட்டளைப்பிறப்பித்து கடிதம் அனுப்பினார். அதற்கு பொலிஸ் அத்தியட்சகர் "இந்த மணி ஒரு நேத்திக்கடனுக்காக தன்னால் போடப்பட்டதென்றும், இறைவனுக்கு அர்ப்பணமான ஒரு பொருளை கழட்டுவதென்பது பஞ்சமாபாதகமான செயலென்றும், ஆகவே தன்னால் அதனை எக்காரணம் கொண்டும் கழட்ட முடியாது என்றும், முடியுமானால் அரசாங்க அதிபரை அந்த மணியினைக் கழட்டிக்கொண்டு செல்லுமாறும், அப்படி ஒரு முயற்சி செய்யப்படும் போது பொலிசார் பார்த்து, கைகட்டிக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள் என்பதனையும் தங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்" என்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். இந்தக்கடிதம் கிடைத்ததும் இந்த மணியை கழட்டும்படி இராணுவக் கட்டளைத்தளபதிக்கு வேண்டுகோள் விடுத்தார். பொலிசாருடன் கதைத்த இராணுவத்தளபதி போட்டது போட்டபடியே இருக்கட்டும். இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் வரை மேற்கொண்டு எந்தவேலையும் செய்ய வேண்டாம் என்று கோயில் நிர்வாகத்தைக் கேட்டுக்கொண்டார்.

வெய்யில், மழை போன்ற இயற்கைத் தாக்கங்களின் இடையூறுகளின்றி அடியவர்கள் அமைதியாக வழிபாடு செய்வதற்கு அத்தியாவசியமான சில அடிப்படைக் கட்டுமானங்களின் தேவை எழுந்தது. அவற்றினைப் பூர்த்தி செய்ய முற்பட்டபோதுதான் பிறமதத்தவர் கூட எம்மதத்தின் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளனர் என்பதனைப் புரிந்து கொள்ள முடிந்தது. "எந்தவொரு நல்ல பணியும் மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும் - ஏளனம், எதிர்ப்பு, இறுதியில் ஏற்றுக்கொள்ளப்படுதல். தனது காலத்தை விட்டு முற்போக்காகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் தவறாகவே புரிந்து கொள்ளப்படுவான். எனவே எதிர்ப்பும், அடக்கு முறையும் வரவேற்கத்தக்கவையே. ஆனால் நாம் உறுதியாகவும், தூய்மையாகவும் கடவுளிடம் அசைக்க முடியாத அளவற்ற நம்பிக்கையுடன் இருந்தால், இந்த இடையூறுகள் எல்லாம் மறைந்து விடும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார். அவருடைய வார்த்தைக்கு அர்த்தம் கொடுப்பது போல "இது கோவில்

அமைப்பதற்குப் பொருத்தமான இடமில்லை" எனவும், "கழிவுகளும் குப்பைகளும் கொட்டுகின்ற இடத்திலே கோவிலா?" எனவும், "வைரவர் ஆலயத்தை சுடலையிலே அல்லவா அமைக்க வேண்டும்" எனவும், ஏளனங்கள் எழுந்தன. இரண்டாவதாக சுவாமி விவேகானந்தர் கூறியதற்கு இணங்க எதிர்ப்புக்கள் எழும்பின. "அரச காணியிலே கோவிலா?" எனவும், "மதத்தின் பெயரால் அடாத்தாகக் காணி பிடிக்கலாமா?" எனவும், எத்தனை எத்தனை ஓநாய்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதன - இந்த ஆலயம் என்ற ஆடு அடைமழையில் நனைகின்றதே என்று அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் கற்பனையில் ஒரு கலாசார மண்டபத்தைக் கண்டு பிடித்து "கலாசார மண்டபத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியை அடாத்தாகப் பிடித்துக் கோவில் கட்டுகிறார்களே இது அடுக்குமா?" என அங்கலாய்த்தனர். குறிப்பிட்ட காணி வேறு எந்தவொரு பொதுத் தேவைக்குமெனக் குறித்தொதுக்கப்படவில்லை என்பதனை ஆதாரங்களுடன் நிருபித்தபோது, சமய சமரசச் சிந்தனையோடு அக்காணியிலே "சர்வமத சின்னம்" ஒன்றினை அமைக்கலாமே என்ற ஆலோசனை முன்வைத்தனர். அது நல்ல விடயம்தான். ஆனால் அதற்குப் பொருத்தமான இடம் மன்னார் நகரின் நுழைவாயிலாகவுள்ள (பழைய) பஸ் நிலையம்தான். அதனை அண்டி அமைக்கலாமெனச் சொன்னபோது பதில் வரவில்லை. ஆனால் சில காலத்தின்பின் அதே இடத்தில் அவர்களினது சொரூபம் ஒன்று நள்ளிரவில் அமைக்கப்பட்டது.

இந்த சமத்துவம், சமரசம் போன்றனவெல்லாம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ள தரப்பினரிடமிருந்து வெளிப்படவேண்டும். எண்ணிக்கையில் குறைந்த தரப்பினரிடம் நம்பிக்கையூட்டி நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டும். அதனை விடுத்து எண்ணிக்கை அதிகமான தரப்பினர் சமரசம் பேசுகின்றார்கள் என்றால் அதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்றுதான் அர்த்தம். இவர்களைவிட இன்னுமொரு சாரார் இன்னுமொரு பணியை மேற்கொண்டார்கள். "காட்டிக் கொடுப்பவர்கள் இல்லையென்றால் கதையில் சுவாரசியமிருக்காது" என்பது போல காட்டிக்கொடுக்கும் பணியை இவர்கள் கனகச்சிதமாக முன்னெடுத்தனர். எமது வரலாறு காலத்துக்குக் காலம் இத்தகைய காக்கை வன்னியர்களைச் சந்தித்து வந்துள்ளது. அதனால் "காக்கை வன்னியன்" என்ற சொல் எமது மொழியிலே தவிர்க்க முடியாத வகிபாகத்தைக் கொண்டு இன்றுவரை பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இதற்கு மேலாக 1990 களிலே புதிதாக "போட்டுக்கொடுத்தல்" என்ற புதிய கலைச்சொல் பிறந்து பயன்பாட்டிற்கு வந்தது. "அள்ளி வைத்தல்" என்ற சொல்லின் நவீனவடிவமாக இது பார்க்கப்பட்டது. இந்த ஆலய விடயத்திலும் கூட நம்மவர் சிலர் இந்தப் "போட்டுக்கொடுக்கும்" வேலையை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு செய்து வந்தனர். ஆலயத்திலே அக்கறை கொண்டவர்கள் போலத் தம்மைக் காட்டிக்கொண்டு, எம்மோடு நெருங்கி உறவாடி எம்திட்டங்களை, செயற்பாடுகளைத் தெரிந்து கொண்டு "மாலை நேரத் தேனீருடன்" உயர்மட்டத்திலே "போட்டுக்கொடுப்பதே" இவர்களது நாளாந்தப் பொழுதுபோக்காக ஆகியது. ஆனாலும் "உள்ளிருந்து கொல்லும் இவ்வியாதிகள்" இனங்காணப்பட்டு எமது உண்மையான திட்டங்களை மறைத்து போலியான திட்டங்களை நாம் வெளிப்படுத்த அவற்றினை அப்படியே காவிச்சென்று போட்டுக்கொடுத்து அவர்களிடம் மூக்குடைபட்டது சுவாரஸ்யமான சம்பவங்களாகும்.

இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு ஆலயம் படிப்படியாக வளர்ந்து வந்தது. ஆலயத்திற்கு வரும் அடியார்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க ஆலயச் சூழலில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் மக்களினது பேராதரவுடன் சிரமதான முறையிலே அருகிலிருந்த நீர்த்தேக்கத்தின் ஒரு பகுதி மண்போட்டு நிரவப்பட்டது. ஏற்கனவே இவ்வாலயத்தில் மக்கள் காட்டும் ஈடுபாடு கண்களை உறுத்திக் கொண்டிருக்க தொடர்ந்து கட்டுமானங்கள் விருத்தியடைவதனைப் பொறுக்க முடியாத நிலையிலே இவ்வாலயத்திற்கு எதிரான செயற்பாடுகள் சைவ சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளாக உருப்பெற்றன. இந்த ஆலயத்தில் மண்போட்டு நிரப்பும் செயற்பாடுகளை நிறுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பெரியவர்களின் பெரிய பதவிகளை மதிக்கும் நாங்கள் மண் போட்டு குளத்தை நிரப்பும் வேலையை உடனடியாக நிறுத்தினோம். கோயிலுக்கு நாளாந்தம் வரும் நூற்றுக்கணக்கான அடியார்களுக்கு "பூசை அபிஷேகப் பொருளாக பால் வேண்டாம், தயிர் வேண்டாம், தேன் வேண்டாம், நெய் வேண்டாம், சந்தனம் குங்குமம் வேண்டாம், வெற்றிலை, பாக்கு வேண்டாம். இதற்கு பதிலாக இரண்டு கைப்பிடி மண் கொண்டு வந்து இந்த குளத்தில் போடுங்கள். இதையே இந்த வைரவப் பெருமான் தற்போது விரும்புகிறார்." என வேண்டுகோள் விடுத்தோம். அர்ச்சனைப் பொருள்களாக வந்த இந்த மண்களால் இட்டு நிரப்பப்பட்டதே இந்த குளமாகும். உலகிலேயே மண்ணை அர்ச்சனைப் பொருளாக இறைவனுக்கு காணிக்கையாகக் கொடுத்த ஒரேயொரு கோயில் என்றால் அது மன்னார் ஞானவைரவர் தேவஸ்தானமேயாகும். கின்னஸ் புத்தகத்தில் இந்த சாதனை பதியப்பட வேண்டியதொன்றாகும்.

இந்தக் காலப்பகுதியிலே மன்னார் நகரிலே இரு கிறிஸ்தவப் பாடசாலைகள்தான் கல்விச் சாதனைகளிலே முன்னிலை வகித்தன. சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அடிப்படை பௌதீக வளப்பற்றாக்குறை, மாணவர் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை என பலவகையிலும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. அத்துடன் 36 பிள்ளைகளுடன் இன்றோ, நாளையோ மூடப்படும் என்ற நிலையில் இருந்தது. பெரும்பாலான சைவ சமயப் பிள்ளைகள் கல்வி நோக்கத்திற்காக கிறிஸ்தவப் பாடசாலைகளிலேதான் கல்வி கற்று வந்தனர். இந்த பலவீனத்தைப் புரிந்து கொண்ட சிலர், சைவப்பிள்ளைகள் திருநீறணிந்து, பொட்டிட்டு அப்பாடசாலைக்கு வந்து கொண்டிருந்த மதச்சுதந்திரத்தில் கைவைத்து தலையிட

முற்பட்டனர். திருநீறு, பொட்டு அணிந்து வரமுடியாது கேற்றில் வைத்து அழித்து விட்டுத்தான் உள்ளே வரவேண்டும் என்ற நடைமுறைகளைப் படிப்படியாக இறுக்கமாகக் கடைபிடிக்கத் தொடங்கினர். இதேபோன்று சைவசமய விழாக்களைக் கொண்டாடுவதிலும் இடையூறுகள் எழுந்தன. இவற்றினைச் சரிசெய்வதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையிலே, "ஏன் எமது சைவப்பாடசாலையை அப்பாடசாலைகளுக்கு இணையாக வளர்த்தெடுக்க முடியாது" என்ற சிந்தனை பலரிடையே எழுந்தது. விளைவு சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியை கட்டியெழுப்பும் பணியில் இவ்வாலயத்தின் செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர்களே முன்னின்று உழைத்தனர். பிள்ளைகளின் கல்வி விடயம் என்று வந்தபோது எமது சைவசமயப் பெற்றோர்கள் பலர் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். இது பிள்ளைகளின் கல்வியில் ஒரு "தற்கொலை" முயற்சியாகிவிடுமோ என்ற அச்சம் அவர்களுக்கிருந்தது. இந்த நிலையில் நானே முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்ற நினைப்பில் மகன் படித்துக் கொண்டிருந்த பாடசாலையிலிருந்து எடுத்து சித்திவிநாயகர் பாடசாலையில் சேர்த்தேன். டொக்டர் தன்னுடைய பிள்ளையொன்றின் வாழ்வை நாசமாக்கிப் போட்டார் என்று பழிச்சொல் சொன்னவர்தான் பலர். இந்தப் பழிச்சொல்லையும் ஏற்றுக்கொண்டு இவ்வசத்தைப் போக்கும் முயற்சியில் ஆலய நலன் விரும்பிகள் தீவிரமாக உழைத்தனர். முதற்கட்டமாக சித்திவிநாயகர் இந்துக் கல்லூரிக்கு மாணவர் தொகையை அதிகரிப்பதற்கான காரணங்களை வெளிப்படுத்தி பெற்றோரை இணங்க வைக்கும் பிரச்சார மேடையாக இவ்வாலயம் பயன்பட்டது. வெள்ளிக்கிழமைதோறும் மாலைப் பூசை வேளையிலே பஜனை முடிந்து பூசை ஆரம்பமாவதற்கு முன்னதாக இவ்வாலயம் தொடர்பான விபரங்கள், ஆலய அபிவிருத்திக்கு தேவையாகவுள்ள உதவிகள், ஆலயத்தில் இடம்பெறவுள்ள விசேட பூசைகள், குருபூசைகள், விழாக்கள், உபயங்கள் தொடர்பான விபரங்களை குறிப்பாக அன்றைய பூசையின் உபயகாரர் யார்? அடுத்த வெள்ளி உபயகாரர் யார்? என்பது போன்ற விபரங்களையெல்லாம் அறிவித்தல்களாக அடியார்களுக்குத் தெரிவிக்கும் வழக்கம் இருந்து வந்தது. இந்த வழமையான அறிவித்தல்களுடன் மேலதிகமாக "மாந்தையிலே ஒரு தேன் பொந்து மறைந்து கிடக்கிறதே" என்ற ஆறுமுகநாவலரின் பாணியில் எமது இந்துக் கல்லூரி பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றதே இதனைக் கட்டியெழுப்ப வேண்டியது சைவ சமயத்தவர்களாகிய நமது கடமை அல்லவா? மாணவ வளத்தை மேம்படுத்தினால்தான் ஏனைய வளங்களைப் பெறமுடியும். எனவே நம்பிக்கை வைத்து வீட்டுக்கு ஒரு பிள்ளையாவது இப்பாடசாலையிலே சேருங்கள் என்ற சாரப்பட இவ்வாலயத்திலே பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. பிரதி வெள்ளிதோறும் தவறாது இது நடைமுறைப்படுத்தப்பட்டது. முகத்தைச் சுழித்தவர்களும், முகத்தை முறிக்க முடியாமல் அரைகுறை மனதுடன் பிள்ளைகளை இணைத்தவர்களும் என இது பயனளிக்கத் தொடங்கியது. இதற்கு மேலதிகமாக தினமும் மாலைவேளையில் இவ்வாலய நலன் விரும்பிகள் மன்னாரிலுள்ள சைவசமயத்தவர்களினது வீடுகளுக்குச் சென்றும் இப்பிரசாரத்தை முன்னெடுத்தனர். இவ்வாறாக வீடு வீடாக மாணவ வளம் கேட்டு இரந்து கொண்டிருந்த ஒரு பாடசாலை இன்று அனுமதி முடிந்துவிட்டது, வேறு பாடசாலையைப் பாருங்களேன் என்று சொல்லுமளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு இந்த ஆலயமும் ஒரு முக்கிய காரணியாக இருந்திருக்கிறது என்ற செய்தி இவ்வாலய வரலாற்றில் மட்டுமல்ல இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பக்கங்களிலும் இடம் பெறவேண்டிய ஒன்றாகும்.

அதே நேரத்தில் இவ்வாலயச் செயற்பாடுகளினால் இந்துக் கல்லூரிச் சமூகத்தின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. பஜனை முதற்கொண்டு இவ்வாலய நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் இக்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து தமது ஈடுபாட்டினை வெளிப்படுத்தினர். ஆக இவ்வாலயத்தினால் இந்துக் கல்லூரியும், இந்துக் கல்லூரியினால் இவ்வாலயமும் மிகவும் பயனடைந்தன என்பதே உண்மையாகும்.

யாராண்டால் என்ன? நாம் வாழ்ந்தால் போதும் எனவும், கோவிலுக்குப் போனோமா கும்பிட்டோமா வந்தோமா என தமது எண்ணங்களைச் சுருக்கி, இன்னும் விரிவாகச் சொன்னால் சைவ சமூகம் சார்ந்து சிந்திக்க வைத்த பெருமை, அதற்குப் பிள்ளையார் சுழிபோட்ட பெருமை இவ்வாலயத்திற்கேயுரியது. பொதுவாக ஏனைய மதத்தலைவர்களுக்கு இருப்பது போன்ற சமூகக்கட்டமைப்புடன் கூடிய நிறுவனமயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம் எமது சமயத்திலே இல்லாததும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "எம்மதமும் சம்மதமே" என்பது போன்ற மதக்கட்டுப்பாடற்ற விண்ணிலும் விரிந்த நோக்கம் கொண்டதாக இருப்பதுமே எமது மிகப்பெரிய பலமாகவும், மிக மோசமான பலவீனமாகவும் இருந்து வருகின்றது. இந்தப்பலம் தந்த அதீத தன்னம்பிக்கையையும் பலவீனம் தந்த ஏனைய மதங்கள் ஊடுருவி மக்களின் வறுமையையும், அறியாமையையும் பயன்படுத்தி மதம்மாற்றம் செய்யக்கூடிய "அடையா நெடுங்கதவாகத்" திறந்திருந்த பாதையும் தான் எமது சைவ சமூகத்தை தொடர்ந்து பாதித்து வருகின்றது என்ற கசப்பான உண்மையை விரும்பியோ விரும்பாமலோ அனைவரும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இந்த நிலைமை மன்னார் மாவட்டத்திலே மிக மோசமாக நிலவிய ஒரு காலகட்டத்திலே அதற்கு அன்றைய போர்க்காலச் சூழ்நிலையும், தொடர்ந்து கொண்டிருந்த இடம்பெயர்வுகளும் துணை நின்ற நேரத்திலே இந்த நெருக்கடிகளிலிருந்து எமது சமூகத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற ஆழமான அவாவினால் ஏதாவது செய்ய வேண்டும் என்ற சிந்தனையை எம்மவரிடையே தூண்டியதில் இவ்வாலயம் மிகமுக்கிய பங்கினை வகித்தது. இவ்வாலயத்திற்கு எதிராக மற்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள், அத்தகைய சிந்தனை செயல்வடிவம் பெறுவதற்கான உந்து சக்தியாக விளங்கியது.

(தொடர்ச்சி அடுத்த சுடரில்........)

**முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி இராசமனோகரி புலேந்திரன் கடந்த மாதம் காலமானார். இவர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவர். கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு இந்து மகளிர் மன்றம், உலக சைவப் பேரவை (இலங்கைக் கிளை) ஆகியவற்றுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த அஞ்சலிக் கூட்டம், கடந்த மாதம் (ஜனவரி) 29ஆம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.**

# இந்துக் குடும்பத்தின் அன்னை

**கந்தையா நீலகண்டன்**
தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்



திருமதி இராசமனோகரி புலேந்திரன் அவர்களின் மறைவு இந்துக் குடும்பத்தின் பேரிழப்பு.

1990ஆம் ஆண்டு முதல் ஓர் அன்புச் சகோதரியாகப் பழகியவருக்கு – அதுவும் என்னிலும் இளையவர் ஒருவருக்கு - அஞ்சலி எழுத வேண்டிய கடமை வேதனைமிக்கதாக என் உள்ளத்தை வாட்ட, இதனை எழுதுகின்றேன்.

பம்பலப்பிட்டியில் அமைந்த இந்துக் கல்லூரி (கொழும்பு) அறிவாலயத்துடன் ஒரு பெற்றோர் என்ற முறையில் 1985ஆம் ஆண்டு முதல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, பாடசாலை அபிவிருத்தி நிதியம் மூலம் மட்டுமல்ல அக்கல்லூரியையும், இரத்மலானையில் அமைந்த கொழும்பு இந்துக் கல்லூரியை நிறுவிய இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளர் என்ற பொறுப்பையும் ஏற்ற காரணத்தினால் இரு கல்லூரிகளுடனும் சேர்ந்து இந்து மாணவ சமூகம், ஆசிரிய சமூகம் எல்லாம் இணைந்த ஓர் இந்துக் குடும்ப அங்கத்தவனாக வேண்டியது என் விதியாக இருந்தது.

1951ஆம் ஆண்டு பிள்ளையார் பாடசாலையாக ஆரம்பமாகிப் பெரும் கல்லூரியாக வளர்ந்துவிட்ட பம்பலப்பிட்டி கொழும்பு இந்துக் கல்லூரியை நாற்பது ஆண்டு பூர்த்தியாகும் போது தேசியக் கல்லூரியாக்க வேண்டும் என்பது எமது இந்துக் குடும்பத்தின் கனவாக இருந்தது. 1988ஆம் ஆண்டு முதல் இந்தக் கோரிக்கையை கல்லூரி நிறுவினரான இந்து வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், மேல் மாகாணத் தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம் முதலியன வலியுறுத்தி வந்ததுடன் அன்று நாடாளுமன்றத்தில் கொழும்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் ஆதரவு தந்தார். எனினும் இறுதியாக அந்தக் கனவை நனவாக்கிய பெருமைக்குரியவர் எமது மதிப்பிற்குரிய சகோதரி திருமதி இராசமனோகரி புலேந்திரன். பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தூதுக் குழுவுடன் கல்வி இராஜாங்க அமைச்சரான அவரைப் பலமுறை கண்டு எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றினோம். அதுமட்டுமல்லாமல் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் வளர்த்துவிட்ட கல்லூரியின் முன்னேற்றத்தில் அரசபங்கு போதாது, அதுவும் தேவை என்பதனையும் அவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம்.

அன்று கல்வி அமைச்சராக இருந்த பெரும்பான்மை இனத்தவர் எமது கல்லூரியை வெறும் தமிழ் கல்லூரியாகக் கழுகுக் கண் பார்வையுடன் ஒதுக்கி வைத்த வேளையில் இராஜாங்க அமைச்சராக இருந்த எமது சகோதரி அநியாயத்தைக் கண்டு போராளியாகவே கொதித்து எழுந்தார். நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா வரவேண்டும் எனக் கல்லூரிச் சமூகம் அழைப்பு விடுத்த போது "பாதுகாப்பு?" எனக் கல்வியமைச்சர் ஒரு கேள்விக்குறி போட்டார். எமது சகோதரி நேரே ஜனாதிபதியுடன் போராடி எமது கல்லூரியைத் தேசியப் பாடசாலையாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தது மட்டுமல்லாமல் 11-9-1991 அன்று ஜனாதிபதியே நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு வந்து அந்தப் பிரகடனத்தைச் செய்யவும் ஒழுங்கு செய்தார்.

அந்த விழாவில் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் உரையாற்றும் பொறுப்பு எனக்குக் கிடைத்தது. ஜனாதிபதியைப் பார்த்து நாங்கள் ஒரு குடும்பமாக இக்கல்லூரியை வளர்க்கும் வரலாற்றைக் குறிப்பிட்டதுடன் கல்வி இராஜாங்க அமைச்சர் தன் இரு புத்திரிகளுக்கு மட்டுமல்ல இக்கல்லூரியின் மாணவர்களையும் அவர் தன் புத்திரர்களாக ஏற்று அவர்களின் அன்னையாகவும் விளங்குகிறார் எனவும் குறிப்பிட்டிருந்தேன்.

கல்லூரிச் சமூகத்தின் சார்பில் ஜனாதிபதியிடம் ஒரு வேண்டுகோளையும் விடுத்தேன். "எமது கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று புதிதாக வேண்டும்" என்பதே அந்த வேண்டுகோள். ஜனாதிபதி தன் உரையில் "உங்கள் அன்னையே உரிய நடவடிக்கை எடுப்பார்" என்றார். மறுநாளே ஜனாதிபதியைச் சந்தித்து அந்த

மூன்று மாடிக் கட்டிடம் கட்ட உத்தரவு பெற்று அதனை நிறைவேற்றித் தந்த பெருமை அருமைச் சகோதரி இராசமனோகரிக்கே உரியது. அதுதான் ஜனாதிபதி கட்டிடத் தொகுதியாக இன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் மிளிர்கின்றது.

நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு கல்வி அமைச்சர் வரவில்லை. இராஜாங்கக் கல்வி அமைச்சர் திருமதி புலேந்திரனே அந்த இடத்தையும் நிரப்பி, சிறப்பு விருந்தினராக வந்ததையும் குறிப்பிடற்பாலது. இந்துக் கல்லூரி மாணவர்களின் பாசத்தினால் கவரப்பட்ட அவர், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், புலேந்திரன் கட்டிடத்தொகுதியையும் அமைத்துத் தந்த பெருமையையும் குறிப்பிட வேண்டும்.

1990 நவம்பர் 21ஆம் திகதி அத்திவாரம் இடப்பட்டு, கட்டப்பட்ட இந்த மண்டபம் 1991 ஜுன் 14ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டது.

இவ்வாறாக சகோதரியின் நாமம் இக் கல்லூரியின் கற்களில் மட்டுமல்ல கல்லூரிக் குடும்பத்தின் அனைவரின் உள்ளங்களிலும் பதிந்து விட்டன. கல்வி இராஜாங்க அமைச்சரின் துணிவும் ஆற்றலும் ஆளுமையும் எமக்குத் தந்த துணிவால், அவருடன் தொடர்ந்து பணியாற்றுவதில் மனநிறைவு கண்டோம்.

1990 முதல் இரத்மலானையில் இருக்கும் கொழும்பு இந்துக் கல்லூரியை மீண்டும் எமது மாணவ சமுதாயத்திற்குப் பெறப் பெரும் போராட்டத்தை ஆரம்பித்தோம். இந்து வித்தியா விருத்திச் சங்கமும், அகில இலங்கை இந்து மாமன்றமும் விடுத்த கோரிக்கைக்கு திருமதி புலேந்திரன் தந்த ஆதரவு காத்திரமானது. கொழும்பு மாநகர முதல்வராகவிருந்த திரு. க. கணேசலிங்கமும் இந்த ஆதரவு அலையில் இழுக்கப்பட்டார். அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் ஆதரவு தந்தார். எங்களின் போராட்டத்திற்கு கலாநிதி க. வேலாயுதபிள்ளை வழிகாட்டியாக நின்றார்.

1992 மார்ச் 15ஆம் திகதி அதிகாலை திரு. கணேசலிங்கம் என்னைப் படுக்கையிலிருந்து தன் தொலைபேசி அழைப்பு மூலம் எழுப்பி உடனடியாக இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரிக்கு வருமாறும் ஜனாதிபதி பிரேமதாசாவைக் கூட்டிக் கொண்டு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன் வருவதையும் தெரியப்படுத்தினார். கலாநிதி வேலாயுதபிள்ளையை என் காரில் ஏற்றிக் கொண்டு அன்று தற்காலிக அதிபராக இருந்த திரு. ந. மன்மதராஜனையும் தொலைபேசியில் அழைத்து உடனடியாகக் கல்லூரிக்கு வருமாறு சொல்லிவிட்டு விரைந்து சென்றோம். கல்வி இராஜாங்க அமைச்சருடனும் அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகளுடனும் ஜனாதிபதி அங்கு வந்து சேர்ந்தார். இக்கட்டிடங்கள் ஒரு பல்கலைக்கழகத்திற்கே பொருத்தமானவை என ஜனாதிபதி . இரத்மலானை இந்துக் கல்லூரியின் கட்டிடங்களைப் பார்த்து மெச்சிக் கூறியதும் எங்களுக்கு எங்களையறியாத ஒரு மனப்பயம். எனினும் திருமதி புலேந்திரனும் திரு. கணேசலிங்கமும் எங்களின் நிலைமையை ஜனாதிபதிக்கு விளங்கப்படுத்த, உடனடியாக எமது கல்லூரியை எமது மாணவர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். அடுத்த மே மாதம் முதல் கல்லூரி இயங்க ஆரம்பித்தது. உடனடியாக விநாயகர் ஆலயம் கட்டத் திட்டமிடப்பட்டது. 15.03.1992 அன்று அதிகாலையில் ஜனாதிபதி புறப்பட்டவுடன் அத்திட்டத்திற்கான விதந்துரைப்பைச் செய்தவர் திரு. கணேசலிங்கம். திருமதி புலேந்திரனும் உற்சாகப் படுத்தி ஆதரவு தந்ததை மறக்க முடியாது.

1988 மார்ச் மாதத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் இலவச மாணவர் விடுதியை நிறுவி இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் பெற்றோர்களை இழந்த பல மாணவ மாணவிகளுக்கு வாழ்வு தந்தது. அதற்கு பல வழிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் தந்தவர் சகோதரி இராசமனோகரி. அவரை நாங்கள் அழைத்த வேளை எல்லாம் தவறாது வந்து எமது விடுதி மாணவச் செல்வங்களுடன் அன்பாகப் பழகி நின்ற ஓர் அன்னை என்பதனையும் நாங்கள் மறக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக அந்த அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சராக இருந்தாலும் தான் “ஒரு தமிழ் மகள்” என்பதனை அவர் மறக்கவில்லை. வாழ்க்கையில் கூட அவர் பல எதிர் நீச்சல்களைப் போட்டிருக்கிறார். அன்புக் கணவரைத் துரதிர்ஷ்டவசமாக இழந்தவர். தன் புத்திரிகளுக்கு தந்தையாகவே அவர்களை வளர்த்தெடுத்த சிறப்பை நாம் அறிவோம்.

“வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது”

என்ற குறளின் பொருளை உணர்ந்து வாழ்க்கை என்பது விதியே என அதை ஏற்று மனம் தளராது வாழ்ந்தவர். அவர் எவ்வளவு மென்மையான உள்ளம் படைத்தவர் என்பதனையும் சிறியேன் அறிவேன். நான் யாழ் இந்து மாணவனாக இருந்தபோது இவரின் தந்தையார் திரு. ரி. எஸ். துரைராசா யாழ் நகர முதல்வர். இவரின் சகோதரர் ஸ்கந்தகுமார்தான் யாழ் இந்துக் கல்லூரி முதன்மை மாணவர் தலைவர். புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்து உடன் பிறப்புகளுடன் ஒன்றி அன்புடன் பழகியவர். அவரின் சகோதரன் சாந்தகுமார் இறந்தபோது துடிதுடித்துவிட்டார். நடுநிசியில் என்னைத் தொலைபேசியில் அழைத்து, “எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை நீங்கள் தான் எல்லாவற்றையும் செய்து தர வேண்டும்” எனக் கதறினார். இன்றும் அது பசுமையாக என் மனத்திரையில் இருக்கிறது. நண்பர் எஸ்.ரி.கனகலிங்கத்துடன் அவரின் சகோதரர் சாந்தகுமாரின் இறுதிச் சடங்கினை ஒழுங்கு செய்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தபடியால் சகோதரி இராசமனோகரியின் சகோதர பாசத்தை எடைபோடும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது.

அரசியலைத் துறந்தபின் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு இந்து மகளிர் மன்றம், உலக சைவப் பேரவை போன்ற நிறுவனங்களில் தன் பங்கைத் தந்து, அவர் தன் சமூகத்துடன் உரிமையுடன் சேர்ந்து சேவை செய்வதில் மகிழ்ச்சிகண்டார். பேரப் பிள்ளைகளையும் கண்ட நிறைவான வாழ்வுடன் இந்த உலகவாழ்வை நிறைவு செய்து கொண்டுள்ளார்.

அமரரின் குடும்பத்தின் இழப்பு எங்களின் பேரிழப்பாகும் என்பதனையும் தெரிவித்து அவர்களின் துயரத்தில் நாங்களும் பங்கு கொண்டு அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.



# நாவலர் விழா நிகழ்வுகள்

## கொழும்பில்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, இந்து வித்தியா விருத்திச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த நாவலர் விழா கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதியன்று மாலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது வடமாகாண முதலமைச்சர் சத்திய வித்தகர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள்.

வைபவம் ஆரம்பமாவதற்கு முன்னர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஏற்பாட்டில் பம்பலப்பிட்டி கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து விழா மண்டபம் வரை நாவலர் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

மங்கள விளக்கேற்றல் இறை வழிபாடு என்பனவற்றைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை உப தலைவர் திரு. க. ஜெகதீசன் வரவேற்புரை நிகழ்த்தினார். இதன்பின் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவி செல்வி சந்திரிக்கா வடிவேல், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி நொஷிக்கா கிருவனந்தராஜா ஆகியோரின் பேச்சுகளும், " நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்" என்ற தலைப்பில் கவியரங்கும் இடம்பெற்றன.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கின்போது திரு. ந. காண்டீபன் (சட்டத்தரணி), திரு. ச. முகுந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம்); வைத்தியகலாநிதி கு. மதுரகன், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர், ஜயவர்த்தன பல்கலைக்கழகம்) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

வித்துவான் வசந்தா வைத்தியநாதன் "நாவலர் காட்டிய வழியில்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

இந்த வைபவத்தின்போது இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளியின்" நாவலர் நினைவுச் சிறப்பிதழும், வரலாற்று ஆய்வாளர் திரு. என். கே. எஸ். திருச்செல்வம் எழுதிய "கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும்" (அகஸ்தியர் முதல் யோகர் சுவாமிகள் வரை), திரு. பி. சோமபாலன் எழுதிய "Hinduism what it is and what it is not" ஆகிய நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் நூல்களுக்கான வெளியீட்டுரையையும், கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா நூல்களுக்கான விமர்சன உரையையும் வழங்கினார்கள்.

நூலாசிரியர்களான திரு. என். கே. எஸ். திருச்செல்வம், திரு. பி. சோமபாலன் ஆகியோரின் பதிலுரைகளைத் தொடர்ந்து, இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் நன்றியுரையாற்றினார்.

## யாழ் நகரில்

அகில இலங்கை இந்து மாமன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்திருந்த நாவலர் விழா கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதியன்று காலை யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள இந்து மாமன்ற யாழ் பணிமனையில் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை செயலாளர் திரு. சி. தில்லைநடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இ. குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்கினார். காலை நிகழ்ச்சிகளாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் திரு. ச. லலீசன், யாழ் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் ஆகியோரின் சிறப்புரைகளும், வைத்தியகலாநிதி ப. நந்தகுமார் ஒழுங்கமைத்து வழங்கிய ஆய்வரங்கும் இடம்பெற்றன.

"நாவலர் தருமத்தின் ஆணி" என்ற பொருளில் மாலை நிகழ்ச்சிகளாக கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் கவியரங்கு இடம்பெற்றது. திரு. கு. பாலசண்முகம், திரு. இ. சர்வேஸ்வரா, திரு. நாக. சிவசிதம்பரம், திரு. த. ஜெயசீலன் ஆகியோர் கவியரங்கில் பங்குகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா சிறப்புரையாற்றினார்.

இந்து மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வின் சிறப்பு அம்சமாக செல்வி. கஜப்பிரியா புவிராஜசிங்கம், செல்வி மஞ்சுளா புவிராஜசிங்கம் ஆகியோர் இணைந்து வழங்கிய பண்ணிசை விருந்தும் இடம்பெற்றது.



# மட்டக்களப்பில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவும் சிவதொண்டர் அணியினருக்கான பயிற்சிக் கருத்தரங்கும்


**சைவவித்தகர் ஜோகராஜா கஜேந்திரா**
சேனைக்குடியிருப்பு, கல்முனை.


## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா

அகில இலங்கை இந்துமாமன்றம், இந்துசமய கலாசார திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் நடாத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவானது ஜயவருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் (06.12.2014) சனிக்கிழமை மட்டக்களப்பு நாவற்குடா இந்துக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் மாண்புமிகு சீ.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வைபவம் மங்கள விளக்கேற்றலின் பின்னர் சைப்புலவர் திருமதி.ஞானசூரியம் அவர்களின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நந்திக் கொடியை ஏற்றி வைத்து ஆசியுரையையும் வழங்கியிருந்தார். இவர் தமது ஆசியுரையின் போது நாவலர் பெருமானுக்கு மட்டக்களப்பில் விழா எடுப்பது மகிழ்ச்சியாக உள்ளமையையும் நாவலர் பெருமானின் சேவைத்தொண்டுகள் பற்றியும் தமது ஆசியுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந் நிகழ்வில் தலைமை வகித்த மாண்புமிகு சீ.யோகேஸ்வரன் தமது உரையில் நாவலரது பணிகளில் குறிப்பாக வேளாண்மை சங்கத்தினை நிறுவி அதன் மூலம் செய்யப்பட்ட சேவைகள், கஞ்சித் தொட்டி தர்மம் மூலம் பட்டினிப் பிணியினை போக்கியமை போன்ற நாவலர் பற்றிய பல்வேறு விடயங்களை முன்வைத்திருந்ததுடன் மட்டக்களப்பில் இந்து மாமன்ற கிளைக்காரியாலயத்தின் அவசியத்தையும் தமது உரையின் வாயிலாக குறிப்பிட்டிருந்தார்.

அதனையடுத்து அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றிருந்தது. இவர் தனது சிறப்புரையின் போது மட்டக்களப்பு மண்ணின் பாரம்பரிய விழுமியங்களின் மேன்மையையும் அவற்றைப் பாதுகாத்து வரும் மட்டக்களப்பு மக்களின் செயற்பாடுகளையும் பாராட்டியதுடன் அவற்றை மேலும் வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

அதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களிற்கு நினைவுப் பரிசிலினை வழங்கி கௌரவித்திருந்தது.

பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் திரு.லலீசன் அவர்கள் தனது சிறப்புரையின் போது நாவலர் பெருமான் வாழ்ந்த காலப்பகுதியையும் இக்காலப்பகுதியில் ஏற்பட்ட சமய சமூக மறுமலர்ச்சியையும் தெளிவாக எடுத்துரைத்திருந்தார்.

அடுத்ததாக சிறப்புரை நிகழ்த்திய கிழக்குப் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திரு.சு.முகுந்தன் அவர்கள் நாவலர் பெருமானை ஒரு புதிய கண்ணோட்டத்தின் வாயிலாக தமது உரையினூடாக நோக்கியிருந்தார். நேற்று இன்று நாளை எனும் மூன்று கட்டங்களாக எடுத்துக்காட்டிய நாவலருடைய பணிகளை அங்கு வருகை தந்திருந்த இளையோர் முதல் பெரியோர் வரை விளங்கிக் கொள்ளும் வகையில் சிறப்பானதாக அமைந்திருந்தது.

அடுத்து இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் (கொழும்பு வலயம்) திருமதி.ஹேமா சண்முகசர்மா அவர்களின் நாவலர் பற்றிய வாழ்த்துரை அமைந்திருந்தது.

மேலும் வாழ்த்துரையை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரீக துறை தலைவர் திருமதி. சாந்தி கேசவன் அவர்கள் நாவலருடைய சீரிய பணிகளை தமது உரையின் வாயிலாக சிறப்பாக கூறியிருந்தார்.வந்தாறுமூலை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவன் செல்வன் பாலசுப்பிரமணியம் டனுக்சன் அவர்கள் 'சேவையால் உயர்ந்த சிகரம் நல்லை நகர் நாவலர் பெருமான்' எனும் தலைப்பில் சிறப்பாக தமது பேச்சை நிகழ்த்தி இருந்தார்.

அதனையடுத்து அகில இலங்கை இந்து மாமன்ற தலைவரினால் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு கௌரவம் செய்யப்பட்டது.

அதனையடுத்து வந்தாறுமூலை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கிய கிராமிய நடனம் இடம்பெற்றது. பின்னர் நிறைவுரையினை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கலாநிதி மு.கதிர்காமநாதன் அவர்கள் ஆற்றியிருந்தார்.

இறுதியாக இந்நிகழ்வு நடைபெறுவதற்கு அனைத்து வகையிலும் உதவிபுரிந்தவருக்கும் நன்றி தெரிவித்திருந்தார். மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளர் எஸ்.மதிசுதன் அவர்கள் நன்றியுரை தெரிக்கப்பட்டதும் தேவார பாராயணத்துடன் நிகழ்வானது இனிதே நிறைவு பெற்றது.

## சிவதொண்டர் அணிக்கான பயிற்சிக் கருத்தரங்கு

அகில இலங்கை இந்து மாமன்ற சிவதொண்டர் அணியினருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஜய வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள் (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நாவற்குடா இந்துக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றிருந்தது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக் கொடி ஏற்றப்பட்டு தேவார பாராயணத்துடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிவதொண்டர்கள் நானூறுக்கும் அதிகமானோர் பங்கு பற்றுதலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தது. இந்நிகழ்வுக்கு இந்து மாமன்ற உபதலைவரான விடைக் கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களின் தலைமையில் கருத்தரங்கு ஆரம்பமாகியிருந்தது.

இக்கருத்தரங்கானது சற்று வித்தியாசமாக மாணவர் களை குழுக்களாக பிரித்து சைவசமய தொன்மை, சிவதொண்டர் அணியின் தற்கால அவசியமும் முக்கியத்து வமும், சிவதொண்டர் அணியின் எதிர்காலச் செயற்பாடுகள் போன்ற பலவிடயங்களை வெளிக்கொணரும் நோக்குடன் மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு செயற்பாட்டில் ஈடுபடுத்தி அதனை மேடையில் தெளிவுபடுத்தி கலந்துரையாடப்பட்டது. இதனை கொழும்பு வலய இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஹேமா சண்முகசர்மா அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். அவ்வப்போது திறமையான மாணவர்கள் அவையோர் மத்தியில் பாராட்டும் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சிறப்புரையை கிழக்குப் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திரு.சு.முகுந்தன் ஆற்றியிருந்தார். அதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பாலகைலாசநாதசர்மா அவர்கள் மாணவர்களுக்கு இந்துசமயம் தொடர்பான ஐயங்களைத் தீர்த்து வைத்தார். குறிப்பாக ஆகமம் சார்ந்த மற்றும் சாராத வழிபாட்டு முறையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் அவை தொடர்பாக தெளிவான விளக்கத்துடன் தமது உரையினை ஆற்றியிருந்தார்.

மற்றும் சைவவித்தகர் யோ.கஜேந்திரா, சைவவித்தகர் வெ.சசிகரன் ஆகியோர் நிகழ்வில் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில், கலந்து கொண்ட மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்ற சிவதொண்டர் சால்வை அணிவித்தும், மாமன்ற வெளியீடுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இறுதியாக அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கலாநிதி மு.கதிர்காமநாதன் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது. அதன்போது இந்நிகழ்வு சிறப்புற அமைவதற்கு மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பேரவை, இந்துக் கலாசார திணைக்களம், அத்துடன் சிறப்புரை ஆற்றிய பெரியோர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் தனது நன்றியினை தெரிவித்து நிகழ்வானது இனிதே நிறைவுக்கு வந்தது.

## ஆலையடிவேம்பில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா

அகில இலங்கை இந்து மாமன்றம் ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்துடன் இணைந்து நடாத்திய ஆறுமுகநாவலர் விழாவானது ஜயவருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் (06.12.2014) சனிக்கிழமை மாலையில் நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தில் இறை வழிபாட்டுடன் ஆரம்பமாகி அவ்வளாகத்தில் நிறுவப்பட்ட நாவலர் சிலையினை நல்லை ஆதீன முதல்வர் திரைநீக்கம் செய்து வழிபாடுசெய்திருந்தார்.

இதன் பின்னர் நந்திக் கொடி ஏந்திவர நல்லை நகர் நாவலர் பெருமானின் சிலையுடன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர், பிரதிநிதிகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் இணைந்து எழுச்சி ஊர்வலமாக ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தை வந்தடைந்தனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய வைபவத்தில் தேவார பாராயணத்தை அறநெறிப்பாடசாலை ஆசிரியை நிகழ்த்தியதை தொடர்ந்து நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் நந்திக் கொடியை ஏற்றி வைத்து பின்னர் ஆசியுரையையும் வழங்கியிருந்தார். இதன்போது நாவலர் பெருமானுக்கு சிலை எடுத்தும் எழுச்சி ஊர்வலம் நடாத்தி நாவலர் பெருமானுக்கு நன்றியுடன் இடம்பெறும் இவ்விழாவிற்கு அவரது அருளாசியை வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வுக்கு தலைமை வகித்த ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற தலைவர் திரு. சந்திரசேகரம் தனது உரையினை நிகழ்த்தினார்.

அடுத்து வாழ்த்துரையினை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் ஆற்றியிருந்தார்.

இதன் பின்னர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. தொடர்ந்து சிறப்பாக சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அடுத்து இந்து மாமன்ற சமூகநலன் திட்டப் பணி நடைபெற்றது. வறிய மக்களுக்கு வாழ்வாதார உபகரணங்களை அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா மற்றும் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் ஆகியோர் இணைந்து வழங்கியிருந்தனர்.

மேலும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் திரு. லலீசன் அவர்கள் சிறப்புரை ஆற்றியிருந்தார்.

அடுத்து இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் (கொழும்பு வலயம்) திருமதி.ஹேமா சண்முகசர்மா அவர்களின் நாவலர் பற்றிய வாழ்த்துரை அமைந்திருந்தது.

இறுதியாக இந்நிகழ்வுக்கு ஒத்துழைத்த ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற தலைவர், செயலாளர் மற்றும் முக்கிய உறுப்பினர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் செயலாளர் ஆகியோர் கௌரவம் செய்தனர்.

இந்நிகழ்வின் நிறைவாக ஆலையடிவேம்பு பிரதேச பிரதம செயலாளர் எஸ்.மணிவண்ணன் நன்றியுரை வழங்கியதைத் தொடர்ந்து தேவார பாராயணத்துடன் நிகழ்வானது இனிதே நிறைவு பெற்றது.

# முருகனுக்கு உகந்த தைப்பூச நன்னாள்



நட்சத்திர மண்டலத்தில் எட்டாவது நட்சத்திரம் பூசம். தை மாதத்தில் பூச நட்சத்திரம் வருகின்ற புண்ணிய நாளே தைப்பூச விழாவாக இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் முருகப்பெருமானுடைய விசேட தினமாகக் கொள்ளப்படுகின்றது. தைப்பூசம் பெரும்பாலும் நிறைமதி நாளாகவே அமைந்திடும். இத்தினத்தில் குழந்தைகளுக்கு காது குத்துதல், கல்வி தொடங்குதல் போன்றவற்றைச் செய்து மகிழ்வார்கள். மேலும், முருக பக்தர்கள் காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்து வருதல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். இந்த நன்னாளில் அறுபடை வீடுகள் உள்ளிட்ட முருகன் ஆலயங்களிலும், சிவன் கோயில்களிலும் திருவிழாக்கள் நடைபெறும்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை ஆகவே பலவிதமான இன்னல்களைத் தொடர்ந்து அளித்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி கருணைக் கடவுளான சிவபெருமானிடம் தேவர்கள் யாவரும் முறையிட்டனர்.

தேவர்களின் முறையீட்டை ஏற்றுக்கொண்டு தேவர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்த சக்திமிக்க ஒரு தலைவனை உருவாக்கத் திருவுளம் கொண்டார் எம்பெருமான். இங்ஙனமாய் தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தப்பெருமான்.

சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து வந்த ஆறுதீப்பொறிகள் ஆறு அழகான குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்களால் அக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு பார்வதி தேவியால் ஆறுமுகம் கொண்ட ஒருவராய் ஆறுமுகன் தோன்றினான்.

பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு அன்னை பார்வதி ஞானவேல் வழங்கி ஆசீர்வதித்தது தைப்பூச நன்னாளில் தான். இதனாலேயே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் ஆலயங்களைக்காட்டிலும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்தவேலை ஆயுதமாகக் கொண்டே திருச்செந்தூர் எனப்படும் திரச்சீரலைவாயில் அசுரர்களை வதம் செய்து தேவர்களை நிம்மதி அடையச் செய்தார் முருகன். முருகனின் வேலினை வழிபட்டால் தீய சக்திகள் நம்மை அண்டாது.

தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள் மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தைத் தொடங்குகின்றனர். கந்தசஷ்டி கவசம் சண்முக கவசம் திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்வார்கள். தைப்பூசத்தன்று முருகன் ஆலயம் சென்று சிறப்பு வழிபாடுகள் செய்து விரதத்தை முடிப்பார்கள்.

பழனியின் மூலவர் அருள்மிகு தண்டாயுதபாணி சிலையை பதினெண் சித்தர்களில் ஒருவரான போகர் நவபாஷாணத்தால் செய்து பிரதிஷ்டை செய்துள்ளார். இக்கோயிலில் தைப்பூசம் பத்து நாட்கள் நடைபெறுகின்ற ஒரு முக்கிய விழா. ஏழாம் நாள் விழாவில் தேரோட்டம் நடைபெறுகின்றது. முருகன் தன் இரு சக்தியரான வள்ளி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் வீதிகளில் தேரில் பவனி வருவார். விழாவின் நிறைவாக பத்தாம் நாள் தெப்போற்சவம் நடைபெறுகின்றது.

தைப்பூசத்தன்று பாலதண்டாயுதபாணியைக் கண்டு வழிபட பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையாக பழனிக்கு வருகிறார்கள். பல வேண்டுதல்களை முன்வைத்து முருகனுக்கு நேர்ந்து கொண்டவர்கள் சர்க்கரைக்காவடி தீர்த்தக்காவடி பறவைக்காவடி பால்காவடி மச்சக்காவடி மயில்காவடி முதலானவற்றை எடுத்து தமது நேர்த்திக்கடனைப் பூர்த்தி செய்கின்றார்கள்.

இலங்கையில் உள்ள எல்லா முருகன் ஆலயங்களிலும் தைப்பூசம் முருகனுக்குரிய சிறப்பான விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அச்சமயத்தில் பக்தர்கள் பால்குடம் எடுத்தும் காவடிகள் எடுத்தும் நேர்த்திகளை நிறைவேற்றுவார்கள்.

வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு தைமாத வெள்ளியன்று புநர்பூச நட்சத்திரத்தன்றுதான் ஜோதியானார். இதனைக் குறிக்கும் வகையில் அவர் ஜோதியான வடலூருக்கு அருகிலுள்ள மேட்டுக்குப்பத்தில் தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.

- ஜெயா நாகேந்திரன்.

## சண்டேசுவரர் வழிபாடு

சிவதரிசனப் பலன் சண்டேஸ்வரரைத் தரிசித்தால்தான் பூர்த்தியாகும். எப்போதும் தியானத்தில் இருக்கும் அவரை வழிபடும் போது மூன்று முறை கையால் மெதுவாகத் தட்டி வழிபடவேண்டும். சண்டேசுவரரை முழுவலமாக சுற்றக்கூடாது. மூன்று முறை கைதட்டுவது ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனும் முக்குற்றங்களால் வரும் தீங்கு விலகும். அதாவது தன்னால் வரும் துன்பம், சூழலால் வரும் துன்பம், இயற்கையால் வரும் துன்பம் எனும் முத்துன்பங்கள் விலகும் பொருட்டு கைதட்டப்படும். சண்டேஸ்வரர் சந்நிதியில் வேட்டி நூலையோ, சேலை நூலையோ எடுத்துப் போடக்கூடாது.

# அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா மலருக்கு ஆய்வுக்கட்டுரைகள்

இந்த நாட்டின் இந்து மக்களின் வரலாற்றில் ஓர் அத்தியாயமாகக் கடந்த ஆறு தசாப்தங்களாக தடம் பதித்து விட்ட எமது மாமன்றத்திற்கு இந்த ஆண்டு வைரவிழா. வைர விழாவினை பெரும் கொண்டாட்டமாக அனுட்டிக்காது ஆக்க பூர்வமான செயற்திட்டங்கள் மூலம் இந்நாட்டு இந்து மக்களுக்கு நன்மைபயக்கும் பணிகளை இந்த ஆண்டில் விசேடமாக எடுத்துச் செல்ல விரும்புகிறோம். அத்திட்டங்களில் ஒன்றாக யாழ் மண்ணில் 2015 மார்ச் முதல்வாரத்தில் வைரவிழா மாநாட்டை நடாத்தி இந்து ஒளி வைரவிழா மலரை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். பத்து ஆண்டுகளுக்குமுன் பொன்விழாவையொட்டி யாழ் மண்ணில் மாநாடு நடத்தி அரிய பல ஆய்வுக் கட்டுரைகளை அறிவுப் பொக்கிஷங்களாகப் பெற்றது போன்று, காத்திரமான வெளியீடாக வைரவிழாமலர் வெளிவர உங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**கருப் பொருள் :-**

**"ஈழத்து இந்து மதத்தின் வரலாறு, வளர்ச்சிப் போக்கு"**

இக்கருப்பொருளின் அடிப்படையில் ஆய்வுக் கட்டுரைகள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அமைய வேண்டும்.

இக் கருப் பொருளுக்கு அமைவாக பின்வரும் அம்சங்களை கருத்திற் கொண்டு தங்களின் கட்டுரைகளை அமைக்கலாம்.

1. வரலாறு ரீதியான ஆய்வு,
2. இந்து தத்துவவியல் தொடர்பாக ஈழத்து அறிஞர்களின் பங்களிப்பு,
3. ஈழத்து வழிபாட்டு மரபு,
   (பிராந்திய மரபுகள் உள்ளடங்களாக,)
4. ஈழத்துச் சித்தர் பாரம்பரியம்,
5. ஈழத்து திருக்கோயில்களும் மரபுகளும்,
6. ஈழத்து மக்களின் வாழ்வில் சமயச் சடங்குகள்,
7. ஈழத்தமிழர் மரபில் சமயமும் இலக்கியமும்,
8. ஈழத்துச் சமய மரபில் கல்வி,
9. ஈழநாட்டில் இந்து சமய நிறுவனங்கள்,
10. ஈழநாட்டில் இந்து சமய வெளியீடுகள்,
11. ஈழத்து கலைப் பாரம்பரியத்தில் இந்து சமயம்,
12. ஈழத்தில் இந்து ஆய்வுத்துறை,
13. ஈழநாட்டில் புராணபடலமும் திருமுறை மரபும்,
14. ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சியில் மடங்கள்,
15. ஈழநாட்டில் இந்து மத வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பாக,
16. இலங்கையின் வடமாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் மற்றும் பிராந்தியங்களில் பின்பற்றப்படும் சமய ஆசாரமுறைகள், அவற்றின் அர்த்தங்கள், அவை அந்தப் பிராந்தியங்களில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள்,
17. கடந்த ஆறு தசாப்தங்களில் (குறிப்பாக இறுதி மூன்று தசாப்தங்களில்) இந்து மக்களிடையே அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வந்த பணிகள்; அவை ஏற்படுத்திய தாக்கங்கள்; மாமன்றம் எதிர்காலத்தில் நிறைவேற்றவேண்டிய பணிகள்,
18. சமய நிறுவனங்கள் இந்து மக்களிடையே செய்ய வேண்டிய தொண்டுகள்; இளம் தலைமுறையினரின் இன்றைய தேவைகள்; எதிர்பார்ப்புக்களைக் கருத்திற் கொண்டு செய்யப்பட வேண்டிய தொண்டுகள்,
19. நவீன விஞ்ஞான நுட்பங்களுக்கு குறிப்பாகத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு எதிர்கொண்டு எமது மதம் மூலம் மக்களின் வாழ்வை பண்படுத்தக் கூடிய முறையில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்த முயற்சிகள்,
20. திருமுறைகள் மற்றும் சமய இலக்கியங்களை இளம்தலைமுறையினர் அறிந்து உணர்ந்து கொள்ளும் வகையிலான எடுத்துரைப்புக்கள்.

ஏற்கனவே எங்கும் பிரசுரிக்கப்படாததாக ஆய்வுகட்டுரை இருக்கவேண்டும். ஆய்வுக் கட்டுரையினை மின்னச்சில் பொறித்து மின்னஞ்சலூடக 15.02.2015க்கு முன் அனுப்ப வேண்டும். அத்துடன் ஒரு பதிப்புப் பிரதியினைத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது மாமன்ற யாழ் பணிமனையில் அமைந்திருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் ஒப்படைக்கலாம். கட்டுரையாளர் தனது முழுப்பெயர், பதவி, கடமையாற்றும் நிறுவனம் போன்ற விபரங்களை தனியானதொரு தாளில் எழுதி கட்டுரையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சகல கட்டுரைகளும் hinducongressjaffna@gmail.com, என்ற மின்னஞ்சலுக்கும் அதன் பிரதி ஒன்றை hinducongress@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும் அனுப்பவேண்டும்

**ஆய்வுக் கட்டுரையின் அமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.**

01. கட்டுரைத் தலைப்பு, அதன் கீழ் கட்டுரையின் சுருக்கம், அதன்பின் முழுமையான கட்டுரையாக இருத்தல் வேண்டும்.
02. அடிக் குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் யாவும் கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.
03. கட்டுரையின் சொல் எண்ணிக்கை பற்றிய மேலெல்லை எதுவுமில்லையாயினும் 3000 - 5000 சொற்களைக் கொண்டிருத்தல் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்

அதேவேளையில் சொற்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவே ஆய்வு அமைதல் வேண்டுமென்று எதிர்பார்க்கப் படவில்லை. சொற்களின் எண்ணிக்கையை விட ஆய்வின் தரமே முக்கியமானது.

**உசாத்துணை விபரங்கள் பற்றிய அறிவுறுத்தல்கள்**

01. ஆசிரியர் பெயர், பிரசுர ஆண்டு (அடைப்புக்குறிக்குள்), நூலின் பெயர் அல்லது கட்டுரையின் தலைப்பு என்பன இடம்பெற வேண்டும்.
02. கட்டுரை வெளிவந்த நூலின் பெயரோ அல்லது ஆய்விதழின் பெயரோ தடித்த எழுத்தில் அமைதல் வேண்டும்.
03. ஆய்விதழாயின் அதனைத் தொகுத்தவர் பெயர் முதலில் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாநாட்டில் உங்களின் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வைரவிழா மலர் அச்சிட்டு வெளியிடப்படுவதுடன் மாநாட்டின் குறிப்பிட்ட அரங்கில் அதனைச் சமர்ப்பிக்கவும் கட்டுரையாளர் களுக்குச் சந்தர்ப்பம் தரப்படும். ஆனால் கட்டுரையினை அச்சந்தர்ப்பத்தில் சுருக்கமாகத் தொட்டுக் காட்டவே வாய்ப்புக் கிடைக்கும். நேர அவகாசம் இருப்பின் ஒவ்வோர் அரங்கின் இறுதி நிகழ்வாக கலந்துரையாடவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். ஆய்வுக் கட்டுரைகளை அனுப்ப விருப்பவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

இந்த முயற்சியில் சகலரினதும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் மாமன்றம் நாடிநிற்கின்றது.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

## யாழ் பணிமனையில் மாமன்றத்தின் அனுசரணையில் நாவலர் சபை நடத்திய நாவலர் விழா (13. 12. 2014)



நல்லூர் ஆதீன முதல்வர் நந்திக் கொடி ஏற்றுகிறார்



பேராசிரியர் இ. குமாரவடிவேல் மங்கள விளக்கேற்றுகிறார்



நல்லூர் ஆதீன முதல்வர் ஆசியுரை



நாவலர் சபை செயலாளர் திரு. தில்லைநடராஜா சிறப்புரை



விரிவுரையாளர் திரு. ச. லலீசன் சிறப்புரை



பேராசிரியர் கலைவாணி இராமநாதன் சிறப்புரை



கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா சிறப்புரை



பேராசிரியர் இ குமாரவடிவேல் பிரதம விருந்தினர் உரை



இந்து ஒளி நாவலர் நினைவுச் சிறப்பிதழ் வெளியீடு





மன்னார் ஞானவைரவர் ஆலய மூலவிக்கிரக மண்டபத்திற்கு திரு. வி. கயிலாசபிள்ளை தம்பதிகள் அடிக்கல் நாட்டிய நிகழ்வின்போது மாமன்ற பொருளாளர் திரு. வே. கந்தசாமி, வைத்திய கலாநிதி முருகேசு கதிர்காமநாதன் மற்றும் தொண்டர்கள்

# மட்டக்களப்பில் நடந்த நாவலர் விழா (06.12.2014)




மாமன்றத் தலைவர் மங்கள விளக்கேற்றுகிறார்



நல்லூர் ஆதீன முதல்வர் நந்திக் கொடி ஏற்றுகிறார்.



மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைத் தலைவர்
திரு. சீ. யோகேஸ்வரன் (பா. உ.) உரையாற்றுகிறார்.



மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்





சபையோர்

## மாமன்றத் தலைமையகத்தில்



01. 01. 2015 அன்று நடந்த பூசையில் மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அருளாசி பெறுகிறார்.



15. 01. 2015 அன்று தைப்பொங்கல் பூசை



தைப்பொங்கல் வழிபாட்டின்போது மாண்புமிகு டி. எம். சுவாமிநாதன் உரையாற்றுகிறார்.









தைப் பொங்கல் பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட பிள்ளைகள்



அப்பியாசப் புத்தகங்கள் அன்பளிப்பு









மாமன்றத்தின் அன்பளிப்பான அப்பியாசப் புத்தகங்களை, மாண்புமிகு டி. எம். சுவாமிநாதன் பிள்ளைகளுக்கு வழங்குகிறார்.

## மாமன்றத்தின் சமூகநலப் பணி















கொஸ்லாந்தை மீரியாபெத்த மண்சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பள்ளிக்கூட மாணவர்களுக்கு சமூக நலன் குழுத் தலைவர் திரு. சி. தனபாலா. குழுச் செயலாளர் திரு. எஸ். நிரோஷன் ஆகியோர் அப்பியாசப் புத்தகங்களை வழங்குகிறார்கள்.

# இந்தச் சுடரில்...


- ❖ பஞ்ச புராணங்கள் 1
- ❖ ஹவாய் சைவ ஆதீன முதல்வர் 3
- ❖ ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 4
- ❖ மகா கும்பாபிஷேக சிறப்பிதழ் 5
- ❖ வாழ்த்துச் செய்திகள் 6
- ❖ காவற் தெய்வமாகப் போற்றப்படும் வைரவக் கடவுள் 7
- ❖ வைரவரும் சிவனும் 8
- ❖ ஈழத்து இந்து மதத்தில் வைரவர் வழிபாடு 10
- ❖ வைரவ மான்மியம் 15
- ❖ திருத்தலங்களில் வைரவப்பெருமானின் மகத்துவம் 20
- ❖ விபுலானந்தர் பக்கம் 25
- ❖ நாட்காட்டி - 2015 26
- ❖ இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் - 2015 27
- ❖ நாவலர் பக்கம் 28
- ❖ யோகர் சுவாமிகள் பக்கம் 30
- ❖ வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்து மதம் 31
- ❖ சிறுவர் ஒளி 33
- ❖ மாணவர் ஒளி 34
- ❖ மன்னார் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் வரலாறும், வளர்ச்சியும் 36
- ❖ அஞ்சலி - இந்துக் குடும்பத்தின் அன்னை 41
- ❖ நாவலர் விழா நிகழ்வுகள் 43
- ❖ மட்டக்களப்பில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா 44
- ❖ முருகனுக்கு உகந்த தைப்பூச நன்னாள். 46
- ❖ அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா மலருக்கு ஆய்வுக்கட்டுரைகள் வேண்டுகோள் 47


**(அமரர்) மூதறிஞர் சிவநெறிச்செல்வர்**
**இரா. மயில்வாகனம் அவர்களது**
**ஆக்கத்தில் உருவான**

# வைரவ மான்மியம்



*அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினர்களுள் ஒருவராகவிருந்தவர் (அமரர்) மூதறிஞர் இரா. மயில்வாகனம் அவர்கள். இவர் எழுதி வெளியிட்ட சமய நூல்களுள் ஒன்று வைரவ மான்மியம்.*

*வைரவப் பெருமானின் மகிமை, வைரவ முகூர்த்தங்கள், வைரவ வழிபாட்டின் சிறப்பு, வைரவ கோயில்கள் மற்றும் வைரவப் பெருமானைப் போற்றும் புராணப் பாடல்கள் போன்ற காத்திரமான பல்வேறு விடயங்களைத் தொகுத்து இந்த நூலை இரா. மயில்வாகனம் அவர்கள் வெளியிட்டுள்ளார்.*




*மன்னார் அருள்மிகு ஞானவைரவர் கோயிலின் மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியாகியுள்ள "இந்து ஒளி" சிறப்பிதழில் பிரசுரிப்பதற்கான பல விடயங்களை வைரவ மான்மியம் நூலிலிருந்து நன்றியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை இந்து மாமன்றம் தெரிவித்துக் கொள்கின்றது.*

# சரஸ்வதி மண்டபத்தில் நடந்த
# நாவலர் விழாவும் நூல்கள் வெளியீடும் (29.11.2014)



பிரதம விருந்தினர் சத்திய வித்தகர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் (வடமாகாண முதலமைச்சர்) உரையாற்றுகிறார்.



நூலாசிரியர்கள், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், மாமன்றத் தலைவர் சகிதம்



நூலாசிரியர் என். கே. எஸ். திருச்செல்வம் அவர்களை வைத்திய கலாநிதி முருகேசு கதிர்காமநாதன் கௌரவிக்கிறார்.



சிவஸ்ரீ ஈஸ்வரக்குருக்கள் அவர்களுக்கு பிரதம விருந்தினர் சிறப்பு மலரை வழங்குகிறார்



பொதுச் செயலாளர் உரை



மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, அவர்களுக்கு பிரதம விருந்தினர் சிறப்பு மலரை வழங்குகிறார்



மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி அவர்களுக்கு பிரதம விருந்தினர் சிறப்பு மலரை வழங்குகிறார்




இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவ மாணவிகள் வழங்கிய உரைச்சித்திர நிகழ்ச்சி



விழாவில் கலந்து கொண்ட பிள்ளைகளுடன் பிரதம விருந்தினர்

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015

## ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நடந்த நாவலர் விழா (06.12.2014)



ஆலையடிவேம்பு இந்து மாமன்ற வளாகத்தில் நாவலர் பெருமான் சிலையை மாமன்றத் தலைவர் திறந்து வைக்கிறார்.

## பரிசுத்த பாப்பரசர் இலங்கை விஜயத்தில் நல்லை ஆதீனம் கௌரவிப்பு



இலங்கைக்கு விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கௌரவிக்கும் நிகழ்வு



நாவலர் இந்து எழுச்சி விழா ஊர்வலம்



மேடையில் திரு. சி. அருளானந்தன் (மாமன்ற உப தலைவர்) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்), திரு. கந்தையா நீலகண்டன் (மாமன்றத் தலைவர்), கலாநிதி மு. கதிர்காமநாதன் (மாமன்றப் பொதுச் செயலாளர்), திரு.சி. தனபாலா (மாமன்ற உப தலைவர்)



கௌரவிப்பு நிகழ்வு





மாமன்றத்தின் வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் குடும்பப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.



நாவலர் இந்து எழுச்சி விழா கலைநிகழ்ச்சி

இவ்விதழ் இல. 488, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13. யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது